# மாகாணக் கல்வித் திணைக்களம்

## வடமாகாணம்

## 2011

க.பொ.த (உ/த) புதிய பாடத்திட்டத்திற்கு
அமைவாக தயாரிக்கப்பட்ட

## வினா-விடைத் தொகுப்பு

# இந்து நாகரிகம், இந்துசமயம், கிறிஸ்தவ நாகரிகம்

வடமாகாணக்கல்வித்திணைக்களம்
மருதனார்மடம்,
யாழ்ப்பாணம்.

# மாகாணக்கல்வித்திணைக்களம்
# வடமாகாணம்
# 2011

க.பொ.த(உ/த) புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாகத் தாயரிக்கப்பட்ட

## வினாவிடைத் தொகுப்பு

# இந்து நாகரிகம், இந்துசமயம்
# கிறிஸ்தவ நாகரிகம்

வடமாகாணக் கல்வித் திணைக்களம்,
மருதனார்மடம்,
யாழ்ப்பாணம்.



## மாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி

புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கு அமைவாக மாற்றியமைக்கப் பட்ட பாடத்திட்டத்தினையும் மதிப்பீட்டுத் திட்டத்தினையும் கருத்திற்கொண்டு க.பொ.த உயர்தர கலைத்துறை மாணவர்கள் இலகுவாகப் புரிந்து கொண்டு எதிர்பார்க்கப்படும் வினாக்களுக்கு விடையளித்து அதியுயர் புள்ளிகளைப் பெறும் வகையில் வினாவிடைத் தொகுப்பு ஒன்று வடமாகாணக் கல்வித் திணைக்கள கல்விப்புலம் சார் ஆளணியினரால் வெளியிடப்படுவதையிட்டு நான் மிகவும் பெருமிதம் அடைகின்றேன்.

இரண்டு வருடங்களாக இரவு பகல் என்று பாராமல் கற்ற பாடப் பரப்பில் மூன்று மணித்தியாலத்தில் விடையளித்து போட்டிப் பரீட்சையில் முன்னணி வகிக்க வேண்டிய, மாணவர்களின் தேவையை நன்குணர்ந்து இச்செயற்பாட்டில் ஈடுபட்ட ஆளணியினரை நான் மிகவும் பாராட்டி வரவேற்கின்றேன்.

கல்விக் கடலின் ஆழமறியாது பயணம் செய்யும் மாணவர் களுக்கு இத்தொகுப்பு நிச்சயமாக ஒரு கலங்கரை விளக்காக அமையும் என்றால் மிகையாகாது.

இத்தொகுப்பு தொடர்ந்து வெளிவர இறைவன் அருள்புரிய வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

வளர்க நும்பணி.

ப.விக்கினேஸ்வரன்
கல்விப்பணிப்பாளர்,
வடமாகாணம்.

# வளவாளர் விபரம்

## இந்து நாகரிகம்

| No | Name | Designation | Name of School |
|---|---|---|---|
| 1. | திருமதி வ. குலராஜா | I.S.A | வலயக்கல்வி அலுவலகம் வவுனியா தெற்கு |
| 2. | திரு.க. ஈஸ்வரன் | ஆசிரியர் | யா/நாவற்குழி ம.வி |
| 3. | திரு.ப. பிரதீசன் | ஆசரியர் | வலயக்கல்வி அலுவலம் கிளிநொச்சி |
| 4. | திரு.சி. சோதிலிங்கம் | பிரதிஅதிபர் | யா/வயவிளான்ம.ம.வி |
| 5. | திரு.ப. திருக்குமார் | ஆசிரியர் | யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி |
| 6. | திருமதி ந.சுதமதி | ஆசிரியர் | யா/சாவமகளிர் கல்லூரி |
| 7. | திருமதி சா. பரமலிங்கம் | ஆசிரியர் | யா/மீசாலை வீரசிங்கம் ம.வி |
| 8. | செல்வி பு. இளையதம்பி | ஆசிரயிர் | யா/யூனியன் கல்லூரி |
| 9. | திருமதி தி.இராஜேஸ்வரன் | ஆசிரியர் | யா/செங்குந்த இ.கல்லூரி |
| 10. | திருமதி சா.மகேந்திரகுமார் | ஆசிரியர் | வ.நெளுக்குளம் கலைமகள்ம.வி |
| 11. | திருமதி ஜெ. திருமூர்த்தி | ஆசிரியர் | யா/யாழ்ற்ரன் கல்லூரி கரைநகர் |
| 12. | செல்வி .ந. சிவதர்ஷினி | ஆசிரியர் | யா/யாழ்ப்பாணக் கல்லூரி |
| 13. | செல்வி ரேவதி .த | ஆசிரியர் | யா/சண்டிலிப்பாய் இ.க |

## இந்து சமயம்

| No | Name | Designation | Name of School |
|---|---|---|---|
| 1. | திரு. செ. சிவஞானம் | ஆசிரியர் | கிளி/கிளிநொச்சி ம.வி |
| 2. | திரு. தி. செல்வமனோகரன் | ஆசிரியர் | கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி |
| 3. | திரு.வே. கமலேஸ்வரன் | ஆசிரியர் | யா/வைத்தீஸ்வராக் கல்லூரி |

## கிறிஸ்தவ நாகரிகம்.

| No | Name | Designation | Name of School |
|---|---|---|---|
| 01. | திருமதி. பயஸ் ரதி பீரிஸ் | I.S.A | வலயக்கல்வி அலுவலகம் , மன்னார். |

வடமாகாணக் கல்வித் திணைக்களம்

கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர்தர)ப் பரீட்சை - 2011

# இந்து நாகரிகம் | 46 | T | I |

## மாதிரி வினாத்தாள்-1

தரம் -13 பகுதி I இரண்டு மணித்தியாலம்

**பகுதி I வினாத்தாள் 50 வினாக்களைக் கொண்டது அனைத்து வினாக்களுக்கும் விடைதருக.**

1.1. வாழ்வியலுக்கு மனதினைப் பண்படுத்தல் பண்பாடு ஆகும். எனக்கூறியவர்.

1. பேராசிரியர் கா.கைலாசநாதக் குருக்கள் 2. பேராசிரியர் சி. பத்மநாதன்
3. ரி. கே. சிதம்பரநாதமுதலியார் 4. பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி
5. பேராசிரியர் ப.கோபாலகிருஸ்ண ஐயர்.

(................)

1.2. நாகரிகம் என்ற சொல் முதன்முதல் இடம் பெறும் தமிழ் நூல்

1. நன்னூல் 2. திருமந்திரம் 3. நற்றிணை
4. திருக்குறள் 5. மணிமேகலை

(................)

1.3. மேற்குப் பஞ்சாப் மாநிலத்தில் காணப்படும் சிந்துவெளிப் பிரதேசம்

1. மொஹஞ்சொதாரே 2. தகஞ்சதாரோ 3. சன்ஹூதாரோ
4. பாகிஸ்தான் 5. ஹரப்பா

(................)

1.4. "ஆம்நாயம்" என்று அழைக்கப்படுவது

1. வேதம் 2. ஆகமம் 3. இதிகாசம்
4. புராணம் 5. தர்மசாஸ்திரம்

(................)

1.5. "பிராமணர்கள் அவனியில் நடமாடும் தெய்வங்கள்" எனக் கூறும் பிராமணம்

1. ஐதரேயம் 2. சதபதம் 3. கோபதம்
4. கௌஷீதகி 5. தைத்திரியம்

(................)

1.6. இருக்குவேதத்தில் பிரபஞ்ச உற்பத்திபற்றிக் கூறும் பகுதி

1. யமசூக்தம் 2. புருஷசூக்தம் 3. வருணசூக்தம்
4. கிருஹயசூக்தம் 5. நாஸதீயசூக்தம்

(................)

1.7. திருவுருவங்களைச் செதுக்குதற்குரிய கருங்கல்லைத் தெரிவு செய்தல் பற்றிக் கூறும் சிவாகமப் பகுதி

1. தாமிர பரீக்ஷணம் 2. சிலாபரிக்ஷணம் 3. பிரகாரலக்ஷணவிதி
4. பிரதிமா லக்ஷணம் 5. கர்ஷணம்

(................)

1.8. மௌரிய அரசவம்சம் பற்றியவிரிவான செய்திகளைக் கூறும் நூல்

1. தர்மசாஸ்திரம் 2. தர்மசூத்திரம் 3. அர்த்தசாஸ்திரம்
4. சிரௌதசூத்திரம் 5. கிருஹ்யசூத்திரம் (................)

1.9 தண்டநாயக்கர், மகாதண்டநாயக்கர் என்ற விருது நாமங்களைச் சூட்டிக்கொண்ட அரசவம்சம்

1. குஷாணவம்சம் 2. மௌரியவம்சம் 3. குப்தவம்சம்

4. சுங்கவம்சம் 5. சாதவாகவம்சம்

(................)

1.10 இந்துசமய பண்பாட்டு மறுமலர்ச்சிக்காலம் என அழைக்கப்படுவது.

1. சங்காலம் 2. வேதகாலம் 3. குஷாணர்காலம்

4. குப்தர்காலம் 5. சாளுக்கியர் ஆட்சிக்காலம்

(................)

1.11 இந்தி மொழியில் இராமாயணத்தை மொழிபெயர்ந்தவர்

1இ கம்பர் 2. வான்மீகி 3. ஒட்டக்கூத்தர்

4. துளசிதாஸர் 5. கபீர்தாஸர்

(................)

1.12. விஷ்ணு புராணங்கள் அடங்கும் தொகுதி

1. கருடபுராணம், நாரதீயபுராணம் 2. பத்மபுராணம், கூர்மபுராணம்

3. மச்சயபுராணம், கருடபுராணம் 4. பதுமபுராணம், நாரதீயபுராணம்

5. நாரதீயபுராணம், பௌடியபுராணம்

(................)

1.13. அரசநீதி பற்றிக்கூறும் தர்ம சஸ்திரப்பகுதி

1. ஆசாரகாண்டம், 2. வியவகாரகாண்டம் 3. பிராயச்சித்தகாண்டம்

4. கர்மகாண்டம் 5. ஞானகாண்டம்

(................)

1.14. இந்துசமயப்பண்பாட்டை வெளிப்படுத்தும் சங்க நூல்கள்

1. நற்றிணை, குறுந்தொகை 2. புறநானூறு, அகநானூறு

3. களவழிநானூறு, பரிபாடல் 4. ஐங்குறுநூறு, புறநானூறு

5. திருமுருகாற்றுப்படை, பரிபாடல் (................)

1.15. குணபரன் என்ற விருதுப் பெயர்கொண்டபல்லவ மன்னன்

1. இராஜசிம்மன் 2. நரசிம்மவர்மன் 3. மகேந்திரவர்மன்

4. பரமேஸ்வர்மன் 5. நந்திவர்மன்

(................)

1.16 சோழர் ஆட்சிக்காலத்தில் மும்முடிச் சோழமண்டலம் என அழைக்கப்பட்ட பிரதேசம்

1. இந்தியா 2. கம்போடியா 3. கங்கைநாடு

4. இலங்கை 5. கடாரம்

(................)

1.17 "விஷ்ணு சித்தீயம்" என்னும் நூலை எழுதிய விஜயநகர மன்னன்

1. அப்பையா தீட்சிதர் 2. கிருஷ்ணதேவராயர் 3. வித்தியாரண்யர்

4. கரிகரர் காளகஸ்தி 5. சாருவநரசிம்மன்

(................)

1.18. வைணவ மரபில் "பரம பாகவதர்கள்" எனத் தம்மை அழைத்துக்கொண்ட மன்னர்கள்.

1. மௌரியர்கள் 2. சாளுக்கியர்கள் 3. சோழர்கள்

4. பல்லவர்கள் 5. குப்தர்கள்

(................)

1.19. "கரகம் கவிழ்த்த காவிரிப் பாவை" என விநாயகரைப் போற்றிய நூல்

1. சிலப்பதிகாரம் 2. திருக்குறள் 3. மணிமேகலை

4. தொல்காப்பியம் 5. திருமுருகாற்றுப்படை

(................)

1.20. இல்லறத்திலிருந்து கொண்டு பக்தி மார்க்கத்தை தன் வாழ்விலும் வாக்கிலும் முதன்முதல் வெளிப்படுத்திய பெண்ணடியார்.

1. காரைக்காலம்மையார் 2. திலகவதியார் 3. ஆண்டாள்

4. மீராபாய் 5. மங்கையற்கரசியார்

(................)

1.21. வைணவ ஆழ்வார்கள் வரிசையில் "நீறு செவ்வே இடக்காணில்...." எனத் தொடங்கும் பாடலில் திருமண் காப்பிடுதல் பற்றிப்பாடிய ஆழ்வார்.

1. நம்மாழ்வார் 2. பெரியாழ்வார் 3. ஆண்டாள்

4. மதுரகவியாழ்வார் 5. குலசேகராழ்வார்

(................)

1.22. இந்து இஸ்லாம் ஒற்றுமையை வலியுறுத்திய வட இந்திய பக்திநெறியாளர்

1. மீராபாய் 2. சைதன்யர் 3. கபீர்தாஸர்

4. துளசிதாஸர் 5. நாமதேவர் (................)

1.23. ஸ்ரீசைதன்யரின் சிடர்கள் அடங்கும் தொகுதி

1. சுரத்கோபால், சாஹிப், குருநானக் 2. சாஹிப், குருநானக், பாலதேவர்

3. பாலதேவர், ஹிரிதாஸ், குருநானக் 4. குருநானக், சாஹிப், சூரத்கோபால்

5. நித்தியானந்தர், பாலதேவர், ஹிரிதாஸ்

(................)

1.24. இருளில் மூழ்கிக் கிடந்த இந்துமதத்திற்கு உரமூட்டிய சீர்திருத்த இயக்கம் என். டி. எஸ். சர்மா குறிப்பிட்ட நிறுவனம்.

1. பிரம்ம சமாஜம் 2. ஆரியசமாஜம் 3. இராமகிருஷ்ணமிஷன்

4. விவேகானந்தசபை 5. சைவவித்தியபிவிருத்திச் சங்கம்

(................)

1.25. "பா தாங்கும் கோயிலும் பொன்மண்டபமும் ...." எனும் பாடலில் திருக்கோணேஸ்வரத் திருத்தலத்தைப் போற்றும்நூல்

1. திருமுறைகள் 2. பெரியபுராணம் 3. கோணாசலபுராணம்

4. தக்ஷிணகைலாசபுராணம் 5. கோயிற்புராணம்

(................)

**சமயப்பணி, தத்துவப்பணி என்பவற்றினூடாக இந்து நாகரிகத்தை வளம்படுத்தியவர் சங்கரர் ஆவார். அவரின் பணிகள் கீழே தரப்படுகின்றன. அவற்றின் துணைகொண்டு 26 - 30 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

A - சண்மத பிரதிஸ்தாபகர் .

B - அத்வைதக் கோட்பாட்டின் தந்தை.

C -சக்தியின் பெருமை கூறும் சௌந்தர்யலகரி இயற்றினார்.

D - வைதிகசமய விற்பன்னரும். விமர்சகரும் ஆவார்.

E - பாரததேசத்தின் நான்கு திசைகளிலும் நான்கு மடங்களை ஸ்தாபித்தவர்

F - விவர்த்த வாத்தின் மூலம் பிரமத்தை நிலைநிறுத்தினார்.

G - மயையின் திறனை விளக்க அநிர்வசினியம் என்ற சொல்லை பிரயோகித்தார்

H - ஜீவன் முத்தியை விதந்து பேசுகிறார்.

**1.26.** சங்கரரின் சமயப் பணிகள் அடங்குவது

| | | |
|---|---|---|
| 1. A, C, D, E | 2. A, B, C, D | 3. B, A, C, F |
| 4. H, G, F, E | 5. E, F, D, A | |

(................)

**1.27.** சங்கரரின் தத்துவப்பணிகள் அடங்கும் தொகுதி

| | | |
|---|---|---|
| 1. A, B, C,G | 2. B, F, G, C | 4. B, F, G, H |
| 4. G, F, E, D | 5. H, G, B, A | |

(................)

**1.28.** சங்கரர் சாக்த உபாசகர் என்பதற்குச் சான்றாவது

| | | |
|---|---|---|
| 1. D | 2. C | 3. A |
| 4. G | 5. H | |

(................)

**1.29.** சங்கரரை மாயாவாதி என எடுத்துக்காட்டுவது

| | | |
|---|---|---|
| 1) A | 2) H | 3) F |
| 4) E | 5) G | |

(................)

**1.30.** பாரத தேசத்தில் இந்து சமயத்தின் தனித்துவத்தை எடுத்துக்காட்டுவன.

| | | |
|---|---|---|
| 1. A, D | 2. E, F | 3. G, H |
| 4. D, E | 5. B, C | |

(................)

**1.31.** பத்திரேஸ்வரம் என்னும் ஆலயம் அமைந்துள்ள தென்கிழக்காசிய நாடு

| | | |
|---|---|---|
| 1. கம்போடியா | 2. ஜாவா | 3. தாய்லாந்து |
| 4. மலேசியா | 5. சம்பா | |

(................)

**1.32.** இராமகவசம் என்னும் பெயரில் இராமாயணம் பாராயணம் செய்யப்படும் இடம்

| | | |
|---|---|---|
| 1. மலேசியா | 2. சம்பா | 3. பாலித்தீவு |
| 4. சுமாத்திரா | 5. போர்ணியோ | |

(................)

1.33. ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாத தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் கதாப்பிரசங்கம் வாயிலாக சமய வரலாற்றைப் பறைசாற்றிய தேசங்கள்.

1. சிங்கப்பூர், தமிழ்நாடு, இலங்கை
2. சிங்கப்பூர், தமிழ்நாடு, மலேசியா
3. மலேசியா, தமிழ்நாடு, கம்போடியா
4. வடநாடு, மலேசியா, சம்பா
5. ஜாவா, சுமாத்திரா, பாலித்தீவு

(................)

1.34. மனிதகுலத்தின் மேம்பாட்டுக்கும் ஆன்மவிடுதலைக்கும் உழைப்பதே குறிக்கோளாகக் கொண்ட நிறுவனம்

1. சைவபரிபாலனசபை
2. சைவவித்தியவிருத்திச் சங்கம்
3. விவேகானந்தசபை
4. இராமகிருஷ்ணமிஷன்
5. இந்துசமயப்பேரவை

(................)

1.35. பிரபோதசைதன்யர் என்னும் பிரமச்சரிய நாமம் சூட்டப்பட்டவர்

1. சுவாமி விபுலானந்தர்
2. ஆறுமுகநாவலர்
3. சுவாமிவிவேகானந்தர்
4. அருணாச்சலதேசிகர்
5. தயானந்த சரஸ்வதி

(................)

1.36. இந்துக்கலை வடிவங்கள் அனைத்தும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை எனக் கூறும் நூல்

1. விஷ்ணுதர்மோத்திரம்
2. சில்பரத்தினம்
3. மானசாரம்
4. மயமதம்
3. சகளாதிகாரம்

(................)

1.37. குடைவரைக்கோவில்கள் அமைந்துள்ள இடங்களாகக் கருதப்படுபவை

1. திருவல்லம், மாமண்டூர், திருச்செந்தூர்
2. திருச்சிராப்பள்ளி, மாமண்டூர், சிதம்பரம்
3. சித்தன்னவாசல், மாமண்டூர், மாமல்லபுரம்
4. மண்டகப்பட்டு, மாமண்டூர், பல்லாவரம்
5. மாமல்லபுரம், மாமண்டூர், மண்டகப்பட்டு

(................)

1.38. "சிற்பங்களால் இழைக்கப்பட்ட ஓரே சோழர் வளாகம்" என வர்ணிக்கப்படும் ஆலயம்

1. தஞ்சைப் பெருங்கோவில்,
2. ஐராவதேஸ்வரம்
4. கங்கைகொண்ட சோழேச்சரம்
4. சிதம்பரம்
5. காஞ்சி கைலாசநாதர் கோவில்

(................)

1.39. திருவுருவங்களில் இடத்துக்கிடம் நகர்த்தக்கூடிய வடிவமாகக்கருதப்படுவது.

1. சாலாசலம்
2. அசலம்
3. சலம்
4. திரிபங்கம்
5. அபங்கம்

(................)

1.40. விக்கிரகம் அமைப்பதற்குரிய மூலப் பொருள்பற்றிக் கூறும் நூல்

1. வாஸ்த்து சாஸ்திரம்
2. மயமதம்
3. சரஸ்வதீயம்
4. விஷ்ணுதர்மோத்திரம்
5. மானசாரம்

(................)

1.41. நடராஜ வடிவத்தில் உயிர்களுக்கு ஏற்படும் துன்பங்களை நீக்கும் அங்கலக்ஷணமாகக் கருதப்படுவது

1. முகம் 2. நெற்றிக்கண் 3. இடப்பாதம்

4. சடாமுடி 5. தூக்கிய திருவடி (................)

1.42. "செங்கணானும் பிரம்மனும்....." எனும் நாவுக்கரசர் பாடலூடாக விளக்கப்படும் சிவமூர்த்தமாகக் கருதப்படுவது.

1. இலிங்கோற்பவர் 2. தக்ஷிணாமூர்த்தி 3. திரிபுராந்தகர்

4. நடராஜர் 5. சந்திரசேகரர் (................)

1.43 "லதா விருக்ஷிகம்" எனும் நடன வடிவம் காணப்படும் பல்லவர் ஆலயம்

1) தஞ்சைப்பெருங்கோவில் 2) சிதம்பரம் 3) காஞ்சி கைலாசநாதர் கோவில்

4) மதுரைமீனாட்சி 5) ஸ்ரீரங்கம் (................)

1.44. கலிங்க தேசத்துக் கோவில்களில் நாட்டிய மாடிய நடனப் பெண்கள் எப் பெயரால் அழைக்கப்பட்டனர்.

1. அபிநயதர்ப்பணம் 2. சிலப்பதிகாரம் 3. கணிகையர்

4. ரிஷபத்தளியிலார் 5. மகரி (................)

1.45. நடனக்கலைக்கு இலக்கணம் கூறும் நூல்

1. அபிநயதர்ப்பணம் 2. சிலப்பதிகாரம் 3. மணிமேகலை

4. நாட்டிய சாஸ்திரம் 5. மானசாரம் (................)

1.46. மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தில் அமைக்கப்பட்டிருக்கின்ற ஓவியக் கலைக் கூடத்திற்கு வழங்கப்படும் வேறு பெயர்

1. மகாமண்டபம் 2. நிருத்தமண்டபம் 3. சித்திரமண்டபம்

4. சபாமண்டபம் 5. தம்பமண்டபம்

(................)

1.47. பெரியகவி எனச் சிறப்பிக்கபடும் குப்தமன்னன்

1. சந்திரகுப்தன் 2. சமுத்திரகுப்தன் 3. புதகுப்தன்

4. ஸ்கந்தகுப்தன் 5. குமாரகுப்தன்

(................)

1.48. பரிவாதினி எனும் வீணை வாசிப்பதில் வல்லவனாக இருந்த பல்லவமன்னன்

1. மகேந்திரவர்மன் 2. இராஜசிம்மன் 3. நரசிம்மன்

4. பரமேஸ்வரவர்மன் 5. நந்திவர்மன் (................)

1.49. பிரமிட்வடிவில் விமானத்தைக் கொண்டிருந்த ஆலயம்

1. மதுரை மீனாட்சி 2. திருவரங்கம் 3. சிதம்பரம்

4. தஞ்சைப்பெரியகோவில் 5. கங்கைகொண்ட சோழபுரம் (................)

1.50 திரிபுராந்தகரின் வடிவமாகக் கருதப்படுபவன்

1. துரோணர் 2. வீஷ்மர் 3. தருமர்

4. கிருபாச்சாரியர் 4. அசுமந்தாமன் (................)

(50x2=100)

வடமாகாணக் கல்வித் திணைக்களம்

கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர்தர)ப் பரீட்சை - 2011

# இந்து நாகரிகம் | 46 | T | II |

மாதிரி வினாத்தாள் - 1

தரம் -13 பகுதி II மூன்று மணித்தியாலம்

* பகுதி "அ" இலிருந்து எவையேனும் இரண்டு வினாக்களையும்

* பகுதி "ஆ" இலிருந்து எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி - "அ"

1) "இந்துப் பண்பாடு தனித்துவமானதும் சிறப்புத்தன்மை வாய்ந்ததுமாகும்" இதனை அடிப்படையாகக் கொண்டு

i. "இந்து நாகரிகம்" "இந்துப்பண்பாடு" என்பவற்றை அறிந்து கொள்வதற்குரிய மூலாதாரங்களைக் குறிப்பிடுக.

ii. "நாகரிகம்" "பண்பாடு" என்பவற்றின் பொருள் விளக்கத்தையும் அவற்றிற்கிடையிலான தொடர்பு களையும் குறிப்பிடுக.

iii. இந்துநாகரிகத்தின் சிறப்பம்சங்களை ஆராய்க.

(4+6+10 = 20)

2) மேல்வருவனவற்றை அடிப்படையாக் கொண்டு சாக்த சமயத்தின் சிறப்பம்சங்களை விளக்குக

i. சாக்த இலக்கியங்கள்

ii. தோற்றமும் வளர்ச்சியும்

iii. வழிபாட்டுமுறையும் விரதங்களும்

3) இலங்கையில் வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே இந்து சமயம் நிலவியது அது காலத்திற்குக் காலம் வளர்ச்சியடைந்து வந்தது"

i. புராதன இலங்கையில் இந்து சமயம் நிலவியதை ஆதாரம் தந்து விளக்குக.

ii. பொலநறுவைக் காலத்தில் இலங்கையில் இந்துசமயம் பெற்றிருந்த சிறப்புக்களை விளக்குக.

(8 + 12 = 20)

4) மேல்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டு இடம் பெயர்ந்த நாடுகளில் இந்து நாகரிகத்தின் செல்வாக்கினை வரையறை செய்க.

i. குடியேற்றம்

ii. ஆலயங்களும் விழாக்களும்

iii. சடங்குகள்

iv. கலைகள்

(3 + 10 + 7 = 20)

## பகுதி - "ஆ"

5) "அன்புநெறி வழிபாட்டில் இறையருள் பெற்றகாலம்" பல்லவர் காலமாகும்.

i. சைவ, வைணவ சமய வளர்ச்சிக்குப் பங்காற்றிய அரசர்களையும் அரசியல் சூழ்நிலைகளையும் விளக்குக.

ii. நாயன்மார்கள், ஆழ்வார்கள் ஆற்றிய சமயப்பணிகளை ஆராய்க?

6) "இந்து தத்துவ மரபில் சங்கரரதும், இராமனுஜரதும் கோட்பாடு தொடர்பாக மேல்வரும் தலைப்புக்களில் ஆராய்க.

i. தத்துவக் கோட்பாட்டை நிறுவப்பயன்படுத்தப்படும் மூலாதாரங்கள்

ii. மூலப்பொருள் பற்றிய கருத்து

iii. உலகம்

iv. ஆன்ம இலட்சியம் நிறைவேற கூறப்படும் வழிமுறைகள்

(3 + 8 + 5 + 4 = 20 )

7) "ஆன்மா பற்றிய சைவசித்தாந்தக் கோட்பாட்டினை மேல்வருவனவற்றின் அடிப்படையில் ஆராய்க.

i. பசுவின் உண்மைத்தன்மை

ii. பசுவின் இயல்புகள்

iii. இறைவனுக்கும், பசுவிற்கும் இடையிலான தொடர்பு

iv. ஆன்ம இலட்சியம் (4 + 4 + 8 + 4 = 20)

8) சோழர்கால கட்டிடக் கலையின் சிறப்பம்சங்களை ஆராய்க. *(20 புள்ளிகள்)*

9) எவையேனும் நான்கிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

i. இராமகிருஷ்ணமிஷன்

ii. அருணகிரிநாதரும் முருகபக்தியும்

iii. இந்து மருத்துவம்

iv. பிரமசூத்திரம்

v. நயினை நாகபூசணியம்மன்

vi. இந்து விழுமியங்கள்

## இந்துநாகரிகம் - மாதிரிவினாத்தாள் - 1
## புள்ளித்திட்டம்
## பகுதி - I,II

### பகுதி I

| | | | | |
|---|---|---|---|---|
| 1.1 3 | 1.11 4 | 1.21 1 | 1.31 5 | 1.41 2 |
| 1.2 4 | 1.12 1 | 1.22 3 | 1.32 3 | 1.42 1 |
| 1.3 5 | 1.13 2 | 1.23 5 | 1.33 2 | 1.43 3 |
| 1.4 1 | 1.14 5 | 1.24 2 | 1.34 4 | 1.44 5 |
| 1.5 2 | 1.15 3 | 1.25 4 | 1.35 1 | 1.45 4 |
| 1.6 5 | 1.16 4 | 1.26 1 | 1.36 1 | 1.46 3 |
| 1.7 2 | 1.17 2 | 1.27 4 | 1.37 4 | 1.47 2 |
| 1.8 3 | 1.18 5 | 1.28 2 | 1.38 2 | 1.48 1 |
| 1.9 1 | 1.19 3 | 1.29 5 | 1.39 3 | 1.49 4 |
| 1.10 4 | 1.20 1 | 1.30 4 | 1.40 5 | 1.50 5 |

### பகுதி - II விடைகள்
### பகுதி - அ

**1)** i. தொல்பொருள் சான்றுகள், இலக்கியங்கள், பிற நாட்டார் குறிப்புகள், நாணயங்கள், கல்வெட்டுக்கள்

ii. பண்பாடு / பண்படுத்தல் / சீர்மைப்படுத்தல்

iii. நாகரிகம் / நகர் + அகம்

நாகரிகம்

புறவயம்,அகவயம் வாய்ந்தது
காலதேச, வர்த்தமானங்களுக்கேற்ப மாறுபடும்
நவீனத்துவம் வாய்ந்தது
இலகுவில் பின்பற்றக்கூடியது

பண்பாடு

அகவயத்தன்மை வாய்ந்தது
உளம் சார்ந்தது
காலதேசவர்த்தமானங்களுக்கேற்ப மாறுபடாது
மரபுவழியானது
பின்பற்றப்படுவது (பரம்பரையாக)

iii.

* வதீகதர்மம், சனாதனதர்மம்
* இறையாற்றலை மேலாகக் கொண்டது
* உலகியலையும், ஆன்மீகத்தையும் இணைக்கும் பண்பு வாய்ந்தது இந்துப் பண்பாடு
* உலகளாவிய மதங்களை ஏற்று மதிக்கும் தன்மை உடையது
* கடமையைச் செய், பலனை எதிர்பாராதே எனும் தொண்டை ஏற்றுக் கொண்டது.
* வாழிவியல், தர்மங்களை வாழ்க்கை விதிகளைக் கொண்டது

2) i 1. சாக்த ஆகமங்கள் (தந்திரங்கள்) 2) வேதம் 3) கேனஉபநிடதம்

4) தேவிபாகவதம், ஸ்ரீசூக்தம், தேவிமகாத்மியம், சௌந்தர்யலகரி, அபிராமியந்தாதி, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், சகலாவல்லிமாலை

ii. சிந்துவெளியிலிருந்து தற்காலம்வரை (வடஇந்தியா, தென்இந்தியா)

iii. மந்திர, தந்திர, யந்திரவழிபாடு

திருவுருவ வழிபாடு

ஆகமம்சார்ந்த, ஆகமம்சாராத வழிபாடு, (கரகம், தீமிதித்தல், பொங்கல், மடை)

விரதங்கள் - நவராத்திரி, வரலட்சுமி, ஆடிப்பூரம், ஆடிச்செவ்வாய், பங்குனித்திங்கள்

3) i. அனுராதபுர இராசதானியின் எழுச்சிக்கு முன்னரான காலப்பகுதி

இலங்கையின் ஆதிக்குடியினரான இயக்கர், நாகர், வழிபாடு, வணக்கம், (சிவவழிபாடு)

நாகர்வழிபாடு - திருக்கேதீஸ்வரம்

பஞ்சஈச்சரங்கள் பற்றிய விளக்கம்

மகாவம்சம், சூழவம்சம் தரும் குறிப்புக்கள்.

மன்னர்களின் பெயர்களின் "சிவ" எனும் சொல் பிற்சேர்க்கை உ-ம்: கிரிகண்டசிவன்

மன்னர்கள் பிராமணர்களைஆதரித்து வந்தனர்.

ii. கி.பி 1017 - 70 இல் இலங்கை சோழ இராட்சியத்தில் ஒருபகுதியானது

இராஜராஜன், இராஜேந்திர சோழன் ஆகியோர் இலங்கை முழுவதையும் தமது ஆட்சியின் கிழ்க் கொண்டுவந்தார்

பொலநறுவை ஜனநாத மங்கலம்

10 சிவன் கோயில், 5 விஷ்ணு கோயில்கள் இருந்தமைக்கான சான்று

அழிந்த ஆலயக்கட்டிடங்கள் மீட்கப்பட்டமை

விக்கிரகங்கள் (நடராஜர், பார்வதி, கணேசன்)

பிராமணக் குடியிருப்புகள், ஈஸ்வரங்கள்

4) i போர், திருமணம், தொழில்வாய்ப்பு, வர்த்தகம், கல்வி,

ii இலண்டன் - 16 இந்துக் கோயில் உ-ம்: விம்பில்டன் ஸ்ரீகணபதி

அவுஸ்ரேலியா -சிட்னி முருகன்

பிரான்ஸ் - 6 இந்துக் கோயில்

ஜேர்மனி - பெரியகணேசர்

சுவிஸ்லாந்து - 13 இந்து ஆலயம்

அமெரிக்கா - நூற்றுக்குமேற்பட்ட ஆலயம்

கனடா - றொனட்டோ ஐந்து இந்துக் கோயில்கள்

விழாக்கள்

ஜேர்மனி - கூட்ட வழிபாடு

சுவிஸ்லாந்து - கூட்டுவழிபாடு, நற்சிந்தனை

கும்பாபிடேகம் - மகோற்சவம், நவராத்திரிவிழா போன்றவை

சடங்குகள்

இந்துக்களின் சடங்குகள்

கலைகள்

இசை, நடனம் போன்ற கலைகளை விளக்குதல், கோயில்கள் கட்டிடம், சிற்பக்கலை போன்றன

## பகுதி - ஆ

5) i. மகேந்திரவர்மன், இராஜசிம்மன், பரமேஸ்வரன், விஷ்ணுகோபவர்மன், போன்ற மன்னர்கள்

(....... 12பேர்)

அரசியல்

ஸ்திரமான அரசியல்

அழியாக்கோயில்கள், சமய எழுச்சியும், மன்னர்கள் மாற்றமும்.

ii. இலக்கியங்கள், தலயாத்திரை, பக்தி, சமூக சமரசம், அற்புதங்கள் செய்தமை இறைநம்பிக்கை மக்களோடு இணைந்தமை, ஆலயத்தை மையமாகவைத்து எழுந்த இலக்கியங்கள், பதிகங்கள் பாடியமை புராணக்கதைகள், இலக்கியங்களுடன் இணைந்தமை

6) i. வேதம்

நாலாயிரம் திவ்விய பிரபந்தம், இதிகாசங்கள், பிரஸ்தான திரயங்கள்

ii.

| சங்கரர் | இராமானுசர் |
|---|---|
| உண்மைப் பொருள் ஒன்று | மூன்று பொருளும் உண்மை |
| விவர்த்த வாதம் (விளக்கம்) | ஈஸ்வரன் தான் மேலானது |
| சகுணப்பிரமம், நிர்க்குணப்பிரமம் | பரிணாமவாதம் (விளக்கம்) |
| | |
| உலகம் | |
| உண்மையில்லை | உண்மையானது |
| கயிறு பாம்பாகத் தெரிதல் | (பரிணாம வாதம்) |
| (விவர்த்தவாதம்) | சரீரசரீரி (விளக்கம்) |
| | |
| ஆன்ம இலட்சியம் | |
| மோட்சநிலையில் ஆன்மாவும் பிரமாவும் ஒன்று | வேறுவேறு, ஸ்ரீவைகுண்டத்தை அடைதல் |
| ஞானம் | பிரபக்தி, தர்மபூதஞானம் |
| கர்மம் | விதேகமுத்தி |
| ஜீவன்முத்தி | |

7) i. பசுவின் உண்மைத்தன்மை

"உளது இலது என்றலில் எனது உடல் ......." என்ற சிவஞானபோத சூத்திரம் (விளக்கம்)

"பதியினைப் போல் பசு அநாதியானது" திருமந்திரம்

ii. பசுவின் இயல்புகள் - அநாதியானது, சிற்றறிவுடையது. சார்ந்தநன் வண்ணமானது. பாசத்தால் கட்டுண்டது. எண்ணற்றது அறிவித்தால் மட்டும் அறியும் இயல்புடைய பொறியின்றி உணராதது வைசித்தாந்த பாடலடிமூலம் விளக்குதல்

iii. தொடர்பு

| பதி | பசு |
|---|---|
| 1) உண்மைப்பொருள் | உண்மைப் பொருள் பல |
| 2) அறிவிக்காமலே அறியும் | அறிவித்தால் மட்டும் அறியும் |
| 3) தானே தனித்துவமாக இயங்கும் | சார்ந்தான் வண்ணமாக இருக்கும் |
| 4) பேரறிவுடையது | சிற்றறிவுடையது |
| 5) சித்துப் பொருள் | சதசத்துப்பொருள் |

6) கன்மம் மறுபிறப்பிற்கும் உட்படாதது — கன்மம் மறுபிறப்பிற்கு ஏற்ப பிறவி எடுக்கும்

7) ஐந்தொழில்களைப் புரிதல் — மூவகை ஆன்மாக்கள், முத்தி - தாடலை

8) மூவகை திருமேனிகள்

iv. ஆன்ம இலட்சியம்

வீடுபேறு - இருவினையொப்பு, மலபரிபாகம், சத்தினி பாதம், தாடலை முத்தி குருலிங்கசங்கமம், நாற்பாதம், தீட்சைவிளக்கப்படுதல் வேண்டும்

8) சோழர்காலக்கட்டிடக்கலை

1) காலப்பகுப்பு - முற்கால சோழர்பாணி, இடைக்காலச் சோழர்பணி, பிற்காலச் சோழர்பணி (விளக்கம்)

2) வளர்ச்சி - ஆலயங்கள், அமைப்புகள், பரிவாரக்கோயில்கள், தஞ்சை , கங்கை கொண்ட சோழேச்சரம் போன்றன குறிப்பிடப்படல் வேண்டும்.

3) பிற்கால சோழர்கலைப்பணி

சிதம்பரம், ஐராவதேஸ்வரம், இவ்வாலயங்கள் தொடர்பான விளக்கம்

4) நாயக்கர்கால வளர்ச்சிக்கு முன்னோடி

9) சிறுகுறிப்பு

i. இராமகிருஷ்ணமிஷன் - தோற்றம், வளர்ச்சி, பணிகள், இன்றைய நிலை,

ii. அருணகிரி நாதரும் முருகவழிபாடும் - வாழ்க்கை வரலாறு, பக்திச்சிறப்பு, நூல்கள்

iii. இந்து மருத்துவம் - ஆயுள்வேதம், சித்த மருத்துவம் என்பவற்றை இந்து நூல்களின் அடிப்படையில் விளக்குதல்

iv. பிரமசூத்திரம் - ஆசிரியர், நூல் அமைப்பு, தோற்றம், சிறப்பு

v. நயினைநாகபூசணி அம்மன் - அமைவிடம் இறைவன், இறைவி, தீர்த்தம், விருட்சம், தலவரலற்றுச் சான்றுகள், விழா,

vi. இந்துவிழுமியம் - விழுமியப் பண்புகள் (அன்பு....)

வடமாகாணக் கல்வித் திணைக்களம்

கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர்தர)ப் பரீட்சை - 2011

# இந்து நாகரிகம் 46 T I

## மாதிரி வினாத்தாள்- 2

தரம் -13 | பகுதி I | இரண்டு மணித்தியாலம்

பகுதி I வினாத்தாள் 50 வினாக்களைக் கொண்டது அனைத்து வினாக்களுக்கும் விடைதருக.

1.1 பிரஸ்தானதிரயத்தில் அடங்கும் நூல்கள்

1. பிரம்மசூத்திரம், பகவத்கீதை, உபநிடதம்
2. வேதம், ஆகமம், உபநிடதம்
3. வேதம், உபநிடதம், மகாபாரதம்
4. இராமாயணம், மகாபாரதம், சிவரகசியம்
5. இருக்கு, யசுர், சாமம்

(..............)

1.2 இந்து தத்துவ சிந்தனைகளுக்கு என்றும் அடிப்படையாக அமைபவை

1) வேதம், ஆகமம், இதிகாசம், புராணங்கள்

2) கடவுள், உயிர், கன்மம், மறுபிறப்பு

3) அத்வைதம், விசிட்டாத்வைதம், துவைதம், சிந்தாந்தம்

4) உபநிடதம், திருமந்திரம், பகவத்கீதை, சிவஞானபோதம்

5) உயிர், கன்மம், இதிகாசம், சித்தாந்தம்

(..............)

1.3. உயர் பிரம்மம் ஒன்றே அதற்கப்பால் ஒன்றுமில்லை எனக் கூறும் உபநிடதம்

1) கடோபநிடதம்

2) தைத்திரீய உபநிடதம்

3) மாண்டூக்கிய உபநிடம்

4) பிரச்சன உபநிடதம்

5) முண்ட கோப நிடதம்

(..............)

1.4 சிவாகமங்கள் 28இல் இன்று பிரதானமானவையாகக் கருதப்படுபவை.

1) சிவபேதம். உருத்திரபேதம்

2) காமிகம், வாதுளம்

3) கிரணம், பௌட்கரம்

4) காமிகம், சிந்தியம்

5) காரணம், விமலம்

(..............)

5. "எல்லாத் தேவரிலும் மேலான தேவர்" என இருக்கு வேதம் குறிப்பிடும் தெய்வம்.

1) இந்திரன்

2) அக்கினி

3) வர்ணன்

4) உருத்திரன்

5) பிரஜாபதி

(..............)

1.6 கடவுட் கோட்பாட்டையும் பிரபஞ்சக் கோட்பாட்டையும் அறிவியல் சிந்தனைகளையும் இணைக்கும் இருக்கு வேதப் பகுதி

1) புருஷசூக்தம் 2) வருணசூக்தம் 3) யமசூக்தம்
4) நாசதீய சூக்தம் 5) தர்மசூக்தம் (..............)

1.7 "வேதம் மரமாகில் ஆகமம் அம்மரத்தில் பழுத்த கனி" எனச் சிறப்பித்தவர்

1) அபிராமிப்பட்டர் 2) தாயுமானவர் 3) இராமலிங்கர்
4) குமரகுருபரர் 5) திருமூலர் (..............)

1.8 சிவாகமங்களில் சைவசித்தாந்தச் செம்பொருளை விளக்கும் பகுதி

1) சரியை 2) யோகம் 3) ஞானம்
4) கிரியை 5) பக்தி (..............)

1.9 பொருத்தமான சீடர்களுக்கே மறைபொருள் தத்துவங்களை உபநிடதங்கள் உணர்த்துவதனால் வழங்கப்படும் பெயர்

1) வேதாந்தம் 2) வேதசிரசு 3) மறைமுடிவு
4) வேதாங்கம் 5) இரகசியம் (..............)

1.10 ஞானமின்றிக் கிரியை செய்ய முடியாது. அதுபோல கிரியா கடமையின்றி ஞானமும் பெற முடியாது என அறிவுறுத்துவன

1) உபநிடதங்கள் 2) திருமந்திரம் 3) ஆகமங்கள்
4) மகாபாரதம் 5) தர்மசாஸ்திரம் (..............)

1.11 சிலந்தி தன்னிடமிருந்து நூலை உருவாக்குவது போல பிரம்மம் தன்னிடமிருந்து உலகை உருவாக்குகின்றது. எனக் கூறும் உபநிடதம்

1) முண்டகோபநிடதம் 2) தைத்திரீய உபநிடதம் 3) கடோப நிடதம்
4) மாண்டூக்கிய உபநிடதம் 5) கேனோப நிடதம் (..............)

1.12 சாரீரக சூத்திரம் என அழைக்கப்படுவது

1) பகவத் கீதை 2) தர்மசூத்திரம் 3) காமசூத்திரம்
4) சிரௌத சூத்திரம் 5) வேதாந்த சூத்திரம் (..............)

1.13 பிரம்ம சூத்திரத்தின் அத்தியாயங்கள் நான்கும் அடங்கும் தொகுதி.

1) ஆசாரம், வியவகாரம், பிராயச்சித்தம், உபதேசம்
2) சரியை, கிரியை, யோகம், ஞானம்
3) சமன்வயம், அவிரோதம், சாதனம், பலம்
4) சங்கிதை, பிராம்மணம், ஆரணியம், உபநிடதம்
5) ஆசாரம், வியவகாரம், சாதனம், பலம் (..............)

1.14 "என்னையே கதியாகக் கொண்டு அன்பு செலுத்துவதன் மூலம் மேலான வீட்டின்பத்தை அடையலாம்"

எனக் கூறும் யோகம்

1) கர்மயோகம் 2) ஞான யோகம் 3) இராஜயோகம்

4) பக்தியோகம் 5) சாங்கியயோகம்

(..............)

1.15 அத்வைதம் என்ற சொல்லுக்கு சங்கரர் கொள்ளும் பொருள்

1) சிறுமை 2) மறுதலை 3) இன்மை

4) அன்மை 5) வேற்றுமை

(..............)

1.16 அத்வைதக் கோட்பாட்டின் திறவுகோலாக அமைவது

1) மாண்டூக்கியக் காரிகை 2) வேதம் 3) மெய்கண்டசாத்திரம்

4) புருடார்தம் 5) திருமந்திரம்

(..............)

1.17 தர்மபூத ஞானத்தை வேதாந்தத்தின் மூலம் நிறுவியவர்

1) சங்கரர் 2) மத்துவர் 3) கௌடபாதர்

4) பாதராயணர் 5) இராமானுஜர்

(..............)

1.18 சீவனுக்கும் ஈஸ்வரனுக்குமிடையிலான பேதத்திற்கு மத்துவர் வழங்கும் பெயர்

1) சட ஈஸ்வரபேதம் 2) சீவ சடபேதம் 3) சீவபரஸ்பரபேதம்

4) சீவஈஸ்வர பேதம் 5) சட பரஸ்பரபேதம்

(..............)

1.19 முத்தியிலும் ஆன்மாக்கள் வேறுபடுவன எனக்கூறிய வேதாந்தி

1) சங்கரர் 2) மத்துவர் 3) இராமானுஜர்

4) நீலகண்டர் 5) கௌடபாதர்

(..............)

1.20 "சிவமாதல் வேதாந்த சித்தாந்தமாகும் நவமான வேதாந்த ஞான சித்தாந்தமே" எனக் கூறும் ஆசிரியரும் நூலும் முறையே அடங்கும் தொகுதி

1) மெய்கண்டதேவர் - சிவஞானபோதம் 2) திருமூலர் - திருமந்திரம்

3) உமாபதி சிவாச்சாரியார் -சிவப்பிரகாசம் 4) மாணிக்கவாசகர் - திருவாசகம்

5) சேக்கிழார் - பெரியபுராணம்

(..............)

1.21 சைவ சித்தாந்தத்தின் முதன்நூல், வழிநூல் எனச்சிறப்பிக்கப்படுவன.

1) வேதம், ஆகமம் 2) திருமுறை, சித்தாந்த சாத்திரங்கள்

3) சிவஞானபோதம், சிவஞான சித்தியார் 4) வேதம், உபநிடதம்

5) மகாபாரதம், புராணம் (..............)

1.22 சுத்தாத்துவித சைவ சித்தாந்தம் என்ற கோட்பாட்டை நிறுவிய சைவ சிந்தாந்தி

1) மெய் கண்ட தேவர் 2) அருணந்தி சிவாசாரியார்

3) மறைஞான சம்பந்தர் 4) உமாபதி சிவாச்சாரியார்

5) திருவியலூர் உய்யவந்த தேவனார்

(..............)

1.23 சிவஞான சித்தியாரின் 10ம் சூத்திரம் விளக்கிச் செல்வன

1) சாதன இயல்வு 2) முத்திப்பயன் 3) சீவர்முத்தர்நிலை

4) பதியிலக்கணம் 5) பெத்த நீக்கப் பயன்

(..............)

1.24 பதின்நான்கு சித்தாந்த சாஸ்திரங்களில் ஞானாசிரியர் பாசநிக்கம் செய்யும் திறன், தசாங்கம், புறச் சமய மறுப்புகள், தத்துவங்கள் உப தேசங்கள் முதலியவற்றை விளக்கிச் செல்லும் நூலாவது

1) திருவருட்பயன் 2) நெஞ்சுவிடு தூது

3) உண்மை நெறி விளக்கம் 4) சிவப்பிரகாசம்

5) வினாவெண்பா

(..............)

1.25 சித்தாந்த சாத்திரங்களில் மிகக்குறைந்த வெண்பாக்களால் அமைந்த நூல் எது? எத்தனை வெண்பாக்களால் அமைந்தது.

1) உண்மை விளக்கம் - 53 2) சிவஞானபோதம்- 81

3) சிவஞானசித்தியார் - 02 4) கொடிக்கவி - 04

5) சிவப்பிரகாசம் - 03

(..............)

**1.26 வேதாந்தத்தெளிவாம் சைவ சித்தாந்தம் என்ற கூற்றுக்கேற்ப தரப்படும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 26-30 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

| | | | |
|---|---|---|---|
| A | - தடத்தம். சொரூபம் | B | - இருவினை ஒப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் |
| C | -அருவம், உருவம், அருவுருவம் | D | - சத்து, சிதசித்து, அசத்து |
| E | - சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் | F | - சலோகம், சாமீபம். சாரூபம், சாயுச்சியம் |
| G | - நவபேதங்கள் | H | - ஆணவம், கன்மம், மாயை |
| I | - சஞ்சிதம் பிராரப்தம் ஆகாமியம் | | |

1.26 பதியாகிய இறைவனின் தனித்துவத்தை விளக்கும் சைவ சித்தாந்தத் தொகுதி

1) A,E,F 2) A,C,D 3) A.B.C

4) A,C,G 5) A,C,H

(..............)

1.27 பசுவாகிய ஆன்மாவின் தனித்துவத்தை விளக்கும் தொகுதி

1) G,I,F 2) E,D,F 3) E,B,F

4) A,B,F 5) C,D,F

(..............)

1.28 பாசத்தோடு தொடர்புடையவை

1) H,I 2) H,G 3) E,F
4) C,D 5) A,C

(..............)

1.29 முப்பொருளின் இயல்புடன் தொடர்புபட்டவை

1) A,C,G 2) C,E,I 3) C,E,F
4) G.H.I 5) C.I.F

(..............)

1.30 பாசங்களால் பீடிக்கப்பட்ட நிலையில் ஆன்மாக்கள் முத்திறப்படும் முறையாவது

1) D 2) C 3) B
4) A 5) E

(..............)

1.31 முருகனருளில் திழைத்த அருணகிரிநாதர் முதற்பாடிய திருப்புகழ் அடியாவது

1) "திருமகள் உலாவிய........" 2) "ஏறுமயில் ஏறிவிளையாடு......."
3) "பாதிமதி நதி போது மணிசடை....." 4) "இறவாமற் பிறவாமல்......."
5) "முத்தைத்தரு பத்தித் திருநகை......"

(..............)

1.32 தமிழகத்தில் சைவசமய வளர்ச்சிக்கும் சைவ சித்தாந்த வளர்ச்சிக்கும் தம்மை அர்ப்பணித்த ஆதீனங்களாகக் கருதப்படுவன.

1) கோவர்த்தனமடம், சிருங்கேரி மடம்
2) திருப்பணந்தாள். குறைக்குடி
3) திருவாவடுதுறை ஆதீனம், தர்மபுர ஆதீனம்
4) நல்லை ஆதீனம், திருஞானசம்பந்தர் ஆதீனம்
5) தருமபுர ஆதீனம், நல்லை ஆதீனம்

(..............)

1.33 இரண்டாம் பக்தி நெறிக்காலம் எனக் கருதப்படுவது

1) விஜயநகர நாயக்கர் காலம் 2) சோழர்காலம்
3) பல்லவர் காலம் 4) சங்க காலம்
5) குப்தர் காலம்

(..............)

1.34 தாயுமானவரை ஆட்கொண்ட குருவாகக் கருதப்படுபவர்

1) மௌன ஞான குருசாமி 2) நரசிம்ம பாரதி
3) கடையிற் சுவாமிகள் 4) பரஞ்சோதி முனிவர்
5) மெய்கண்டார்

(..............)

1.35 "நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே மஞ்சன நீர் பூசை கொள்ள வாராய்" என்ற பாடலைப் பாடியவர்

1) அருணகிரிநாதர் 2) சிவப்பிரகாச சுவாமிகள் 3) இராமானந்தர்
4) தாயுமானவர் 5) குமரகுருபரர்

(..............)

1.36 சைவசமயப்பிரிவில் புராதனர் என அழைக்கப்படும் பிரிவினர்

1) சைவர்
2) வீரசைவர்
3) காபாலிகர்
4) வைணவர்
5) சாக்தர்

(..............)

1.37 முனிவர் என்னும் சிறப்புப் பெயரால் சைவ சமயத்தையும் சித்தாந்தத்தையும் இந்தியாவிலும் ஈழத்திலும் நிலை நிறுத்திய பெரியார்

1) நிலகண்டர்
2) ஆறுமுக நாவலர்
3) ஞானப்பிரகாசர்
4) அகத்தியர்
5) கடையிற் சுவாமி

(..............)

1.38 கிழக்கிலங்கையில் சைவப் பணியையும் சைவசித்தாந்தப் பணியையும் புரிந்த அறிஞர் பெருமக்களாகக் கருதப்படுபவர்கள்

1) சபாபதி நாவலர், ஆறுமுக நாவலர்,
2) காசிவாசி, பண்டிதமணி
3) விபுலானந்தர், விவேகானந்தர்
4) சபாபதி நாவலர், விபுலானந்தர்
5) விபுலானந்தர், அருணாசலதேசிகர்

(..............)

1.39 இந்து சாதனத்தில் “வைதீக சுத்தாத்துவித சைவதித்தாந்த சமயம்” என்ற தலைப்பில் தொடர்கட்டுரை எழுதியவர்.

1) காசிவாசிசெந்திநாதையர்
2) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
3) தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்
4) கச்சிக் கணேசையர்
5) பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

(..............)

1.40 மறுமமைப்பயன் கருதி ஆன்மீக ஈடேற்றத்திற்கு ஆயத்தமாகும் நிலையாகக் கருதப்படுவது

1) வானப்பிரஸ்தம்
2) கிருகஸ்தம்
3) பிரமச்சரியம்
4) சந்நியாசம்
5) மேற்கூறியாவும்

(..............)

1.41 நீதிநூல் வரிசையில் அஷ்டோத்திர நீதிநூல் எனச் சிறப்பித்துக்கூறப்படும் நூல்

1) கொன்றைவேந்தன்
2) ஆத்திசூடி
3) நாலடியார்
4) திருக்குறள்
5) பழமொழிநானூறு

(..............)

1.42. இல்லறத்தில் இருந்துகொண்டே ஞானிகளாக இலங்கியவர்கள்

1) ஸ்ரீராமர், தர்மர், துரோணர்
2) ஸ்ரீராமகிருஷ்ணர், ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா, ஸ்ரீராமர்
3) ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமிவிபுலானந்தர், தாயுமானவர்
4) சுவாமி விவேகானந்தர், சுவாமிவிபுலானந்தர், தாயுமானவர்
5) ஸ்ரீலஸ்ரீஆறுமுக நாவலர், ஸ்ரீராமகிருஷ்ணர், ஸ்ரீராமர் (..............)

1.43 நீதிபரிபாலனம், சமுதாய ஒற்றுமை, முடிசூட்டுதல் முதலியன பற்றி எடுத்தியம்பும் தர்மசாஸ்திரப் பகுதி

1) சுவதர்மம் 2) ஆச்சிரம தர்மம் 3) குலதர்மம்

4) இராஜதர்மம் 5) ஸ்வரதர்மம்

(.............)

1.44 மகாவிரதங்கள் அடங்கும் தொகுதி

1) அகிம்சை, வாய்மை, கள்ளாமை, பிரமச்சாரியம்

2) கொல்லாமை, கள்ளாமை, மதுவிலக்கல், காமமின்மை

3) கொல்லாமை, கள்ளாமை, நடுவுநிலைமை, ஒழுக்கமுடமை

4) அகிம்சை, வாய்மை, புறங்கூறல், அவாவின்மை

5) கள்ளாமை, கொல்லாமை, பிரமச்சாரியம், மதுவிலக்கு

(.............)

1.45 நாட்டார் அறிவியலில் முதன்மை பெறும் மகாவாக்கியமாகக் கருதப்படுவது.

1) ஆலயம் தொழுவது சாலவும் நன்று

2) அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

3) அறஞ்செய்ய விரும்பு

4) முயற்சி திருவினையாக்கும்.

5) ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்.

(.............)

1.46 தண்டநீதிக் கோட்பாட்டின் தோற்றம் பற்றிக் கூறும் நூல்

1) திருக்குறள் 2) அர்த்தசாஸ்திரம் 3) தர்மசாஸ்திரம்

4) மகாபாரதம் 5) இராமாயணம்

(.............)

1.47 பிராஜாபதியின் இருபுத்திரர்கள் எனக் குறிப்பிடப்படும் அரச உறுப்புகள்

1) அரண்மனை, தண்டம் 2) மந்திரி, ஒற்றன் 3) படை, குடி

4) கணா, சபா 5) சபா, சமிதி

(.............)

1.48 பரீட்சித் மன்னன் மனிதரில் தெய்வம் போன்றவன் எனக் கூறும் வேதம்

1) அதர்வம் 2) யசுர் 3) இருக்கு

4) பிரமம் 5) காந்தர்வம் (.............)

1.49 பொருள் முதல்வாத அடிப்படையில் அரசியல் பற்றிக் கூறும் நூல்

1) மநுதர்மசாஸ்திரம் 2) அர்த்தசாஸ்திரம் 3) திருக்குறள்

4) நாலடியார் 5) சுக்கிரநீதி (.............)

1.50 கல்வியில் கரையில்லாத மாநகரம் என அப்பர் தேவாரத்தில் போற்றப்பட்ட தேசம்

1) மதுரை 2) அவந்தி 3) காசி

4) காஞ்சி 5) கன்னோசி (.............)

பகுதி II "அ"

**பகுதி "அ" விலிருந்து எவையேனும் இரண்டு வினாக்களையும், பகுதி "ஆ" விலிருந்து எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிந்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

பகுதி "அ"

1. "இந்துசமயத்தின் மூல இலக்கியம் வேதங்கள் ஆகும்"

   i. வேதம் என்ற சொல்லின் பொருளும் மறு பெயர்களும்

   ii. சமயநெறியும் வழிபாடும்

   iii. தத்துவ சிந்தனைகள்

   iv. சமுதாய நிலை

(4+5+5+6)

2. வட இந்தியாவில் வைணவபக்தி இயக்கம் தோன்றி வளர்ந்த வரலாற்றினை மேல்வருவனவற்றினை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

   i. பக்தி நெறிதோன்றிய காலச்சூழல்

   ii. பக்தி நெறியாளர்களின் பொதுப்பண்புகள்

   iii. வட இந்திய பக்தி நெறியாளரைக் குறிப்பிட்டு துளசிதாஸர் பற்றி விளக்குக.

(4+6+10)

3. மனிதனின் ஆன்மிக வாழ்விற்கு புருடார்த்தக் கோட்பாடு வழிவகுக்கின்றது" இக்கூற்றை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

   i. புருடார்த்தம் என்றால் என்ன?

   ii. அவற்றிற்கிடையிலான தொடர்புகளை விளக்குக.

   iii. ஆன்மிக ஈடேற்றத்திற்குப் புருடார்த்தத்தின் முக்கியத்துவம் (4+8+8)

**4.** காணாபத்தியம் பற்றி மேல் வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

i. பிரமாணநூல்கள்

ii. வழிபாட்டு முறைகள்

iii. பிரதிமாலட்சணம்

iv. சைவசமயத் தொடர்புகள் (4+5+5+6)

பகுதி "ஆ"

**5.** "இந்து தத்துவ சிந்தனையின் ஊற்றுக்கண் உபநிடதம்" என்ற கூற்றை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றிற்கு விடை தருக.

i. உபநிடதங்களின் காலம்

ii. அமைப்பு முறை

iii. பிரமம்

iv. பிற்கால தத்துவ தரிசன வளர்ச்சிக்கு மூலம்

v. ஆன்மீக விடுதலை

(2+3+6+5+4)

**6.** "ஆன்மாவைப் பந்தித்து இருப்பது பாசங்களாகும்"

i. பாசம் என்பதன் பொருளைக் குறிப்பிட்டு அவற்றில் அடங்கும் விடயங்களை தருக.

ii. ஆணவத்தின் இயல்புகளையும், எண்குணங்களையும் விளக்குக.

iii. கன்மம் மறுபிறப்புக் கோட்பாட்டை விளக்குக. (4+8+8=20)

**7.** "நல்லை நகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழ் எங்கே சுருதி எங்கே........" என்ற கூற்றை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

i. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் காலமும் சூழலும்

ii. சமயப்பணி

iii. கல்விப்பணி

iv. சமூகப்பணி (5+5+5+5=20)

8. "இசைக்கலையின் தோற்றம் வளர்ச்சி என்பவற்றைக் குறிப்பிட்டு தற்காலத்தில் அதன் நிலையை ஆராய்க.

(20 புள்ளி)

9. எவையேனும் நான்கிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

i. நடராஜமூர்த்தம்

ii. திருவாசகம்

iii. சைவவித்திய விருத்திச் சங்கம்

iv. நாட்டார் வழக்காற்றில் நம்பிக்கைகள்

v. இந்துக்கல்விப் பாராம்பரியம்

vi. சோதிடவியல் (5+5+5+5=20)

## இந்துநாகரிகம் மாதிரிவினாத்தாள் - 2
## புள்ளித்திட்டம்
## பகுதி - I,II

| | | | | |
|---|---|---|---|---|
| 1.1 1 | 1.11 1 | 1.21 3 | 1.31 5 | 1.41 2 |
| 1.2 2 | 1.12 5 | 1.22 1 | 1.32 3 | 1.42 3 |
| 1.3 4 | 1.13 3 | 1.23 5 | 1.33 1 | 1.43 4 |
| 1.4 3 | 1.14 4 | 1.24 2 | 1.34 1 | 1.44 1 |
| 1.5 2 | 1.15 3 | 1.25 4 | 1.35 4 | 1.45 2 |
| 1.6 2 | 1.16 1 | 1.26 4 | 1.36 2 | 1.46 4 |
| 1.7 4 | 1.17 5 | 1.27 3 | 1.37 3 | 1.47 5 |
| 1.8 3 | 1.18 4 | 1.28 1 | 1.38 5 | 1.48 1 |
| 1.9 5 | 1.19 2 | 1.29 2 | 1.39 1 | 1.49 2 |
| 1.10 1 | 1.20 2 | 1.30 5 | 1.40 1 | 1.50 4 |

## பகுதி II

**1.** i. "வித்" என்ற வினையடி - அறிவு

எழுதாமறை, எழுதாக்கிளவி, அபௌருசேஷம் ஆம்நாயம் - விளக்கம்

ii. இயற்கை வழிபாடு 33 தெய்வங்கள்

மூன்று பிரிவு, யசுர் - யாகம், வேள்வி, நமசிவாய மந்திரம், சதருத்திரியம்

அதர்வவேதம் - மந்திரமுக்கியத்துவம்

சாமம் - இசை

வைதீக நெறி - விளக்கம்

அறுவகைச் சமயத்துடனான தொடர்பு

iii. ஏகம்சத், விப்ரா: பகுதாவதந்தி - மகாவாக்கியம் பிரம்மம், ஆன்மா, பிரபஞ்சம் பற்றிய விளக்கம். நாசதீயசூக்தம், யமசூக்தம், வர்ண சூக்தம், புருஷசூக்தம், ரிதம்

iv. சமுதாயநிலை, வாழ்க்கை முறை, உணவு, தொழில், பழக்கவழக்கம், கல்வி

**2.** i. காலச்சூழல்

☞ சமய உட்பூசல்கள்

☞ அந்நியர்களின் ஆக்கிரமிப்பு

ii. பொதுப்பண்புகள்

- ☞ இறைவன் மீது நம்பிக்கை
- ☞ ஆன்மாக்கள் ஒவ்வொன்றும் தனியானவை
- ☞ பிரபக்தி மார்க்கமூலம் விடுதலை பெறலாம் என்ற நம்பிக்கை
- ☞ இந்தி மொழியில் பாடுதல்
- ☞ நாமசங்கீர்த்தன முறையைப் பின்பற்றுதல்

iii. இராமனந்தர், இராமதாஸர், கபீர்தாஸர், சூர்தாஸர், ஸ்ரீசைதன்யர், நாமதேவர், மீராபாய், துளசிதாஸர். துளசிதாஸர்- வாழ்க்கை வரலாறு, இயற்றிய நூல்கள் கொண்ட பக்தி மார்க்கம், சமய சமுதாயப் பணிகள்.

*3)*

i. புரிந்துகொள்வது அடைந்து கொள்ள வேண்டிய பொருள் உறுதிப்பொருள்.

அறம், பொருள், இன்பம், வீடு (வடமொழியில்- தர்ம, அர்த்த, காம, மோட்ச)

ii, அறவழி நிற்றல் அதன்படி பொருட்சளை சேகரித்தல் (இல்லறம், துறவறம்) (லௌகீகப்பொருள், மெய்ப்பொருள்)

இன்பம் நுகர்தல், வீடுபேறு அடைதல் (சிற்றின்பம், பேரின்பம்)

(பாடல்கள், உதாரணங்களை பொருத்தமாக கையாண்டு எழுதுதல்)

iii. நாற்பொருளையும் சரியாக கடைப்பிடிப்பதன் மூலம் வாழ்வில் வீடு பேற்றை இலகுவாக அடையலாம். என்பதை வலியுறுத்தல்.

**4.** i. ஐதரேயப் பிராமணங்கள்

ஏரம்ப உபநிடதம், கணேச உபநிடதம், புராணங்கள், ஸ்கந்தபுராணம்

மகாபாரதம் - எழுதியமுறை

மணிமேகலை "கரகம் கவிழ்ந்த காவிரிப்பாவை"

நக்கீரர் பாடல், விநாயகர் நான்மணிமாலை

ii. வழிபாடு: அறுகம்புல், தோப்புக்கரணம் இடல், குட்டிக் கும்பிடுதல், தேங்காய் உடைத்தல், மந்திரம்

iii. பிரதிமா லட்சணங்கள் :- திருவுருவமும், ஐந்தொழில் தத்துவமும் 32 திருவுருவங்கள்

சித்தி, புத்தி, வல்லவை

iv. சைவ சமயத் தொடர்பு: -

வைதீக சமயங்கள் எல்லாவற்றிலும் முதன்மையானது.

கிரியைகளின் முக்கியத்துவம்

உறவு நிலைத்தொடர்பு, பிள்ளையார் சுழிஇடல்

சமய தத்துவ இணைவு

**5.** i கி.மு 10-6 வரை

சமண பௌத்தத்திற்கு முற்பட்டது

பிரமாணங்களுக்கு பிற்பட்டது

ii. அமைப்பு முறை

செய்யுள், உரையாடல், பரிசோதனை, வினாவிடை, சாம்பாஷணை, செய்முறை, ஆராய்ச்சி, விவாதம்

iii. பிரமம் - விளக்கம், இருநிலைகள்

உபநிடதங்களில் காணப்படும் உதாரணங்கள் ஊடாக விளக்கப்படுத்தல் வேண்டும்.

iv. வேதாந்தம் - சைவசித்தாந்தம். அறுவகைத் தரிசனம், அடிப்படை

iv. ஆன்மீக விடுதலை - பக்தி, ஞானம், தர்மம், “என்னை இப்பிறவியிலிருந்து இறவாமைக்கு இட்டுச் செல்வாயாக”

**6.** i. ஆன்மாவை பந்தித்து இருப்பவை. ஆணவம், கன்மம், மாயை

ii. 1. இயல்பு: இருள்மலம் , மூலமலம் என்பதன் விளக்கம். அநாதியானது. அளவில்லாத சக்திகளையுடையது. தன்னையும் காட்டாது. தான் பீடித்துள்ள ஆன்மாவையும் காட்டாது. செம்பிற்களிம்பு போல ஆன்மாவை பீடித்துள்ளது.

iii. எண்குணங்கள் - விகற்பம், கற்பம், குரோதம், மோகம், கொலை, அஞர், மதம், நகை.

iv. கன்மம் மறு பிறப்பு - கன்மம் என்பது வினை அல்லது செயல், மனம், வாக்கு, காயம் மூவகை கன்மம் பற்றிய விளக்கம் (சஞ்சிதம், பிராரத்துவம், ஆகாமியம்)
பிறவிக்கு வித்து - இவற்றை சைவசித்தாந்த பாடலடிகள் மூலம் விளக்குதல், தோத்திரப் பாடல்கள் மூலம் விளக்குதல்,

**7.** i. 1822 டிசெம்பர் 18 இல் நல்லூரில் பிறந்தார்

பெற்றோர் பெயர் - குடும்பப்பின்னணி

இளமைக்காலம், மும்மொழிப்புலமை, கிறித்தவ மதச்செல்வாக்கு, அர்ப்பணிப்பு (வாழ்வு)

ii. சமயப்பணி

iii. சமூகப்பணி

iv. கல்விப்பணி

(நூலாக்கம், அச்சியந்திரம், இலவசக்கல்வி, ஆசிரியர், நூலாசிரியர், மொழிபெயர்ப்பு)

8. இசைக்கலையின் தோற்றம், வளர்ச்சியைக் குறிப்பிடுதல்- சிந்துவெளி - தற்காலம் வரை , வட இந்திய, தென்னிந்திய இசைக்கலைபற்றிய விளக்கம்.

9. i. நடராசர் மூர்த்தம் - 64 மூர்த்தம் 25 முக்கிய மூர்த்த தத்துவம் பற்றிய விளக்கம்

ii. திருவாசகம் - இயற்றியவர், நூலமைப்பு அதன் சிறப்பு

iii. காலமும் பின்னணியும்

1923ல் ஆரம்பிக்கப்பட்டது. ஐரோப்பியர் காலத்தில் நலிவுற்ற சைவத்தமிழ் கல்விப் பாரம்பரியத்தைப் பாதுகாத்தல், சேர்.பொன்.இராமநாதன்
இந்துபோட் இராஜரட்ணம் என்பவர்களால் ஆரம்பிக்கப்பட்டது.
பணிகள்: வைசப்பாடசாலை அமைத்தல் - சைவப் பிள்ளைகளின் கல்விக்கு ஊக்கமளித்தல், சைவ ஆசிரியர்களை பயிற்றுவித்தல், சைவப்பண்பாட்டைப் பேணுதல்.

iv . நாட்டார் வழக்காற்றில் நம்பிக்கைகள், பல்லிசொற்பலன், காகம் கரைதல், பூனை, சாரைப்பாம்பு குறுக்கிடல், கனவுப் பலன், கிழமைகள், சகுனம் பார்த்தல், ஏனைய நம்பிக்கைகள்.

v. திண்ணைக்கல்வி, குருகுலக்கல்வி

vi. சோதிடம் (பொருள் விளக்கம்) நாள் கோள்,விதி முறைகள் பஞ்சாங்கம் பற்றிய விளக்கம் (கிரகங்கள், இராசிகள், நட்சத்திரங்கள்)

வடமாகாணக் கல்வித் திணைக்களம்

கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர்தர)ப் பரீட்சை - 2011

# இந்து நாகரிகம் 46 T I

## மாதிரி வினாத்தாள்- 2

தரம் -13 | பகுதி I | இரண்டு மணித்தியாலம்

**பகுதி I வினாத்தாள் 50 வினாக்களைக் கொண்டது அனைத்து வினாக்களுக்கும் விடைதருக.**

1.1 சிந்து வெளிமக்கள் வழிபட்ட தெய்வங்களாவன

1) சிவன், முருகன்
2) சிவன், அக்கினி
3) சிவன், அம்மன்
4) முருகன், இந்திரன்
5) இந்திரன், அம்மன்

(............)

1.2 வேதங்களில் வரும் தேவர்களின் பெயர்கள் அடங்கிய தொகுதி

1) இந்திரன், வருணன், சிவன், முருகன், சாவித்திரி
2) விஸ்ணு, உருத்திரன், சூரியன், கணபதி, துர்க்கை
3) வருணன், மித்திரன், உருத்திரன், சூரியன், அக்கினி
4) அக்கினி, அஸ்வினிதேவர், நாராயணர், கணபதி, முருகன்
5) சிவன், ஐயனார், சூரியன், விஸ்ணு, குமரக்கடவுள்

(............)

1.3 மகாபுராணங்களின் வரிசையில் மார்க்கண்டேய புராணம், லிங்க புராணம் ஆகியவை சிறப்பாகப் போற்றும் தெய்வம்

1) சிவன்
2) விநாயகர்
3) அக்கினி
4) பிரம்மன்
5) விஸ்ணு

(............)

1.4 தந்திரங்கள் என அழைக்கப்படுபவை

1) பாஞ்சராத்திரம்
2) சாக்த ஆகமம்
3) வைகாசனம்
4) சிவாகமங்கள்
5) வைணவ ஆகமங்கள்

(............)

1.5 பஞ்சசித்தாந்தத்தின் ஆசிரியர்

1) பாரவி
2) வராஹமிகிரர்
3) காளிதாஸர்
4) ஆரியப்பட்டர்
5) விருத்தவாகப்பட்டர்

(............)

1.6 சந்திரகுப்தனுடைய நாணயத்தில் பொறிக்கப்பட்ட வடிவம்

1) சிவன்
2) முருகன்
3) விஸ்ணு
4) கணபதி
5) அம்மன்

(............)

1.7 இதிகாச நூலாசிரியர்கள் அடங்கும் தொகுதி

1) வியாசர், வான்மீகி, ஒப்பிலாமணிப்புலவர்

2) கௌடில்யர், காளிதாஸர், வான்மீகி

3) வியாசர், பரத்துவாசர், வசிட்டர்

4) கௌதமர். வியாசர், ஒப்பிலாமணிப்புலவர்

5) பரத்துவாசர், வியாசர், வசிட்டர்

(............)

1.8 சாஸ்திர நூலாகவும், தோத்தி ர நூலாகவும் போற்றப்படும் திருமுறை

1) தேவாரம் 2) திருவாசகம் 3) திருவிசைப்பா

4) திருமந்திரம் 5) திருப்பல்லாண்டு

(............)

1.9 திருவிசைப்பா பாடல்கள் பாடிய ஆசிரியர்களின் பெயர்கள் அடங்கிய தொகுதி

1) சேந்தனார், சம்பந்தர், அருணகிரிநாதர்

2) கருவூர்த் தேவர், சேந்தனார், திருமாளிகைத்தேவர்

3) நம்பியாண்டார்நம்பி, காரைக்காலம்மையார் சுந்தரர்

4) சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர்

5) சேந்தனார், அருணகிரிநாதர், சம்பந்தர்

(............)

1.10 திருமாலின் அவதாரங்களின் பெயர்கள் அடங்கிய தொகுதி

1) மத்ஸய, வாமன, கூர்ம அனந்தசயனர்

2) நாரயணன், கிருஷ்ணன், நரசிங்கன், புத்தர்

3) மகாவிஸ்ணு, கிருஷ்ணர், இராமர், நரநாராயணர்

4) கல்கி, நாராயணர், கிருஷ்ணர், புத்தர்

5) வாமனம், கூர்மம், மத்ஸயம், நரசிங்கம்

(............)

1.11 திருமுருகாற்றுப்படை எனும் இலக்கியத்தின் ஆசிரியர்

1) கபிலர் 2) நக்கீரர் 3) பரணர்

4) சேக்கிழார் 5) வசிட்டர்

(............)

1.12 மகேந்திரவர்மனின் சிவபக்தியைக் காட்டும் சிவதோத்திரம் இடம் பெறும் கல்வெட்டு

1) திருச்சிராப்பள்ளி 2) மகேந்திரவாடி 3) குடுமியாமலை

4) மண்டகப்பட்டு 5) சீயமங்கலம்

(............)

1.13 விஸ்ணுவின் நாமங்களாவன.

1) திருமால், வைத்திநாதன், சங்கரன்

2) உருத்திரன், நாராயணன், வேணியன்

3) நாராயணன், கோபாலன், கோவிந்தன்

4) வைத்தியநாதன், கண்ணன், வேணியன்

5) திருமால், உருத்திரன், ஈஸ்வரன் (............)

1.14 குஷனர் காலத்தில் வைணவஞ் சார்பாக நாணயங்களில் காணப்பட்ட தேவர் வடிவங்கள்

1) திருமால், லட்சுமி, விசிகன் 2) நாராயணன், இலட்சுமி, துர்க்கை

3) இலட்சுமி, விசிகன், திருமால் 4) உருத்திரன், திருமால், விசிகன்

5) இலட்சுமி, திருமால், நாராயணன்

(............)

1.15 வித்தியா விநீதன் என்ற விருதுப் பெயர் கொண்ட பல்லவ மன்னன்

1) 2ம் நரசிம்மன் 2) மாமல்லன் 3) இராசசிம்மன்

4) பரமேஸ்வரவர்மன் 5) நந்திவர்மன்

(............)

1.16 வீரசைவக் கோட்பாடு பற்றி விளக்கும் பிரதான நூல்

1) சிவபுராணம் 2) கூர்மபுராணம் 3) லிங்கபுராணம்

4) மத்ஸயபுராணம் 5) பசவபுராணம்

(............)

1.17 விஜய நகர மன்னர்களில் தமிழ் நாட்டை ஆண்ட மன்னர்களுக்கு வழங்கப்பட்ட மரபுப்பெயர்

1) பௌராணிகர் 2) மண்டலிதர் 3) சூதர்

4) மகாதர் 5) மாவிரதர்

(............)

1.18 தர்மசாஸ்திரங்களின் காண்டங்கள் அடங்கும் தொகுதி

1) வியவகார காண்டம், அசுர காண்டம், தேவ காண்டம்

2) ஆசார காண்டம், வியவகார காண்டம், பிராயச்சித்த காண்டம்

3) யுத்த காண்டம், தேவ காண்டம், ஆசார காண்டம்

4) தேவ காண்டம், வியவகார காண்டம், யுத்த காண்டம்

5) ஆசார காண்டம், பிராயச்சித்த காண்டம், தேவ காண்டம்

(............)

1.19 விநாயகர் மீது ஆளுடைய பிள்ளையார் திருச்சந்த விருத்தம் பாடியவர்

1) நம்பியாண்டார் நம்பி 2) சுந்தரர்

3) சம்பந்தர் 4) திருநாவுக்கரசர்

5) கருவூர்த்தேவர்

(............)

1.20 இந்தியாவின் புதுயுகத்தந்தை, பகுத்தறிவுவாதத்தின் தந்தை எனப் போற்றப்பட்டவர்

1) சுவாமி விவேகானந்தர் 2) தாயானந்த சரஸ்வதி

3) ராஜாராம் மோகனராய் 4) இராமகிருஷ்ணர்

5) விபுலானந்தர்

(............)

1.21 பொலநறுவைக்கால இந்து சமய வளர்ச்சி பற்றி அறியக்கூடிய இலக்கியங்கள்

1) மகாவம்சம், சூளவம்சம், ராஜாவலிய, பூஜாவலிய

2) சூளவம்சம், மகாபுராணம், இதிகாசம், கூர்மபுராணம்

3) ராஜாவலிய, மகாவம்சம், மகாபுராணம், பூஜாவலிய

4) சூளவம்சம், ராஜாவலிய. இதிகாசம், புராணம்

5) பூஜாவலிய, மகாவம்சம், இதிகாசம், புராணம் (............)

1.22 19ம் நூற்றாண்டில் இலங்கையில் சுதேசியவாதத்தில் ஈடுபட்டோர்

1) காசிவாசி செந்திநாதையர், நாவலர், சங்கரபண்டிதர்

2) சிவபாத சுந்தரர், நாவலர், சங்கரபண்டிதர்

3) நாவலர், காசிவாசி செந்திநாதையர், மேலைப்புலோலி நா.கதிரவேற்பிள்ளை

4) காசிவாசி செந்திநாதையர், நாவலர், சிவபாதசுந்தரர்

5) நாவலர், காசிவாசி செந்திநாதையர், சங்கரபண்டிதர்

(............)

1.23 யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை ஆரம்பிக்கப்பட்ட காலம்

1) 1930 2) 1902 3) 1922

4) 1955 5) 1888

(............)

1.24 1935ம் ஆண்டு இலங்கையில் இந்துப்பண்பாட்டு வளர்ச்சிக்காக வெளியிடப்பட்ட பத்திரிகை

1) மெய்கண்டார் நெறி 2) சிவதொண்டன்

3) விவேகானந்தன் 4) சைவக்காவலன்

5) சைவசித்தாந்தம்

(............)

1.25 கனடாவில் சைவம் வளர்க்கும் நிறுவனங்களில் ஒன்றாக அமைவது

1) சிட்னி சைவ மன்றம் 2) வேதாந்த ஞான மன்றம்

3) மெல்போன் இந்து மன்றம் 4) சிவதொண்டன் நிலையம்

5) இராமகிருஷ்ணமிஷன்

(............)

**1.26 இந்தியாவில் இந்து சமய சமூகப் பின்னடைவுகள் ஏற்பட்ட வேளையில் சமூகக் குறைபாடுகளைகளையுமுகமாகத் தோன்றிய நிறுவனங்களே நவீன இந்து சமூக சீர்திருத்த நிறுவனங்களாகும். இக்கருத்தை மையமாகக் கொண்டு 26-29 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

A - ராஜாராம் மோகன் ரோய்

B - நரேந்திரர்

C - பகுத்தறிவு வாத முன்னோடி

D - இந்து மதத்தின் சுய பாதுகாப்பு வடிவம்

E - கதாதர்

F - பிராமணன் என்னும் சஞ்சிகை வெளியிடப்பட்டமை

G - சமூக வாழ்வின் விருத்தியே சமய வளர்ச்சி

H - இராம கிருஷ்ண மடம்

I - வேத நூல்களில் நம்பிக்கை

J - இராம கிருஷ்ண விஜயம்

1.26 பிரம சமாஜத்தோடு தொடர்புபட்டது

1) B, D, E    2) H,B,E    3) J,B,A
4) A,C,F    5) A,H,B

(............)

1.27 ஆரிய சமாஜத்துடன் தொடர்புபட்டது.

1) D,I    2) D,C    3) D, G
4) G, I    5) D,E

(............)

1.28 இராம கிருஷ்ண மடத்தோடு தொடர்புடையது

1) E, B, C    2) E, H, I    3) B, G, J
4) B, D, E    5) D, F, H

(............)

1.29 குரு சீட பரம்பரையுடன் தொடர்புபட்டது

1) G, I, J    2) C, H, J    3) B, C, E
4) A, D, E    5) E, B, H

(............)

1.30 சிவ வடிவங்களுக்குரிய அளவுப்பிரமாணம்

1) பஞ்சதாலம்    2) உத்தம தசதாலம்    3) மத்திம தசதாலம்
4) மத்திம நவதாலம்    5) உத்தம நவதலாம்

(............)

1.31 சிற்ப ரத்தினம் என்ற நுலின் ஆசிரியர்

1) மெய்கண்டதேவர்    2) காளிதாசர்    3) குமரகுருபரர்
4) ஸ்ரீகுமாரர்    5) விஸ்வகர்மா

(............)

1.32 தட்சணாமூர்த்தியிடம் ஞான உபதேசம் பெற்ற முனிவர்கள்

1) சனாதனர். வசிட்டர், வாசுதேவர், அகத்தியர்
2) சனகர். சனாதனர், சனந்தனர், சனற்குமாரர்
3) சனகர், வாசுதேவர், சனந்தனர், சனாதனர்
4) சனாதனர், வசிட்டர், வாசுதேவர், சனந்தனர்
5) வசிட்டர், வாசுதேவர், சனந்தனர், சனகர்

(............)

1.33 இராமானுஜர் தமது தத்துவக் கோட்பாட்டை நிறுவ முன் வைக்கும் வாதங்கள் அடங்கிய தொகுதி

1) பரிணாமவாதம், தத்துவ திரயக்கொள்கை, அப்பிரதக் சித்திக் கொள்கை
2) பிரதிவிம்பவாதம், அவச்சேதவாதம், விவர்த்தவாதம்
3) சற்காரியவாதம், அவச்சேதவாதம், பரிணாமவாதம்
4) விவர்த்தவாதம், பரிணாமவாதம், அப்பிரதக்சித்திக்கொள்கை
5) பரிணாம வாதம், அவச்சேத வாதம், விவர்த்த வாதம்

(............)

1.34 மகாபாரத இதிகாசம் சிறப்பாக வழங்கிவந்த தென் கிழக்காசிய நாடுகளில் ஒன்றாக அமைவது

1) யாவா 2) தாய்லாந்து 3) கம்போடியா
4) சம்பா 5) மலேசியா

(............)

1.35 யோகர் சுவாமிகளின் சீடரான, சிவசுப்பிரமணிய சுவாமிகளால் சிவன்கோயிலும் ஆச்சிரமமும் அமைக்கப்பட்ட நாடு.

1) அவுஸ்ரேலியா 2) சுவிற்சலாந்து 3) நியூசிலாந்து
4) கவாய்தீவு 5) ஜேர்மனி

(............)

1.36 ஆறு அங்கங்களில் ஒன்றாக விளங்குவது

1) கணிதம் 2) மருத்துவம் 3) ஆகமம்
4) வேதாந்தம் 5) சோதிடம்

(............)

1.37 பஞ்சாங்கங்கள் மட்டும் கொண்ட தொகுதி

1) வாரம், கரணம், திதி, நட்சத்திரம், வருடம்
2) வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம்
3) வருடம், நேரம், திதி, நட்சத்திரம், யோகம்
4) கிரகம், யோகம், திதி, கரணம், வருடம்
5) சூரியன், யோகம், திதி, வருடம், நட்சத்திரம்

(............)

1.38 இராசி மண்டலம் எத்தனையாக வகுக்கப்பட்டுள்ளது

1) 15 2) 36 3) 25 4) 12 5) 27

(............)

1.39 19ம் நூற்றாண்டில் இலங்கையில் ஏற்பட்ட சைவசமய மறுமலர்ச்சிக்கு மூலவராக இருந்த சைவசேனாதிபதி

1) ஆறுமுகநாவலர் 2) விபுலானந்தர்
3) கதிரவேற்பிள்ளை 4) விவேகானந்தர்
5) சேர், பொன் இராமநாதன்

(............)

1.40 நீலகண்ட பாஷியத்திற்கு, தமிழ் மொழிபெயர்ப்புச் செய்த ஈழத்துப் பெரியார்

1) அருணாசல தேசிகர் 2) சுவாமி ஞானப்பிரகாசர்
3) காசிவாசி செந்திநாதையர் 4) புலோலி நா.கதிரவேற்பிள்ளை
5) சேர்.பொன்.இராமநாதன்

(............)

1.41 ஈழத்தில் தோன்றிய சோதிட நூல்கள் இரண்டு கொண்ட தொகுதி

1) பிருஹத் ஜாதகம், செகராச சேகரமாலை 2) சரசோதி மாலை, செகராசசேகரம்
3) சரசோதி மாலை, பரராச சேகரம் 4) சரசோதி மாலை, பிரகிருதம்
5) பரராச சேகரம், செகராசசேகரம் (............)

**1.42** இருக்கு வேதத்திலுள்ள "ஔஸதி சூக்தம்" கூறுவது

1) இந்து தத்துவம் 2) இந்து கணிதம் 3) இந்து தர்மம்

4) வர்ண தர்மம் 5) இந்து மருத்துவம்

(............)

**1.43** "இருதய நோயையும், காமாலை நோயையும் போக்க வல்லவன்" எனக் குறிப்பிடும் வேதம்

1) இருக்குவேதம் 2) யசுர்வேதம் 3) சாமவேதம்

4) அதர்வவேதம் 5) பிராமணம்

(............)

**1.44** அரசன் தாய் போல் குடி மக்களைச் சுமக்க வேண்டும் எனக் கூறும் புராணம்

1) அக்கினி புராணம் 2) விஸ்ணு புராணம் 3) பவுடியபுராணம்

4) லிங்கபுராணம் 5) பிரமாண்ட புராணம்

(............)

**1.45** அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாகும் எனக் குறிப்பிடும் நூல்

1) தர்மசாஸ்திரம் 2) மணிமேகலை 3) திருக்குறள்

4) சிலப்பதிகாரம் 5) அர்த்தசாஸ்திரம்

(............)

**1.46** மாணக்கர் குருகுலம் சென்று கல்வி கற்கும் முறைபற்றிக் கூறும் இருக்குவேதப் பகுதி

1) வர்ணசூக்தம் 2) புருஷசூக்தம் 3) பிரம்மச்சாரியசூக்தம்

4) கிருஹய சூக்தம் 5) சிரௌத சூக்தம்

(............)

**1.47** வட இந்தியாவில் இந்துக்கல்வி சிறப்புப் பெற்ற நகரம்

1) நாலந்தா 2) வாரணாசி 3) தட்சசீலம்

4) காஞ்சி 5) சிதம்பரம்

(............)

**1.48** வீர சைவ நெறியைப் பரப்பிய பெண்ணடியார்

1) அக்கமாதேவி 2) பாண்டிமாதேவி 3) திலகவதியார்

4) செம்பியன் மாதேவி 5) வானவன்மாதேவி

(............)

**1.49** அருணசல தேசிகர் இயற்றிய நூலாகக் கருதப்படுவது

1) சைவசமய ஆரம்பபோதினி 2) பாலபோதினி 3) பாலபாடம்

4) சைவபோதம் 5) இலகுசாதகம்

(............)

**1.50** சோழர்கால இலக்கியங்களில் மருத்துவக்கலை பற்றிக் கூறும் நூல்கள்

1) கந்தபுராணம், பெரியபுராணம் 2) சீவக சிந்தாமணி, கம்பராமாயணம்

3) பெரியபுராணம், திருவிளையாடற்புராணம் 4) சீவகசிந்தாமணி, வளையாபதி

4) வளையாபதி, குண்டலகேசி

(............)

வடமாகாணக் கல்வித் திணைக்களம்

கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர்தர)ப் பரீட்சை - 2011

# இந்து நாகரிகம் | 46 | T | II |

மாதிரி வினாத்தாள் - 1

தரம் -13 பகுதி II மூன்று மணித்தியாலம்

**"அ" பகுதியிலிருந்து எவையேனும் 2 வினாக்களுக்கும் "ஆ" பகுதியிலிருந்து எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

## பகுதி "அ"

01. "வைதீக ஒழுகலாறுகளைப் பேணும் வகையில் தோற்றம் பெற்றவை புராணங்களாகும்"

i. புராணம் என்பதன் பொருள் விளக்கமும், காலமும்

ii. பகுப்புமுறையும், பொருள்மரபும்

iii. பிற்கால சமய மரபில் அதன் செல்வாக்கு

iv. முக்கியத்துவம்

(3+8+6+3=20புள்ளி)

02. "கௌமாரம் என்பது அறுவகைச் சமய நெறிகளில் ஒன்றாகும்" இந்நெறி மிகவும் முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது"

i. பிரமாண நூல்கள்

ii. பிரதிமாலட்சணங்கள்

iii. வழிபாட்டு முறைகளும் விரதங்களும்

iv. முருக வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும்

(3+5+5+7=20புள்ளி)

03. "இந்து சமூகக் குறைபாடுகளை களையுமுகமாகத் தோன்றிய நிறுவனங்களே நவீனகால சமூக சிர்திருத்த இயக்கங்களாகும்.

i. நவீன சீர்திருத்த இயக்கங்கள் தோன்றியதற்கான காரணங்கள்

ii. நவீன சீர்திருத்த இயக்கங்களும் அதனை ஸ்தாபித்த சிந்தனையாளர்களும்

iii. பிரம்ம சமாஜத்தின்

பணிகள் என்பவற்றை சுருக்கமாக விளக்குக.

(6+4+10=20புள்ளி)

04. "ஆலயந்தனும் அரன் எனத் தொழுமே...."

i. இலங்கையிலுள்ள பஞ்ச ஈச்சரங்கள், அமைவிடங்கள்

ii. திருக்கேதீஸ்வர ஆலயத்தின் புராதன வரலாறுகள்

iii. இவ்வாலய கிரியைகளும், விழாக்களும்

iv. இவ்வாலயத்தின் மீது எழுந்த நூல்கள், பிரபந்தங்கள் (5x4=20புள்ளி)

பகுதி "ஆ"

05 "வேதாந்த வரலாற்றினை தொடக்கி வைத்தவர் சங்கரர் ஆவார்"

மேல்வரும் தலைப்புக்களில் இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க

i. அத்வைதம் என்பதன் பொருளும், பிரமாண நூல்களும்

ii. அடிப்படைக் கொள்கைகள்

iii. ஆன்ம விடுதலையும், விடுதலைக்கான வழிமுறைகளும்

(5+10+5=20புள்ளிகள்)

06. "ஈழத்தில் சைவசித்தாந்த வளர்ச்சிக்கு அரும்பணி ஆற்றியவர்களில் திருநெல்வேலி ஞானப்பிரகாசமுனிவர் குறிப்பிடத்தக்கவராவர்" இக்கூற்றினை அடிப்படையாகக் கொண்டு விளக்கு.

i. வாழ்க்கை வரலாறு

ii. நூல்கள்

iii. சைவசித்தாந்தப்பணிகள்

(5+5=10புள்ளிகள்)

07. இந்து விக்கரக்கலை வரலாற்றில் நடராஜ மூர்த்தம் பெறும் முக்கியத்துவத்தினை மேல்வருவன வற்றினை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

i. பிரதிமா லட்சணங்கள்

ii. தத்துவக் கருத்துக்கள்

iii. சமயக்கருத்துக்கள்

iv. சிவாலயங்களில் பெறும் முக்கியத்துவம்

(5x4=20புள்ளிகள்)

08. "இந்துக்களின் வாழ்க்கையில் அறவியல் கோட்பாடு பெறும் முக்கியத்துவத்தினை ஆதாரங்களுடன் விளக்குக.

(20 புள்ளிகள்)

09. எவையேனும் நான்கிற்கு சிறு குறிப்பு எழுதுக.

i. இந்திரன்

ii. மீராபாய்

iii. அகில இலங்கை இந்து மன்றம்

iv. குப்தகால இலக்கியங்கள்

v. ஆச்சிரமதர்மம்

vi. பஞ்சாங்கம்

(5x4=20புள்ளிகள்)

## இந்துநாகரிகம் - மாதிரிவினாத்தாள் - 3
## புள்ளித்திட்டம்
## பகுதி - I,II
## பகுதி - I

| | | | | |
|---|---|---|---|---|
| 1.1 3 | 1.11 2 | 1.21 1 | 1.31 4 | 1.41 2 |
| 1.2 3 | 1.12 3 | 1.22 3 | 1.32 2 | 1.42 5 |
| 1.3 1 | 1.13 3 | 1.23 5 | 1.33 1 | 1.43 4 |
| 1.4 2 | 1.14 1 | 1.24 2 | 1.34 3 | 1.44 1 |
| 1.5 4 | 1.15 4 | 1.25 2 | 1.35 4 | 1.45 4 |
| 1.6 5 | 1.16 5 | 1.26 4 | 1.36 5 | 1.46 3 |
| 1.7 1 | 1.17 2 | 1.27 1 | 1.37 2 | 1.47 2 |
| 1.8 4 | 1.18 2 | 1.28 3 | 1.38 4 | 1.48 1 |
| 1.9 2 | 1.19 1 | 1.29 5 | 1.39 1 | 1.49 1 |
| 1.10 5 | 1.20 3 | 1.30 2 | 1.40 3 | 1.50 2 |

## பகுதி II
### அ பகுதி

01. i புராணம் - புராதனம், பழமை வாய்ந்தது
காலம் - குப்தர் காலம் (3 புள்ளி)

ii.

| | | |
|---|---|---|
| சிவபுராணங்கள் | 10 | |
| விஷ்ணு புராணம் | 04 | |
| அக்கினி புராணம் | 01 | - பகுப்பு முறைகள் |
| சூரிய புராணங்கள் | 01 | |
| பிரம புராணங்கள் | 02 | |

பொருள்மரபு

* பஞ்சலட்சணம்
* தசலட்சணம்
* தெய்வங்களின் வரலாறுகள்
* சைவ, வைணவ நெறிகள்
* திருக்கோயில் வழிபாட்டு முறைகள்
    - விரதம், தீர்த்தம், தவம், தலயாத்திரை, தோத்திரம்,
* தெய்வீக பரத்துவம்
    புராண கதைகள்
* பக்தமரபுகள்
* கலை, அரசியல், மரபுகள்

(8 புள்ளிகள்)

iii. * தலபுராங்கள், தமிழ்ப் புராணங்கள் தோன்ற காரணம்

* மகாத்மியங்கள் / மான்மியங்கள் உருவாகுதல்

உ-ம்: புராண படனமரபு கந்த புராண கலாசாரம்

* வடமொழி நாடகம், காவியங்கள் தோன்ற முன்னோடி.

* புராணக் கதைகள் திருமுறைகளிலும், ஆழ்வார் பிரபந்தங்களில் செல்வாக்கு

* சிற்ப ஓவிய நடனக்கலைகளுக்கு கருவாக அமைந்தது.

(6 புள்ளி)

iv. * நண்பர் போல் அறிவுரை வழங்குவது

* கோயில் வழிபாடு, உருவ வழிபாடு

* சமயக் கருத்துக்களை இலகுபடுத்தல், எளிமைப்படுத்தல்

* அறநெறிப் போதனை

* இந்து இலக்கிய மரபிற்கு அடிப்படை

(3புள்ளி)

## 02.

i. குமார தந்திரம். குமார சம்பவம், சுப்பிரமணிய புஜங்கம்

கந்தபுராணம், கந்த சஷ்டி கவசம்

திருமுருகாற்றுப்படை

திருப்புகழ், கந்தரனுபூதி, கந்தரலங்காரம்

திருவகுப்பு

(3 புள்ளி)

ii. * சிவனின் சோதிப் பிழம்பே கருணை கூர் முகங்கள் ஆறுடனும் கரங்கள் பன்னிரண்டும், ஆகியமை

* கேடயம், சேவற்கொடி, அங்குசம், வரத முத்திரை, பாசம். வில், சக்கரம், வஜ்ராயுதம், சக்திவேல் கத்தி, சூலம், அபய முத்திரை - பன்னிருகரங்கள்.

* முருகன் ஏழு பாதாள உலகங்கள் - பாதங்கள்

* சப்த தீவுகள் - கணுக்கால்கள்

* சப்த சமுத்திரங்கள் - இடைவஸ்திரங்கள்

* அட்ட திக்கு - புயங்கள்

* சுவர்க்கலோகம் - சிரசாகவும்

* அக்கினி - 3 கண்கள்

* மேகம் - கேசம்

* நட்சத்திரங்கள் - மலர்கள்

* பரமசிவன் - ஆத்மா

* பார்வதி - புத்திரி

* விஷ்ணு - வாமபாகம்

* பிரமன் - தட்சிண பாகம்

* சரஸ்வதி - வாக்கு

* லட்சுமி - செல்வம் (5 புள்ளி)

iii. * ஆகமம் சார்ந்த ,ஆகமம் சாராத வழிபாட்டு முறை

* வேல் வழிபாடு

* யந்திர வழிபாடு

* மந்திர வழிபாடு

* திருத்தல வழிபாடு

* விரதங்கள் (கந்தசஷ்டி . வெள்ளிக்கிழமை விரதம் ,திருக்கார்த்திகை)

(5 புள்ளி)

iv. சிந்து வெளிக்காலம் தொடக்கம் தற்காலம் வரை (7 புள்ளி)

3) i. காரணங்கள்

* சாதி வேறுபாடுகள்

* உடன் கட்டை ஏறம் பழக்கம்

* பலியிடுதல்

* உருவ வழிபாடு

* பெண் உரிமை மறுக்கப்பட்டமை

* பால்ய விவாகம்

* பல கடவுள் கோட்பாடு (6 புள்ளி )

ii. பிரம சமாஜம் - இராஜாராம் மோகன்ராய்

ஆரிய சமாஜம் - தயானந்த சரஸ்வதி

இராமகிருஷ்ணமிஷன் - விவேகானந்தனர் (4 புள்ளி)

iii. பணிகள்

* சமய ஒருமைப்பாட்டை பேணியமை

* ஆத்மீக சபையை ஸ்தாபித்தமை

* வேதாந்த கவ்வியை பரப்பியமை

* மரபு வழி நம்பிக்கைகளை பகுத்தறிவு ரீதியாக விமர்சித்தமை

* உடன்கட்டை ஏறும் வழக்கத்தை சட்ட மூலம் தடைசெய்தமை

* பெண்ணுரிமையை பாதுகாத்தமை

* பால்ய விவாக முறையை தடுத்தமை

* சிசுக் கொலையை தடுத்தமை

(10 புள்ளிகள்)

04. i.

| | |
|---|---|
| திருக்கேதீச்சரம் | -மன்னார் |
| திருக்கோணேச்சரம் | - திருகோணமலை |
| நகுலேச்சரம் | - யாழ்ப்பாணம் |
| முன்னேச்சரம் | - சிலாபம் |
| சந்திரசேகரேச்சரம் | - தேவேந்திரமுனை/ தெவிநுவர |

(5 புள்ளி)

ii. கேது வழிபட்மட தலம்

இராமர். இராவணன் வழிபட்ட தலம்

மயன் மாதுவட்டா வழிபட்ட தலம்

அருச்சுனன் தீர்த்த யாத்திரை செய்து வழிபட்ட தலம் (5 புள்ளி)

iii. ஆறுகால பூசைகள் நடைபெறுகின்றமை

மகாசிவராத்திரி வழிபாடு

வைகாசி விசாக தினத்தன்று பத்தாவது நாள் தீர்த்தம்

தைப்பூசம், பங்குனி உத்தரம், மார்கழி திருவெம்பாவை (5 புள்ளி)

iv. * தட்சின கைலாச மான்மியம், மாந்தைப்பள்ளு என்பன இவ்வாலய வரலாறு பற்றி கூறுகின்றது.

* திருக்கேதீச்சரத்துக் கௌரி நாயகி பிள்ளைத்தமிழ்
* திருக்கேதீச்சரத்துப் புராணம்
* திருக்கேதீச்சர நாதர் திருப்பதிகம்
* திருக்கேதீச்சர நாதர் கிள்ளை விடு தூது
* திருக்கேதீச்சர நாதர் ஊஞ்சல்

(5 புள்ளி)

ஆ பகுதி

05. i. அத்வைதம் - ஒருமைவாதம் அ+துவைதம்

பிரமமே உண்மையான பொருள். இந்த உலகம் ஒரு தோற்றமே, ஒவ்வொரு ஆன்மாவும் பிரமந்தான்வேறொன்றுமில்லை, பிரமத்தின் இருமையற்றநிலை, உலகத்தின் உண்மையற்ற நிலை, பிரமத்திலிருந்து ஆன்மா வேறுபடாநிலை

(3 புள்ளி)

பிரஸ்தான திரயங்கள்

சங்கருடைய உரைகள், சங்கரமாபாடியம் (3 புள்ளிகள்)

ii. ஒருமை வாதம்

அத்வைத உண்மை

காரணம் உண்மை, காரியம் (பொருள்) பொய்

உ-ம்- கயிறு, பாம்பு

விவர்த்த வாதம்

பிரமம் உண்மை,

பிரமம் உலகமாகத் தோன்றுகிறது

ஆன்மா, ஏகான்மவாதம்

அவச்சேத வாதம்

பிரதிவிம்பவாதம் (10 புள்ளிகள்)

iii. இரண்டு அல்ல, ஒன்று - முத்திநிலையில் ஆன்மா. பிரமம், இரண்டும் ஒன்று
உ-ம் குடவளி - பிரமம் - ஆன்மா)
ஜீவன்முத்தி.

ஞானம், பக்தி, தன்னலமின்மை, நம்பிக்கை, மனஅமைதி, தன்னடக்கம், துறவு, பொறுமை, சிரவணம், மனனம், ஆழ்ந்த தியானம் (4 புள்ளிகள்)

06. i. கி.பி 1625இல் திருநெல்வேலியில் பிறந்தவர் (யாழ்) தந்தை காராளபிள்ளை

ii. சிவஞானசித்தியார் சுபக்கஉரை, தீட்சாலட்சணம். தத்துவ வியாக விபரணம், அவஸ்தாதி நிரூபணம், மகாவாக்கிய சங்கிரணம் (தமிழ் மொழி)

பிரமாணதீபிகை. பிரசாததீபிகை. சிவயோகசாரம்

சிவயோக ரத்திரனம், சித்தாந்தசிகாமணி, பௌஷகராகமவிருத்தி உரை, சிவஞானபோதவிருத்தி உரை, அஞ்ஞான விவேசனம், மாத்திரிகற்பம், சிவாகம அதிமானிய சங்கிரகம் (வடமொழி நூல்கள்)

iii தமிழ், வடமொழி நூல்களுக்கு உரை எழுதியமை

சைவ சித்தாந்த கருத்தை புலப்படுத்தும் நூல்கள் எழுதியமை

வடமொழியில் சைவசித்தாந்த கருத்தை புலப்படுத்தும் நூல்கள் எழுதியமை

ஈழத்துச் சைவ சித்தாந்த வளர்ச்சிக்கு முன்னோடி

ஈழம், இந்தியா, எங்கும் சைவ சைவசித்தாந்த பணி புரிந்தமை. திருப்பணி - சிதம்பரம் - ஞானப்பிரகாசர்குளம், மடம், அன்னதானம், ஆச்சிரமம், கல்வி - ஒழுக்கம்

சிவஞானசித்தியார் அறுவருரையில் இவர் உரை சிறப்பு பெறுகிறது.

07. i. *சிவனது நர்த்தன வடிவம்

*பரத நாட்டிய சாஸ்திரத்தில் 108 வகையான நடனங்கள்

* மூன்று கண்கள், நான்கு தோள்கள், நான்கு கைகள்

*சாந்த குணம். சிவப்பு நிறம். புன்முறுவல் செய்யும் முகம்

* தலையில் கொக்கின் இறகு, கங்கை, சந்திரன், ஊமத்தம் பூ, உடுக்கு

* வலது புற முன்கரம் அயபகரம், பின்கரம் டமரகம் தாங்கியது, இடப்புற முன்கை வீசித் தொங்க விடப்பட்ட நிலையிலும் பின்கரம் அக்கினி ஏந்தியது.

* இடச்செவி திருத்தோடு வலச்செவி மகரகுண்டலம்

* உடல் முழுவதும் வீபூதி தரித்து இருத்தல்

* கழுத்தில் கழுத்தணி. முத்தாரம், பாம்புமாலை, சங்குமாலை, பன்றிப்பல், புலிநகம், மணிகள், ஆமையோடு

* வலப்பாதம் -முயலகன் மேல் ஊன்றி, இடப்பாதம் தூக்கிய நிலையில் உள்ளது.

(5 புள்ளிகள்)

ii. * பஞ்ச கிருத்திய விளக்கம்

* திருவைந்தெழுத்தின் விளக்கம்

* தோற்றம் துடியதனில் ..." உண்மை விளக்கம்

(5 புள்ளி)

iii * உருவ வடிவம்

* யோகம், கூத்து, இசை ஆகிய கலைகள்

* வழிபாடுகள்

(5 புள்ளி)

iv. * நிருத்த மண்டபம் - சிவன் கோயில்களில்

* சிற்ப, ஓவிய, நடன, இசைக்கலைகள்

* குனித்த புருவமும்....." நாவுக்கரசர்

* சிதம்பரத்தில் தில்லைக் கூத்தன்

* இலங்கையில் பொலனறுவையில் அகழ்ந்ததெடுக்கப்பட்ட நடராஜ வடிவம் சிறப்பானது

(5 புள்ளி)

**08.** வேதகாலம் தொடக்கம் தற்காலம் வரையான அறம் பற்றிய சிந்தனைகள், ஆதாரங்கள், விளக்கங்கள் என்பவற்றின் ஊடாக விளக்கம்

**09.** i. இந்திரன் - பகவான், மகவான் 250 பாடல்களில் சிறப்பிக்கபடுதல் (அதிகபாடல்) இஸ்ட தெய்வம் மழைக்குரிய தெய்வம், தோற்றப்பொலிவு

ii. மீராபாய் - வட இந்திய பக்தி நெறியாளர். வைணவ சமயத்தினை வளர்த்த பெண்ணடியார். இசை பஜனை மூலம் வைணவ சமயத்தை வளர்த்தவர்.

நூல்கள் - மிராபஜனை

400 பாடல்கள், கவிஞர், கோகுலராதையாக கொண்டவன்

காலம் கி.பி 16ம் நூற்றாண்டு முற்பகுதி

பிறந்த இடம் - மேர்த்தா

தந்தை - ரணாரத்ன சிங்

கணவர் - போஜ்ராஜ்

1547 இறையடி சேர்ந்தார். பிரபக்தி மார்க்கம்

iii. அகில இலங்கை இந்துமாமன்றம்

அறிமுகம், அமைவிடம், பணிகள், தோற்றம், நோக்கம்

iv. குப்தர்காலத்தில் தோன்றிய இலக்கியங்கள்

குறிப்பிடப்பட்டு இருத்தல் வேண்டும்.

v. ஆச்சிரமதர்மம் - பிரம்மச்சாரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்தியாசம், பற்றிய விளக்கம்

(மாணவ, இல்லற, காட்டுக்குச் செல்லும் நிலை, முழுத்துறவு)

vi. 5 அங்கங்களை கொண்டது (விளக்கம்)

திருக்கணிதம், வாக்கியபஞ்சாங்கம்

பயன்பாடு

(வாரம், திதி, கரணம், யோகம், நட்சத்திரம்)

வடமாகாணக் கல்வித் திணைக்களம்

கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர்தர)ப் பரீட்சை - 2011

# இந்து நாகரிகம் | 46 | T | I |

## மாதிரி வினாத்தாள்- 4

தரம் -13 பகுதி I இரண்டு மணித்தியாலம்

**பகுதி - 1 வினாத்தாள் 50 வினாக்களைக் கொண்டது அனைத்து வினாக்களுக்கும் விடைதருக.**

1.1 குப்த மன்னர்களின் ஆட்சிப் பெருமையினையும் இந்து சமயத் தொடர்பினையும் வெளிப்படுத்தும் வடமொழிக் காப்பியம்

1) முத்திராட்சம் 2) அர்த்த சாஸ்திரம் 3) சுக்கிர நீதி
4) சகுந்தலம் 5) விக்கிரமோர்வசியம்

(...........)

1.2 பண்டித சோழேஸ்வரம் பற்றிச் சிறப்பாகக் குறிப்பிடும் கல்வெட்டு

1) மண்டகப்பட்டு 2) குருநாகல் 3) மெடிரிகிரியா
4) சித்தன்ன வாசல் 5) நிலாவெளி

(...........)

1.3 மந்திரம், உற்சவம். நித்திய, நைமித்திய, காமியக்கிகைகள் சிவசின்னங்களை அணியும் முறை என்பன பற்றி எடுத்தியம்பும் பாதம்

1) யோகாபாதம் 2) ஞானாபாதம் 3) சரியாபாதம்
4) வித்யாபாதம் 5) கிரியாபாதம்

(...........)

1.4 குஷாணர் காலத்தில் உன்னதமான முறையிலே வளம்படுத்தப்பட்ட கலையாகக் காணப்பட்டது.

1) குப்தர்கலை 2) காந்தாரக்கலை 3) கனிஷ்கன் கலை
4) சாதவாகனர் கலை 5) குடபோகம்

(...........)

1.5 தெய்வீக அம்சம் பொருந்திய குப்த மன்னர்களுக்கு வழங்கப்பட்ட பெயராக அமைவது

1) சங்கீர்ணசாதி 2) திருநீற்றுச் சோழன் 3) வாத்தியவித்தியாதரன்
4) தேவஸ்ரீமகா ராஜாதிராஜன் 5) சித்திரகாரப்புலி

(...........)

1.6 குப்த அரச வரலாறு பற்றிக் கூறும் புராணங்களாகக் கருதப்படுவன.

1) வாயுபுராணம், லிங்கபுராணம் 2) விஷ்ணுபுராணம், வாயுபுராணம்
3) மச்சபுராணம், லிங்க புராணம் 4) வாயுபுராணம், மச்சபுராணம்
5) விஷ்ணுபுராணம், சிவபுராணம்

(...........)

1.7 காப்பிய அமைப்புக் கொண்ட சைவ இலக்கியங்கள் அடங்கிய தொகுதி

1) சிலப்பதிகாரம், மணிமேகலை 2) பெரியபுராணம், கந்தபுராணம்
3) பெரியபுராணம், சிலப்பதிகாரம் 4) கந்தபுராணம், மணிமேகலை
5) கந்தபுராணம், சிலப்பதிகாரம்

(...........)

1.8 சுமாத்திராவில் இந்துமன்னர்கள் குடியேறிய ஆதிவாசிகளை சீர்திருத்திய காலம்

1) கி.பி 10 2) கி.பி 12 3) கி.பி 6
4) கி.பி 21 5) கி.பி 3

(...........)

1.9 பிராமணிய வழிபாட்டையும் நாட்டார் வழிபாட்டையும் இணைத்துக் கூறும் நூலாகக் கருதப்படுவது.

1) சிறுபாணற்றுப்படை 2) பெரும்பாணாற்றுபடை 3) திருமுருகாற்றுப்படை
4) பரிபாடல் 5) புறநானூறு

(...........)

1.10 விஷ்ணுவின் ஐந்து வடிவங்கள் அடங்கும் தொகுதி

1) பரம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை
2) விபவம், பரம்பொருள், பிரதிமை, அந்தர்யாமித்துவம், வியூகம்
3) பரம், வியூகம், விக்கிரகம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை
4) வியூகம், விம்பம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை
5) பரம், வியூகம், கர்ப்பம், விபவம், அந்தர்யாமித்துவம்

(...........)

1.11 மனம், வாக்கு என்பவற்றுக்கும் அவற்றைக் கடந்த நிலைக்கும் உரியவர் என்பதனால் விநாயகருக்க வழங்கப்படும் பெயர்.

1) கணேசன் 2) கணபதி 3) லம்போதரர்
4) வகிரதுண்டர் 5) மூசுஷிக வாகனர்

(...........)

1.12 பொலநறுவைக்காலத்தில் 2ம் சிவாலயத்திற்கு வழங்கப்பட்ட பெயர்

1) இராஜராஜேஸ்வரம் 2) தம்புலேஸ்வரம் 3) வானவன் மாதேவீஸ்வரம்
4) பிரகதீஸ்வரம் 5) சோழேஸ்வரம்

(...........)

1.13 "பிரபோத சைதன்யர்" என்னும் பிரமச்சரிய நாமம் சூட்டப்பட்டவர்

1) விபுலானந்தர் 2) இராமகிருஷ்ணர் 3) சேர். பொன். இராமநாதன்
4) சுவாமி ஞானப்பிரகாசர் 5) விவேகானந்தர்

(...........)

1.14 கீதகோவிந்தடீகா, ராககோவிந், ருக்மணி மங்களம் ஆகிய பக்தி நூல்களை உருவாக்கிய வடநாட்டுப் பக்திநெறியாளர்

1) கபீர்தாசர் 2) மீராபாய் 3) இராமானந்தர்
4) துளசிதாசர் 5) சைதன்யர்

(...........)

1.15 வடநாட்டுப் பக்தி நெறியாளரான ஸ்ரீசைதன்யர் வாழ்ந்த காலம்

1) கி.பி 1469 1538 2) கி.பி 1479 1531 3) கி.பி 1602 1616
4) கி.பி 1485 1534 5) கி.பி 1515 -1560

(...........)

1.16 சுத்தி என்ற சடங்கின் மூலம் மதம் மாற்றப்பட்ட இந்துக்களை மீண்டும் இந்து மதத்தைக் கடைப்பிடிக்க வழி செய்த பெருமைக்குரியவர்

1) இராஜாராம்மோகன்ராய் 2) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் 3) இராமகிருஷ்ணபரமஹம்சர்
4) தயானந்த சரஸ்வதி 5) அன்னி பெசன்ற் அம்மையார்

(...........)

1.17 சுவாமி விவேகானந்தர் அமெரிக்கா சிக்காக்கோ இந்து மாநாட்டில் கலந்து கொண்ட ஆண்டு

1) 1895 2) 1893 3) 1897 4) 1899 5) 1901

(...........)

1.18 சம்பாவில் ஆட்சி செய்த ஸ்ரீ பரமேஸ்வர மகாதேவ ஈஸ்வர மூர்த்தியின் காலம்

1) 1100 -1110 2) 1140 - 1150 3) 1080 - 1090
4) 1120 - 1130 5) 1050 -1060

(...........)

1.19 ஜயம் கொண்ட சாலமேக சதுர்வேதி மங்கலம்பற்றிக் கூறும் கல் வெட்டுச் சான்று

1) பதவியா கல்வெட்டு 2) மண்டகப்பட்டு 3) மிகிந்தலை கல்வெட்டு
4) சித்தன்னவாசல் 5) தாராமங்கலம்

(...........)

1.20 விஜயகாலிங்க மன்னனின் சமயப்பணிபற்றிக் கூறும் நூலாகக் கருதத்தக்கது
1) யாழ்ப்பாண வைபவ மாலை 2) கைலாய மாலை 3) செகராசசேகரம்
4) திருவிளையாடற்பராணம் 5) இரகுவம்சம்
(...........)

1.21 சைவசித்தாந்தம் என்னும் தலைப்பில் ஜேர்மன் மொழியில் நூலை உருவாக்கியவர்
1) எச். டபிள்யூ. சோமறஸ் 2) அலெக்ஸ் ரெயர் மக்கிளஷன்
3) வீரமாமுனிவர் 4) ஜி. யு. போப்
5) சுவாமி தந்திரதேவ
(...........)

1.22 ஐரோப்பியர் காலத்தில் நலிவுற்றிருந்த சைவத் தமிழ்க் கல்விப் பாரம்பரியத்தை பேணிப் பாது காத்த சமய நிறுவனமாகக் கருதப்படுவது
1) சைவபரிபாலன சபை 2) ஆறுமுகநாவலர் சபை 3) சைவவித்திய விருத்திச் சங்கம்
4) கொழும்பு விவேகானந்த சபை 5) இராமகிருஷ்ணன்மிஷன்
(...........)

1.23 இனிய வாழ்வில்லம், கொக்கட்டிச் சோலை கதிரொளி சிறுவர் இல்லம், நல்லை ஆதீன மகா ஸ்ரீ வித்தியா பீடம் முதலிய நிறுவனங்களுக்கு நிதி வளம் வழங்கி வளம்படுத்திச் செல்வது
1) இந்து சமயப்பேரவை 2) ஆரிய சமாஜம்
3) சைவபரிபாலன சபை 4) சைவப் புலவர் சங்கம்
5) அகில இலங்கை இந்து மாமன்றம்
(...........)

1.24 பத்மதலம் கால், வரி, கலசம், இதழ், பலகை, போதிகை என்னும் அழகிய வேலைப்பாடுகளை கொண்டமைந்து காணப்படும் ஈழத்துத் திருத்தலம்
1) திருக்கேதீஸ்வரம் 2) 1 ம் சிவாலயம் 3) 2 ம் சிவாலயம்
4) திருகோணேஸ்வரம் 5) முனீஸ்வரம்
(...........)

1.25 1920 ல் இலண்டன் **Bsc** விஞ்ஞானமானிப் பரீட்சையில் சித்தியெய்தி இந்து சமயப் பணிசெய்த பெரியார்
1) ஸ்ரீல ஸ்ரீஆறுமுகநாவலர் 2) சேர் பொன் இராமநாதன்
3) இந்துபோட் இராஜரட்ணம் 4) விபுலானந்தர்
5) காசிவாசி செந்திநாதையர்
(...........)

**இந்த நுண்கலைகள் ஒன்றுடன் ஒன்று நெருக்கமான தொடர்புடையவை - (விஷ்ணுதர்மோத்திரம்) என்ற கருத்தை மையமாகக் கொண்டு 26 - 30 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

A - குடைவரைக் கோவில்கள்
B - மலைதளிகள்
C - அசல வடிவம்
D - விமானம்
E - எல்லோரா
F - அமைதித்தோற்றம்
G - ஸ்ரீ வைண மாணிக்கத்தார்
H - சித்தன்னவாசல்
I - சுற்றுமாளிகைகள்
J - தலைக்கோலி

1.26 நடனக் கலையுடன் தொடர்புறுபவை
1) JA 2) G, J 3) G,C 4) J.B 5) G,F
(...........)

1.27 பல்லவர் கட்டிடங்களுடன் தொடர்புறுபவை
1) B,C 2) A,C 3) B ,A 4) A,F 5) A, E
(...........)

1.28 சிற்ப வடிவங்களாக கொள்ளப்படுபவை
1) C,A 2) C,E 3) C,F 4) A,F 5) FE
(...........)

1.29 சோழர்காலக் கலை வரலாற்றுடன் தொடர்புபடக்கூடியவை
1) D,A 2) I,A 3) I ,C 4) D,C 5) I, D
(...........)

1.30 ஓவியங்களுடன் தொடர்புடைய இடங்களாவன
1) E,F 2) E,C 3) H,C 4) E,H 5) H,A
(...........)

1.31 "ஒளியுடைய ஞானத்தைத்தருவது" என்ற கருத்தைத் தருவது
1) ஜ்யோதிஷம் 2) சிட்சை 3) வியாகரணம்
4) நிருத்தம் 5) சந்தோவிசிதி
(...........)

1.32 பிதாமஹக் கோட்பாடு வருடத்தில் எத்தனை நாட்களைக் கொண்டது
1) 366 2) 365 3) 364
4) 365¼ 5) 360
(...........)

1.33 பஞ்ச சித்தாந்திகா என்ற நூலின் ஆசிரியர்
1) ஆரியபட்டர் 2) காளிதாஸர் 3) அரசகேசரி
4) செகராஜசேகரன் 5) வராகமிஹிரர்
(...........)

1.34 எண்களை தசம முறைப்படி எழுதும்முறையைக் கூறும் வேதப்பகுதிகள்
1) காடகசங்கிதை, பிருஹத்சங்கிதை 2) தைத்திரிய சங்கிதை, ஐதரேய சங்கிதை
3) ஐதரேய சங்கிதை, கடக சங்கிதை 4) தைத்திரிய சங்கிதை ,வாஜசனேய சங்கிதை
5) காடகசங்கிதை, தைத்திரிய சங்கிதை
(...........)

1.35 நாவுக்கரசரின் பாடல்களில் எண்கணித முறைமையின் தனித்துவத்தை எடுத்தியம்பும் நூற்பகுதி
1) திருத்தாண்டகம் 2) திருநெடுந்தாண்டகம் 3) திருக்குறுந்தொகை
4) திருவெழுக் கூற்றிருக்கை 4) குறுந்தாண்டகம்
(...........)

1.36 இந்துக்களின் சமய வாழ்விற்கும் சமய லட்சியங்களை அடைதற்குமான சாஸ்திரங்களாகக் கருதப்படுபவை
1) விஞ்ஞானம், சோதிடம் 2) வானியல், சோதிடம் 3) கணிதம், வானியல்
4) சோதிடம், கணிதம் 5) கணிதம், விஞ்ஞானம்
(...........)

1.37 கிறிஸ்து சகாப்தத்தின் ஆரம்பத்தில் புராண அமைப்பில் தேன்றிய சோதிட நூல்
1) கார்கி சம்ஹிதை 2) பிருஹத்சம்ஹிதை
3) மகா நாராயணீய சம்ஹிதை 4) பரகிருதம் 5) இலகுசாதகம்
(...........)

1.38 சந்தான தீபிகை எனும் நூலில் இராமலிங்க முனிவரால் வெளிப்படுத்தப்படும் விடயம்
1) கல்வி விருத்தி 2) செல்வ விருத்தி 3) மனையடி சாத்திரம்
4) சந்தான விருத்தி 5) இரேகா சாஸ்திரம்
(...........)

1.39 சந்தானமணி என்னும் சோதிட நூலின் ஆசிரியர்
1) வராகமிஹிரர் 2) ஆரியபட்டர் 3) அருணாசல சோதிடர்
4) பராசரர் 5) சபாபதிசோதிடர்
(...........)

1.40 மனித உடற் கூற்றியல் குருதிச் சுற்றோட்டம் என்பன தொடர்பான துல்லியமான சிந்தனைகளை வெளிப்படுத்தும் வேதம்
1) இருக்கு 2) யசுர் 3) சாமம்
4) திரையீவித்யா 5) அதர்வணம்
(...........)

1.41 இருக்கு வேதத்திலுள்ள ஔஷதி சூக்தம் குறிப்பிடும் திரிதாதுவினுள் இடம் பெறுபவை
1) பித்தம், கபம், வாக்கு 2) வாதம், காயம், மனம்
3) மனம், வாக்கு, காயம் 4) வாதம், பித்தம், கபம்
5) மனம், புத்தி, சித்தம்
(...........)

1.42 அதர்வண வேதத்தில் மருத்துவ சிந்தனைகள் அடங்கிய சூக்தங்களாவன.
1) பேஷஜானி, ஆயுஸ்ஜானி 2) அபிசாரணி, பௌஷடிகாணி
3) புருஷசூக்தம், ஆயுஸ்ய சூக்தம் 4) நாரதீயசூக்தம், புருஷ சூக்தம்
5) பேஷஜானி, அபிசாரணி
(...........)

1.43 இராமாயண இதிகாசத்தில் இராமலட்சுமணர் உயிர்காக்க ஆஞ்சனேயரால் கொண்டு வரப்பட்ட மலை
1) இமயமலை 2) சஞ்சீவி மலை 3) பொதியமலை
4) சுவாமிமலை 5) மருதமலை
(...........)

1.44 சங்கமருவியகால இலக்கியங்களில் மருத்துவ சிந்தனைகளை உள்ளடக்கிய நூல்களாகக் கருதத்தக்கன.
1) திருக்குறள், நாலடியார், ஏலாதி 2) திருக்குறள், திரிகடுகம், ஏலாதி
3) திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம் 4) திரிகடுகம், ஏலாதி, சிலம்பு
5) ஐங்குறுநூல், இன்னா நாற்பது, இனியவை நாற்பது
(...........)

1.45 அரசன் தனது வருவாயில் அரைப்பங்கினை பாதுகாப்புச் செலவுகளுக்கு ஒதுக்க வேண்டும் எனக் கூறும் நூல்
1) அர்த்த சாஸ்திரம் 2) தர்மசாஸ்திரம் 3) சுக்கிரநீதி
4) நீதிசாரம் 5) காமாண்டக நீதிசாரம்
(...........)

1.46 தென்னிந்தியாவில் வைதீகக்கல்வி மரபை வளர்த்துச் செல்வதில் முதல் நிலைப் பட்டதான சமய நிறுவனம்
1) தருமபுர ஆதீனம் 2) திருவாவடுதுறை ஆதீனம் 3) திருப்பணந்தாள் ஆதீனம்
4) நல்லை ஆதீனம் 5) திருஞானசம்பந்தர் ஆதீனம்
(...........)

1.47 வள்ளிக்கூத்து, களநிலைக்கூத்து என்பன பற்றி குறிப்பிடும் சங்க இலக்கியம்
1) நற்றிணை 2) தொல்காப்பியம் 3) மலைபடுகடாம்
4) குறுந்தொகை 5) பரிபாடல்
(...........)

1.48 தனிமனித வாழ்வியலும் குடும்ப வாழ்வியலும் ஆன்மிக இலட்சியமாக அமைந்து கொள்வது
1) சமூக நோக்கம் 2) அரசநோக்கம் 3) பொருளாதாரநோக்கம்
4) தொழில்சார் நோக்கம் 5) தனியாள் நோக்கம்
(...........)

1.49 குருகுல வாசமும் குருகுலக்கல்வியும் ஆரம்பமாகும் காலமாகக் கொள்ளப்படுவது
1) அவணி மாத பூர்வபட்சம் 2) ஆவணி சதுர்த்தி 3) தைப்பூசம்
4) மாசி மகம் 5) ஆடி மாத பூர்வ பட்சம்
(...........)

1.50 ஞாயிறானது மேடராசி தொடங்கி இராசி தோறும் பெயர்ந்து செல்வது பற்றிக் கூறிய ஆசிரியரும் நூலும் முறையே
1) நக்கீரர், நெடுநல்வாடை 2) திருவள்ளுவர், திருக்குறள்
3) வராகமிஹிரர், பிருவதச் ஜாதகம் 4) இளங்கோவடிகள், சிலப்பதிகாரம்
5) வான்மீகி, இராமாயணம் (...........)

வடமாகாணக் கல்வித் திணைக்களம்

கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர்தர)ப் பரீட்சை - 2011

# இந்து நாகரிகம் 46 T II

மாதிரி வினாத்தாள்- 4

தரம் -13 பகுதி II மூன்று மணித்தியாலம்

அ' பகுதியிலிருந்து இரு வினாக்களுக்கும் "ஆ" பகுதியிலிருந்து மூன்று வினாக்களுக்குமாக எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக

## பகுதி 'அ'

1. "வட இந்திய பண்பாட்டு வளர்ச்சியல் பிரதான காலமாக குப்தர்காலம் விளங்குகின்றது"
   - i. குப்தர் காலத்தை அறிய உதவும் சான்றாதாரங்கள்
   - ii. குப்தர்கால அரசர்களின் சமயப்பங்களிப்பு
   - iii. குப்தர்கால இலக்கியங்கள்
   - iv. குப்தர்கால கலைமரபுகளின் சிறப்புகளைத் தருக

(4+6+5+5=20)

2. இந்து நாகரிக வரலாற்றில் வைணவசமயம் தொடர்பாக மேல்வரும் விடயங்களைப்பற்றி விளக்குக
   - i. வைணவ வழிபாடும் இலக்கியமும்
   - ii. வைணவ ஆழ்வார்களின் பங்களிப்பு
   - iii. வைணவத்தின் தொன்மையும் வளர்ச்சியும்

(6+7+7=20)

3. 'அரசதர்மம் நிலை குலைந்தால் கோலுடன் கோனும் வீழ்வான்"......
   - i. இந்து அரசின் தோற்றம் பற்றிய சிந்தனைகளை விளக்குக.
   - ii. இந்து அரசு தர்மம் பற்றிக் குறிப்பிடுக.
   - iii. அரசனின் இயல்புகளையும், கடமைகளையும் தருக
   - iv. நீதிபரிபாலனம்

4. 'ஆலயங்கள் சமய, சமூக நிறுவனங்களாக விளங்கிய காலம் சோழர்காலம்' என்பதை அடிப்படையாக கொண்டு விளக்குக.
   - i. இலக்கியம் பெற்ற செல்வாக்கு
   - ii. கோயில்கள்
   - iii. படிமக்கலை

(4+8+8=20)

## பகுதி 'ஆ"

5. i. வேதம்
   - ii. ஆகமம்
   - iii. திருமுறைகள்
   - iv. மெய்கண்ட சாஸ்திரங்கள் ஆகிய நூல்கள் சைவசிததாந்த வரலாற்றில் பெறும் முக்கியத்துவத்தினை ஆராய்க.

(5x4=20)

6. வேதாந்த சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்களை விளக்குக.

i. மத்துவரின் காலம், பிராமணங்களும்

ii. துவைதக் கோட்பாட்டின் அடிப்படை அம்சம்

iii. விசிட்டாத்தைவம், துவைதம் என்பவற்றின் ஒப்பீடு

(4+6+10=20)

7. இந்து சமயமும், பௌத்தசமயமும் கூறும் அறக்கருத்துக்களை ஒப்பிட்டு ஆராய்க.

(20 புள்ளி)

8. "கலை அழியாது என்பதை எடுத்துக்காட்டுவது ஓவியக்கலை ஆகும்"

i. ஓவியக்கலையின் பீடங்களைத் தருக.

ii. தென் இந்திய ஓவியங்கள் பற்றி விளக்குக.

iii. வட இந்திய ஓவியங்கள் பற்றி விளக்குக.

(4+8+8=20)

9. சிறுகுறிப்பு எழுதுக.

i. சிவஞானபோதம்

ii. காஷ்மீர சைவம்

iii. சிதம்பரம்

iv. மகாவாக்கியங்கள்

v. காசிவாசி செந்திநாத ஐயர்

vi. ஆதீனங்களும், மடங்களும்

(4x5=20)

# இந்துநாகரிகம் - மாதிரிவினாத்தாள் - 4
## புள்ளித்திட்டம்
## பகுதி - I,II

### பகுதி I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1.1 | 1 | 1.2 | 3 | 1.3 | 5 | 1.4 | 2 |
| 1.5 | 4 | 1.6 | 4 | 1.7 | 2 | 1.8 | 5 |
| 1.9 | 3 | 1.10 | 1 | 1.11 | 1 | 1.12 | 3 |
| 1.13 | 5 | 1.14 | 2 | 1.15 | 4 | 1.16 | 4 |
| 1.17 | 2 | 1.18 | 5 | 1.19 | 3 | 1.20 | 1 |
| 1.21 | 1 | 1.22 | 3 | 1.23 | 5 | 1.24 | 2 |
| 1.25 | 4 | 1.26 | 2 | 1.27 | 3 | 1.28 | 3 |
| 1.29 | 5 | 1.30 | 4 | 1.31 | 1 | 1.32 | 2 |
| 1.33 | 5 | 1.34 | 4 | 1.35 | 3 | 1.36 | 2 |
| 1.37 | 1 | 1.38 | 4 | 1.39 | 5 | 1.40 | 5 |
| 1.41 | 4 | 1.42 | 1 | 1.43 | 2 | 1.44 | 3 |
| 1.45 | 3 | 1.46 | 2 | 1.47 | 2 | 1.48 | 5 |
| 1.49 | 5 | 1.50 | 1 | | | | |

### பகுதி II
### அ பகுதி

*01)* i.

- இலக்கிய ஆதாரம் - வாயுபுராணம், மச்சபுராணம், தர்மசாஸ்திரம், காமாந்தக நீதி சாஸ்திரம், மகாபாரதம், இராமாயணக் கதைகள்
- தொல்பொருட் சான்றாதாரங்கள் - நாணயங்கள், பொறிப்புகள், கோயிற்கட்டிடங்கள்
- சாசனங்கள் - அலகவாத் கல்வெட்டுக்கள்
- நாணயங்கள் - மயில், அன்னப்பறவை, கொடி, வேல், லிச்சவி, மன்னர்களின் விருத்துப் பெயர்கள்
- கட்டிடங்கள் - ஆலயங்கள்
- பாகியன் குறிப்புகள் - (யுவாங் சுவாங்) விளக்கபட்டவேண்டும்

ii.

- அரசர்களின் பெயர்கள் சமயம் சார்ந்ததாக இருந்தமை, கொடி, நாணயங்களில் சமயம் சார்ந்த இலட்சினைகள் பொறிக்கபட்டமை
- கருடச்சின்னம் அரசசின்னமானது
- சைவ, வைணவ ஆலயம் அமைந்தமை (உ-ம் தந்து விளக்குதல் வேண்டும்)
- சமயப் பொறையை கடைப்பிடித்தமை
- பிராமணர்களுக்கு தானம் வழங்கியமை
- சந்திரகுப்பதனுடைய நாணயத்தில் அம்மன் படம் பொறிக்கப்பட்டமை

iii.

- இராமாயணம் இறுதி வடிவம் பெற்றது மகாபாரதம் முத்திராட்சம், ஆரியப்பாடி, பிருகத்தசம்கிதை, குமாரசம்பவம், சாகுந்தலம், முதலியன தோற்றம் பெற்றன.

iv. ⌛ ஆலயங்கள் அமைக்கப்பட்டமை
- ⌛ குகைக் கோயில்கள்
- ⌛ ஆற்றுகைக் கலைகள் வளர்ச்சி
- ⌛ சிவன், திருமால், அம்மன் ஆகியோருக்கான கோயில்கள்
- ⌛ செங்கல், கருங்கல்லால் அமைக்கப்பட்டமை
- ⌛ கர்ப்பக்கிருகம், தட்டையான கூரை, சிகரம், வடிவங்கள், பிரதானமானவை
- ⌛ பஞ்சாயதனக்கோயில்களின் அமைப்பு முக்கியமானது.
- ⌛ சோதிட, கணித, மருத்துவ அறிவியல் கலைகளின்வளர்ச்சி

**02)** i. ⌛ சக்கரவழிபாடு
- ⌛ அவதார வழிபாடு சிறப்புப் பெற்றது
- ⌛ வைணவ ஆலய வழிபாடும் விரதங்கள்
- ⌛ வைணவ ஆலய வழிபாடும் விரதங்கள்
- ⌛ பஜனைகள் (ஓம் நமோ நாராயண)
- ⌛ இலக்கியங்கள்

  நாலாயிரதிவ்வியபிரபந்தம், நாமசங்கீர்த்தனை, பகவத்கீதை, இதிகாசங்கள், வேதம், உபநிடதம், புராணங்கள் - விஷ்ணுபுராணங்கள் (பாகவதம், பத்மபுராணம், நாரதீய புராணம், கருடபுராணம்)

ii. ஆழ்வார்களின் பங்களிப்பு
- ⌛ முதல் மூன்று ஆழ்வார்களும், வைணவபக்தி இயக்கம், தோன்றக் காரணமாக இருந்தார்கள்.
- ⌛ மதுரபாவம், தாஸியபாவம் போன்ற பாவங்களினூடாக வழிபாடு
- ⌛ மக்களை இணைத்துக் கொண்டமை
- ⌛ அற்புதங்கள் செய்து கொண்டமை

iii. சிந்துவெளிக்காலம் தொடக்கம் தற்காலம் வரை குறிப்பிடல் வேண்டும்.

**03)** i. இந்துஅரசின் தோற்றம் பற்றிய சிந்தனைகள்
- ⌛ வேதகாலத்தில் ராஜா என அழைக்கப்பட்டமை
- ⌛ வேதகாலத்தில் மன்னர்கள் ஆட்சிபற்றிய குறிப்பு
- ⌛ ஐதரேயப்பிராமணத்தில் அரசின் தோற்றம் பற்றிய குறிப்பு
- ⌛ யசுர் வேதத்தில் முடிசூட்டுவிழாவில் மன்னர் வழங்கிய உறுதி மொழி
- ⌛ சாந்தி பருவத்தில் மன்னர்கள் பற்றிய கதைகள்
- ⌛ அக்கினி புராணம், மார்க்கண்டேய புராணம்,வாயுபுராணம் என்பவற்றில் அரசன் மக்களைச் காப்பாற்றும் முறை மனுதர்ம சாத்திரம், அர்த்த சாஸ்திரம், திருக்குறள், போன்ற நீதி நூல்களில் அரசின் தோற்றம் பற்றிய விளக்கங்கள்

ii. இந்து அரச தர்மம்
- ⌛ அரசியலில் இராஜதர்மத்தின் முக்கியத்துவம்
- ⌛ அரசன் மனுதர்மத்தை கடைப்பிடித்தல்
- ⌛ நீதியை நிலைநாட்டுவதில் தர்மத்தைக் கடைப்பிடித்தல்
- ⌛ அரசியலுக்கு தர்மமே அடிப்படை

- தர்மம் தவறும் போது நடைபெறும் விளைவுகள் (பாடலடி மூலம் விளக்குதல்)
- "அரசியல் பிழைத்தோருக்கு, அறதேவதை கூற்றுவனாகும்....."

iii. அரசனது இயல்பும் கடமைகளும்
- அரசன் ஒழுக்கம் உள்ளவன்
- அரசன் கல்வி அறிவுடையவன்
- அரசன் விழிப்புணர்வு உடையவன்
- குடிகளைக் காப்பது மகாயாகம், செய்வதற்கு ஒப்பானது
- வேதநெறி, மனுதர்ம நெறி, பொருளாதாரம், தத்துவம் என்பவற்றைக் கற்றிருத்தல் வேண்டும்.
- வரி அறவிடுதல்
- தரிசு நிலமாதல், குடியிருப்பை ஏற்படுத்தல்
- மனித உரிமை, தூய்மை நாவடக்கம்
- வர்ணதர்மம் பாராது தண்டனை வழங்குதல் அரசின் கடமை.

iv. நீதிபரிபாலனத்தின் சிறப்பு
- அரசனது கட்டளைகள் , ராஜசாசனங்கள் என அழைக்கப்பட்டன. நீதிபரிபாலனத்தின்ஓர் அம்சமாகவே தண்டணை உள்ளது. (சாம, பேத, தான, தண்டம்)
- நீதிக்கு புறம்பான செயல்களைத் தடுத்து நிறுத்தல் வேண்டும்.
- நீதி மன்றிலே அரசன் தான் தலைவன்
- திருக்குறளில் நீதி பற்றிய விளக்கம்

04) i. திருமுறைகள் தொகுக்கப்பட்டது.
- நாலாயிரதிவ்விய பிரபந்தம் தொகுக்கப்பட்டது.
- பெரியபுராணம், கந்தபுராணம் இயற்றப்பட்டது.
- மெய்கண்ட சாஸ்திரங்கள் தோற்றம் பெற்றது.

ii. கோயில்கள்
- விஜயாலயன் - ஆதித்த சோழன் காலக் கோயில்கள்
- 1ம் பராந்தகன் - உத்தம சோழன் வரையிலான கோயில்கள்
- 1ம் இராஜராஜன் - விக்கிரம சோழன் காலக் கோயில்கள்
- விக்கிரம சோழன் - 3ம் இராஜராஜன் வரையுள்ள காலக் கோயில்கள்

iii. படிமக்கலை
- விக்கிரகங்கள் - பஞ்சலோகத்தால் முதன்முதலில் (படிமக்கலை, வார்க்கப்பட்டன.
- உலகப்புகள் பெற்ற விக்கிரகங்கள் அமைக்கப்பட்டன
- உலோகத்தை உருக்கி மூர்த்தங்கள் அச்சில் வார்த்து தெய்வ வடிவங்களும், அடியார் உருவங்களும் உருவாக்கப்பட்டன.
- தஞ்சையிலும், கங்கை கொண்ட சோழேச்சரத்திலும் மிகப் பெரிய சிவலிங்கங்கள் உருவாக்கப்பட்ட.
- நடராஜர், சந்திரசேகர், லிங்கோற்பவர், விநாயகர், பார்வதி, திருமேனிகள்
- இதேகாலகட்டத்திலும், பொலநறுவையில் விக்கிரகங்கள் செய்யப்பட்டன.

## ஆ பகுதி

05) i. வேதம், பொதுநூல்

- சைவசமயத்தின் அடிப்படை நூல்
- வேதங்களில் உள்பொருள் ஒன்றை அதே அறிஞர்கள் பலவாறாக கூறுகின்றனர் என்ற கருத்து சித்தாந்தத்தில் “சத்து” என்ற கருத்துடன் ஒப்பிடப்படுகின்றது. உருத்திரன்பற்றிய கருத்து சைவசித்தாந்தத்தில் சிவனோடு ஒப்பிடப்படுகின்றது.
- யசுர் வேதத்தில் உள்ள மந்திரங்கள், சிவசம்பந்தமானவை

ii. ஆகமம் - முப்பொருள் பற்றி கூறும் கருத்துடையது.

நாற்பாதங்கள் பற்றி விரிவாக கூறுகின்றது. ஞானகாண்டம், முப்பொருள், மும்மலம், மலபரிபாகம், ஆன்மசாதனை, திருவருள், வீடுபேறு, நாற்பதம் போன்ற கருத்து கூறுகின்றது.

ஆலய அமைப்பு

சிவலிங்கம் - பதி

நந்தி - பசு

பலிபீடம் - பாசவிளகக்கம்

iii. திருமுறைகள் - நாயன்மாரால் பாடப்பட்வை

தேவாரம், வேதசாரம், முப்பொருள்பற்றி நாயன்மார்களின்அனுபவம் ஊடாக விளக்கப்படுகின்றது. சிவதத்துவம், சிவதரிசனம், நாற்பதம், மோட்சம், வீடுபேறு, குருலிங்கம், சங்கமவழிபாடு (விளக்கம்) திருமந்திரத்தில் கூறப்படும் சித்தாந்தக் கருத்துக்கள்

iv. மெய்கண்ட சாத்திரங்கள்

- 14 மெய்கண்ட சாத்திரங்கள், சைவசித்தாந்தத்தில் முக்கியத்துவம் பெறுகின்றன.
- ஆகமங்களை முதல் நூலாக கொண்டுள்ளன.
- 14 மெய்கண்ட சாத்திரங்களின் விளக்கம் சைவசித்தாந்தக் கருத்துக்கள் எவையென விளக்குதல் வேண்டும்.

06) i.
- காலமும், பிரமாணங்களும்
- கி. பி. 13ம் நூற்றாண்டு (1199 - 1278)
- பிரமாணங்கள் - காண்டல், கருதல், உரை

ii.
- கோட்பாட்டினடிப்படை அம்சங்கள்
- துவைத விளக்கம்
- ஐவகை பேதங்களின் விளக்கம்
- முப்பொருளுண்மை விளக்கம்
- பன்மைவாதி
- இறைவன் மட்டும் சுதந்திரமானவன்

iii. ஒப்பீடு

| <u>விசிட்டாத்வைம்</u> | <u>துவைதம்</u> |
|---|---|
| ⌛ விசிட்டாத்வைத விளக்கம் | துவைத விளக்கம் |
| ⌛ ஏற்றுக் கொண்ட பிரமாணங்கள், நூல்கள் | பிரமாணங்கள், நூல்கள் |
| ⌛ மூன்று பொருட்களை விளக்குதல் | மூன்று பொருள் விளக்கம் |
| ⌛ மூவகை ஆன்மா | ஐவகை பேதங்கள் |
| ⌛ முத்தியும், முத்திக்குரிய வழியும் | முத்தியும் முத்திக்குரிய வழியும் (விளக்கம்) |
| ⌛ பரிணாம வாதம் | |
| ⌛ அப்பிரசித்திக் கொள்கை | |

**07)**
- ⌛ இந்து சமயம் கூறும் அறம்
- ⌛ பஞ்சமாபாதகம், தவிர்த்தல்
- ⌛ தர்மம் நிலைநாட்டுதல் (பகவத்கீதை)
- ⌛ தர்மம் சர, சத்யம் வத (உபநிடதம்)
- ⌛ ஒழுக்க சிந்தனைகள், நீதி நூல்கள் என்பவற்றின் ஊடாக அறக் கருத்துக்களை விளக்குதல் வேண்டும்.

- ⌛ பௌத்தம் குறிப்பிடும்
- ⌛ பஞ்சசீலம்
- ⌛ தசசீலம்
- ⌛ அட்டசீலம்

} கொள்கைகளை இந்துமதத்தோடு ஒப்பிடுதல் வேண்டும்

**08)** i. கலைப்பீடங்கள்

ii. வட இந்திய ஓவியங்கள் அஜந்தா, வாதாபி, எல்லோரா, ராஜபுத்திர

iii. தென்னிந்திய ஓவியங்கள்

பல்லவ பாண்டிய காலம் - சித்தன்ன வாசல்,

சோழர்காலம் - தஞ்சாவூர்

நாயக்கர்காலம் - மதுரை, சிதம்பரம், திருவரங்கம்

**09)** சிறுகுறிப்பு -

i. சிவஞான போதம் - எழுதியவர் பெயர்
சூத்திரங்களின் எண்ணிக்கை
அமைப்பு
சைவசித்தாந்த சாத்திரக்கருத்துக்கள்

ii. காஷ்மீரசைவம் - தோற்றம், சிறப்பு, காலச்சூழல், விளக்கம், நிறுவியவர்,

iii. சிதம்பரம் - அமைவிடம், சிறப்பு
இலக்கிய நூல்களுடனான தொடர்பு,
வரலாற்று முக்கியத்துவம்
கோயில் என்றால் சிதம்பரமே

iv. மகாவாக்கியம் - உபநிடதங்களில் காணப்படுபவை

தத்துவசாரமாக அமைந்தவை

தத்துவமசி, அகம் பிரமாஸி, சோகம் அஸி

போன்றவற்றுக்கு விளக்கம் எழுதல்

பிற்கால தரிசனங்களுக்கு அடிப்படை

v. காசிவாசி செந்திநாதஐயர்

தோற்றம், காலச்சூழல், பணிகள், நூல்கள்

vi. ஆதீனங்களும் மடங்களும்

காலச்சூழல், மடங்களின் தோற்றம்.

மடங்கள், ஆதினங்கள் வளர்ச்சியடைந்தமை

வடமாகாணக் கல்வித் திணைக்களம்

கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர்தர)ப் பரீட்சை - 2011

# இந்து நாகரிகம் | 46 | T | I |

## மாதிரி வினாத்தாள்- 5

தரம் -13 பகுதி I இரண்டு மணித்தியாலம்

பகுதி - 1 வினாத்தாள் 50 வினாக்களைக் கொண்டது அனைத்து வினாக்களுக்கும் விடைதருக.

1.1 இலங்கை இந்து மத வரலாற்றில் நான்கு திசைகளிலும் சிவாலயங்கள் அமைக்கப்பட்ட காலப்பகுதி.

1) அனுராதபுரக்காலம் 2) பொலநறுவைக்காலம்

3) ஆரியச்சக்கரவர்த்திகள் காலம் 4) போர்த்துக்கீசர் காலம்

5) ஐரோப்பியர் காலம்

(...............)

1.2 19ம் நூற்றாண்டில் இலங்கையின் இந்து சமய வளர்ச்சியில் முன்னோடியாகத் திகழ்ந்தவர்

1) காசிவாசி செந்திநாததையர் 2) ஆறுமுகநாவலர்

3) சி.வை.தாமோதரம்பிள்ளை 4) பசுபதிச் செட்டியார்

5) பழனியப்பச் செட்டியார்

(...............)

1.3 1924ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இந்துக்கல்வி வளர்ச்சியில் மற்றொரு மைற் கல்லாகத் தோற்றம் பெற்றவை.

1) கொழும்பு விவேகானந்தசபை 2) இராமகிருஷ்ண மிஷன்

3) சைவ வித்தியாவிருத்திச் சங்கம் 4) சைவ பரிபாலன சபை

5) அகில இலங்கை இந்துமா மன்றம்

(...............)

1.4 பொலநறுவைக் காலத்தில் கட்டப்பட்ட சிவாலயங்களின் தொகை.

1) 8 2) 12 3) 6 4) 4 5) 10

(...............)

1.5 1954 இல் நீர் கொழும்பில் விவேகானந்த சபையினரால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையாக அமைவது

1) இந்துக்கல்லூரி 2) கொழும்பு விவேகானந்த வித்தியாலயம்

3) டி.எஸ்.சேனநாயக்கவித்தியாலயம் 4) விஜரத்திரனம் ம.வி

5) இரத்மலானை இந்துக்கல்லூரி

(...............)

1.6 சாளுக்கிய மனனரை இராஜராஜன் வெற்றிகொண்டதன் நினைவாக கட்டப்பட்ட ஆலயம்

1) தஞ்சைப் பெருங்கோவில் 2) கங்கை கெண்ட சோழபுரம்

3) பண்டித சோழேச்சரம் 4) ஸ்ரீரங்கம்

5) திருப்பரங்குன்றம்

...............)

1.7 மூவகை வித்தை என்ற பொருளில் வரும் "திரையீவித்யா" என்ற சொல் குறித்து நிற்பது

1) உபநிடதம், பகவத் கீதை, பிரம்மசூத்திரம்

2) புராணம், இதிகாசம், தர்ம சாத்திரம்

3) தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா

4) பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற்புராணம்

5) இருக்கு, யசுர், சாமம்

(...............)

1.8 ஆகம முறையிலும் பல்லவர் கால சிற்ப அமைப்பிலும் நியுயோர்க்கில் அமைந்த ஆலயம்

1) சிவன் கோயில்
2) வரதராஜ செல்வ விநாயகர் கோவில்
3) பெரிய கணேசர் ஆலயம்
4) ஈஸ்ற்காம் ஸ்ரீமுருகன் கோவில்
5) மஹாவல்ல கணபதி கோவில்

(...............)

1.9 பொன் வண்ணத்தந்தாதி, திருக்கைலாய ஞான உலா என்னும் நூல்களை அருளியவர்

1) காரைக்கால் அம்மையார்
2) ஐயடிகள் காடவர் கோன்
3) சேரமான் பெருமாள்
4) நக்கீர தேவநாயனார்
5) கல்லாடர்

(...............)

1.10 ஈழத்தில் 4ம் சிவாலயம் அமைந்துள்ள இடம்

1) மின்னேரியா தோப்ப வாவி வீதி
2) ஜோத எல கால்வாய்
3) பொலநறுவை நகர்
4) காங்கேசன் துறை
5) பதவியா

(...............)

1.11 மெய்யியற் சிந்தனைகளையும் ஆன்மீக ஈடேற்றத்திற்கான வழிகளையும் கூறும் நூல்

1) உபநிடதம்
2) பகவத்கீதை
3) இதிகாசம்
4) பிரமசூத்திரம்
4) தர்மசாஸ்திரம்

(...............)

1.12 அந்தர்யாமித்துவத்திற்கு முதன்மையிடம் கொடுத்த வேதாந்தி

1) இராமானுஜர்
2) மத்துவர்
3) சங்கரர்
4) கௌடபாதர்
5) பாதராயணர்

(...............)

1.13 அத்வைதக் கொள்கை விளக்கத்தை விளக்கும் நூல்

1) சுப்பிரமணிய புஜங்கம்
2) சிவானந்தலகரி
3) உபதேசசாயஸ்ரி
4) சௌந்தர்யலகரி
5) பஜ கோவிந்தம்

(...............)

1.14 பன்னிரு ஆழ்வார்களில் சடகோபர் என்ற பெயரைக் கொண்டவர்

1) பெரியாழ்வார்
2) திருமளிசையாழ்வார்
2) தொண்டரடிப் பொடியாழ்வார்
4) திருப்பாணாழ்வார்
5) நம்மாழ்வார்

(...............)

1.15 பாரத தாற்பரிய நிர்ணயம் என்ற நூலை எழுதிய வேதாந்தி

1) சங்கரர் 2) இராமானுஜர் 3) கோவிந்தபாதர்
4) மத்துவர் 5) கௌடபாதர்

(...............)

1.16 சிவனின் அருவத் திருமேனிக்குரிய நிலைகளாக சைவசித்தாந்தம் கூறுவது

1) பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன்
2) சிவம், சக்தி, நாதம், விந்து
3) சதாசிவன், சக்தி, உருத்திரன், பிரம்மா
4) ஆணவம், கன்மம், மாயை, மாயேயம்
5) தனு, கரண, புவன, போகம்

(...............)

1.17 விநாயகரின் திருவுருவில் எழுத்தாணி பிடித்த கரம் உணர்த்தும் தத்துவம்

1) படைத்தல் 2) காத்தல் 3) அழித்தல்
4) மறைத்தல் 5) அருளல்

(...............)

1.18 பதின்னான்கு சித்தாந்த சாஸ்திர நூல்களில் முடிமணியாய்த் திகழ்வது

1) சிவஞான சித்தியார் 2) இருபா இருபது
3) சிவப்பிரகாசம் 4) உண்மை விளக்கம்
5) சிவஞான போதம்

(...............)

1.19 தசகாரியங்களை நாடிச் சென்று சிவானுபூதி பெற வழிகாட்டிய சித்தாந்த நூல்

1) சிவஞான போதம் 2) உண்மை விளக்கம்
3) கொடிக்கவி 4) நெஞ்சுவிடு தூது
5) உண்மைநெறி விளக்கம்

(...............)

1.20 இந்துக்கலைக்களஞ்சியம் என்னும் தொகுதியை வெளியிடுவது

1) சமூக சேவைத்திணைக்களம் 2) இந்து சமயக் கலாசாரத்திணைக்களம்
3) சைவ வித்தியாபிவிருத்திச்சங்கம் 4) அகில இலங்கை இந்துமா மன்றம்
5) இந்து சமயப் பேரவை

(...............)

1.21 கலியுகத்தில் அசரீரி கேட்டவன் என்று சாசனங்களில் குறிப்பிடப்படுபவன்

1) மகேந்திரவர்மன் 2) நந்திவர்மன்
3) நரசிம்மன் 4) பரமேஸ்வரவர்மன்
5) இராஜசிம்மன்

(...............)

1.22 முத்திப்பேற்றின் போது வறுத்த வித்துப் போன்று வலி கெடும் மலம்

1) கன்மம் 2) மாயேயம் 3) மாயை
4) ஆணவம் 5) திரோதாயி

(...............)

1.23 பஞ்ச பூதங்களில் பிருதுவிலிங்கம் குறித்து நிற்கும் தலம்

1) காஞ்சி 2) திருவானைக்கா 3) திருவண்ணாமலை

4) திருக்காளத்தி 5) சிதம்பரம்

(..............)

1.24 பஞ்சபூதம் காரணமாக ஆன்மாவுக்கு வரும் கன்மத்திற்கு வழங்கப்படும் பெயர்

1) தெய்வீகம் 2) ஆத்மீகம் 3) ஆதிபௌதீகம்

4) ஆதிதைவிகம் 5) ஆதிஆத்மிகம்

(..............)

1.25 இராமானுஜர் முன்வைக்கும் தத்துவத்திரயம் அடங்கும் தொகுதி

1) பசு, பதி, பாசம் 2) ஈஸ்வரன், சித், அசித்

3) ஆணவம், கன்மம், மாயை 4) சத், சித், ஆனந்தம்

5) ஆணவம், ஆன்மா, உலகு

(..............)

**சங்கரரைத் தொடர்ந்து இராமானுஜர், மத்துவர் போன்றோர் தத்துவத்திற்குப் பங்களிப்புச் செய்தனர். அவர்களின் பணிகளைத் தெரிவு செய்து 26ம், 27ம் வினாக்களுக்கு விடை தருக.**

A துவைத வேதாந்தம்

B சர்வமூலம் என்ற தலைப்பில் நூல் தொகுத்தவர்

C தத்துவம் உபய வேதாந்தம் ஆகும்

D விஷ்ணு தத்துவ நிர்ணயம்

E விஷிட்டாத்தைவம் பேசுபவர்

F பிரபக்தி மார்க்கம் அவசியம் என்பார்

1.26 இராமானுஜருடன் தொடர்புபட்ட தொகுதி.

1) C,E,F 2) A,B,C 3) D,E,F

4) D,E,F 5) A,B,F

(..............)

1.27 மத்துவருடன் தொடர்புபட்ட தொகுதி

1) C,E,F 2) A,B,C 3) A,B,C

4) D,E,F 5) C,D,E

(..............)

1.28 ஆலயம் அமைக்கும் வரையான கிரியைக்கு ஆகமம் கொடுக்கும் பெயர்

1) பிரதிஷ்டை 2) உற்சவம் 3) பிராயச்சித்தம்

4) கர்ஷணம் 5) ஸ்தகநியாசம்

(..............)

1.29 ஸ்தபதி என அழைக்கப்படுபவன்

1) பஞ்சபுராணம் ஓதுபவர் 2) கோவிலைப் பரிபாலனம் செய்பவர்

3) கோவில் கட்டிடத்தை நிர்மாணிப்பதில் தேர்ச்சி பெற்றவர்

4) கோவிலுக்கு நிதி வழங்குபவர் 5) கிரிகைகள் மேற் கொள்பவர்

(..............)

1.30 தமிழாகரன் எனப் போற்றப்படுபவர்

1) திருஞான சம்பந்தர் 2) திருநாவுக்கரசர்
3) சுந்தரமூர்த்தி நாயானார் 4) மாணிக்க வாசகர்
5) கண்ணப்ப நாயனார்

(...............)

1.31 அகச்சந்தான குரவர்களில் முதலாவதாக அமைபவர்

1) சனற்குமார முனிவர் 2) சத்தியஞான தர்சினி
3) பரஞ்சோதி மாமுனிவர் 4) மெய்கண்டதேவர்
5) திருநந்தி தேவர்

(...............)

1.32 கடந்தகால, நிகழ்கால, எதிர்கால வாழ்வோடு தொடர்புபட்டது.

1) சரியை, கிரியை, யோகம், ஞானம் 2) சஞ்சிதம், பிராரப்தம், ஆகாமியம்
3) கன்மம், மறுபிறப்பு, முத்தி 4) சாக்கிரம், சொப்பனம், சுளுத்தி
5) துரியம், துரியாதீதம், சாக்கிரம்

(...............)

1.33 ஆதியும் அந்தமும் இல்லாத பரம் பொருள் தத்துவத்தை உணர்த்துவது

1) தக்ஷிணாமூர்த்தம் 2) கல்யாணசுந்தரமூர்த்தம்
3) லிங்கோற்பவம் 4) அர்த்த நாரீஸ்வரர்
5) திரிபுராந்தகர்

(...............)

1.34 முருகன் மயிலை வாகனமாகக் கொண்டதால் வழங்கப்படும் பெயர்

1) கஜவாகனன் 2) தாரகாந்தன்
3) பிரம்மசாஸ்தா 5) சிகி வாகனன்
5) கிரவுஞ்ச போதனன்

(...............)

1.35 ஆலயக் கிரியைகளின் போது இடம் பெறும் குற்ற நிவர்த்தியின் பொருட்டு ஆற்றப்படும் கிரிகை

1) பிரயச்சித்தம் 2) உற்சவம்
3) பிரதிஷ்டை 4) கர்ஷணம்
5) காமிகம்

(...............)

1.36 குப்தர் கால சாசனங்களிலே பரமபாகவதர், மகேஸ்வரர், பரமேஸ்வரர் எனும் தெய்வீக விருதுப் பெயர்களைச் சுட்டிக் கூறப்படுபவர்

1) குடிகள் 2) புலவர் 3) பெண்கள்
4) மனிதர் 5) அரசர்

(...............)

1.37 பிறவிப் பிணியை அழிக்கும் வழியாக சங்கம வழிபாட்டை வலியுறுத்தியவர்.

1) சிவப்பிரகாசர் 2) அருணாசலக் கவிராயர்
3) தாயுமானவர் 4) அருணகிரிநாதர்
5) ஞானப்பிரகாசர் (...............)

1.38 அருணாசல தேசிகருக்கு "தேசிகர்" என்ற பட்டத்தை வழங்கியவர்

1) வித்துவான் பூபாலபிள்ளை
2) இராசநாயகம் முதலியார்
3) அவிநாசா நந்தா அடிகளார்
4) நவநீத கிருஷ்ண பாரதியார்
5) ஞானப்பிரகாசர்

(...............)

1.39 நாட்டையாளும் அரசனுக்கு இருக்க வேண்டிய பண்புகள் யாவற்றையும் வெளிப்படுத்தும் திருக்குறட் பகுதி

1) அறத்துப்பால்
2) காமத்துப்பால்
3) இல்லறவியல்
4) பொருட்பால்
5) கடவுள் வாழ்த்து

(...............)

1.40 ஞானபோத விளக்கச் சூறாவளி என்ற நூலை எழுதியவர்

1) ஆறுமுகநாவலர்
2) காசிவாசி செந்திநாதையர்
3) சேர். பொன். இராமநாதன்
4) கணேசையர்
5) பொன்னம்பலபிள்ளை

(...............)

1.41 வரி செலுத்தாதோரையும், ஒழுங்காக விவசாயம் மேற்கொள்ளாதவர்களையும் நிலத்திலிருந்து வெளியேற்ற வேண்டும் எனக் கூறும் நூல்

1) மனுதர்மசாஸ்திரம்
2) திருக்குறள்
3) நாலடியார்
4) சுக்கிர நீதி
5) அர்த்த சாத்திரம்

(...............)

1.42 என்னை இறப்பிலிருந்து இறவாமைக்கு இட்டுச் செல்வாயாக எனக் கூறும் உபநிடதம்

1) பிருகதாரண்யக உபநிடதம்
2) கேனோபநிடதம்
3) கடோபநிடதம்
4) சாந்தோக்கிய உபநிடதம்
5) தைத்திரீய உபநிடதம்

(...............)

1.43 இறைவன் குருவடிவில் எழுந்தருளி அறிவைப் போதிக்கும் மூர்த்தம்

1) சந்திரசேகரர்
2) நடராஜர்
3) தக்ஷணாமூர்த்தி
4) இலிங்கோற்பவர்
5) பிக்ஷாடனர்

(...............)

1.44 அத்வைதம் என்பதற்கு சைவசித்தாந்தம் கொள்ளும் பொருள்

1) இன்மை
2) அன்மை
3) மறுதலை
4) சிறுமை
5) வேற்றுமை

(...............)

1.45 திருக்கோட்டியூர் நம்பியைக் குருவாகக் கொண்ட வேதாந்தி

1) சங்கரர்
2) மத்துவர்
3) விவேகானந்தர்
4) இராமானந்தர்
5) இராமானுஜர்

(...............)

1.46 குமாரக்கடவுளின் மூர்த்தங்கள் பற்றிக் கூறும் நூல்

1) சிவாகமம் 2) வைகாசனம் 3) உருத்திராகமம்

4) குமாரதந்திரம் 5) காமிகம் (..............)

1.47 தம் குருவிடம் உள்ளத்தைச் செலுத்தி அனுபூதி பெற்ற சித்தாந்தி

1) உமாபதி சிவாச்சாரியார் 2) மறைஞான சம்பந்தர்

3) அருணந்தி சிவாச்சாரியார் 4) மறைஞான சம்பந்தர்

5) திருவியலூர் உய்யவந்த தேவனார் (..............)

1.48 "திரிமலர்த்தார் ஒன்றதனிற் சென்றார்கள்" எனவரும் அடியில் திரிமலர்த்தார் எனப்படுவோர்

1) பிரளயாகலர் 2) விஞ்ஞானகலர்

3) சகலர் 4) சீவன் முத்தர்கள்

5) அனுபூதி மான்கள்

(..............)

1.49 மாயா காரியங்கள் எனப்படுபவை எவை?

1) சிவம், சக்தி, நாதம், விந்து 2) தனு, கரண, புவன, போகம்

3) சாலோலம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் 4) காலம், கலை, நியதி, அராகம்

5) அறம், பொருள், இன்பம், வீடு (..............)

1.50 நடராஜவடிவம் உணர்த்தும் தத்துவங்கள் எனக் கருதப்படுவன.

1) பஞ்சகிருத்தியம், திருவைந்தெழுத்து 2) திருவைந்தெழுத்து, பஞ்சபுராணம்

3) பஞ்சதலங்கள், திருவைந்தெழுத்து 4) பஞ்சகிருத்தியம், பஞ்சபுராணங்கள்

5) பிரபஞ்ச இயக்கமும், பஞ்சபூதமும் (..............)

வடமாகாணக் கல்வித் திணைக்களம்

கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர்தர)ப் பரீட்சை - 2011

# இந்து நாகரிகம் | 46 | T | II |

**மாதிரி வினாத்தாள்- 5**

தரம் -13 | பகுதி II | மூன்று மணித்தியாலம்

**பகுதி "அ" வில் எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் பகுதி "ஆ" வில் இருந்து எவையேனும் மூன்ற வினாக்களுக்குமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

## பகுதி அ

**1.** "ஆகமாகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க"

i. ஆகமம் என்பதன் பொருளையும், காலத்தையும் தருக.

ii. ஆகமம் கூறும் ஆலய அமைப்பையும் கிரியை முறைகளையும் தருக.

iii. தத்துவக் கோட்பாடுகள் பற்றி விளக்குக.

(4+8+8= 20 புள்ளிகள்)

**2.** சைவ சமயம் சனாதனமானது என்பதனை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்களை விளக்குக.

i. சைவத்தின் பிரமாண நூல்கள்

ii. சைவத்தின் சிறப்பியல்புகள்

iii. சைவத்தின் தோற்றமும், வளர்ச்சியும்

iv. சைவ பக்தி நெறியாளர்கள்

(2+6+6+6=20 புள்ளிகள்)

**3)** தென்னக சமய வரலாற்றில் விஜயநகர, நாயக்கர் காலத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்களை விளக்குக.

i. சமயம்

ii. இலக்கியம்

iii. கலைகள்

iv. ஆதீனங்களும், மடங்களும்

(5+5+5+5=20 புள்ளிகள்)

**4)** i. வைணவ சமய வளர்ச்சி

ii. பக்திநெறி

iii. ஒழுக்க நெறி என்பன தொடர்பாக பகவத்கீதை பெறும முக்கியத்துவத்தினை ஆராய்க

(6+7+7=20 புள்ளிகள்)

## பகுதி ஆ

5) தென்கிழக்காசிய நாடுகளில் இந்துப் பண்பாட்டின் வளர்ச்சியினை அடிப்படையாகக் கொண்டு மேல் வருவனவற்றை விளக்குக.

i. இந்துப்பண்பாட்டுப் பரம்பலுக்கான காரணங்கள்

ii. இந்து அரசியலும் சமயத் தொடர்பும்

iii. இந்து விழாக்களும் சடங்குகளும்

(5+8+7=20 புள்ளிகள்)

6) "இந்துக்கல்விப் பாரம்பரியம் வேத இலக்கியத்தை ஆதாரமாகக் கொண்டது" இதனை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் விடயங்களை விளக்குக.

i. குருகுலக்கல்வி

ii. புராதன இந்துக்கல்வியின் நோக்கங்கள்

iii. இந்துக்கல்விப் பாரம்பரியத்தின் தோற்றமும், வளர்ச்சியும்

(5+5+10=20 புள்ளிகள்)

7) அனுராதபுர கால இந்துமத வரலாறு தொடர்பாக மேல்வரும் விடயங்களை விளக்குக.

i. வரலாற்று மூலங்கள்

ii. மன்னர்களும் இந்து சமயத் தொடர்பும்

iii. இந்து சமயத் தெய்வங்களும் கோயில்களும்

(4+8+8=20 புள்ளிகள்)

8) இந்துக்கலை மரபில் நடனக் கலையின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி குறிப்பிட்டு நடனக் கலையில் நடராஜ மூர்த்தம் பெறும் சிறப்பினை விளக்குக.

(20 புள்ளிகள்)

9) பின்வருவனவற்றுள் நான்கிற்குச் சிறு குறிப்பு வரைக

i. சிவப்பிரகாச சுவாமிகளும் வீரசைவமும்

ii. திருக்குறள்

iii. இந்துப்பொருளியல்

iv. சுவேதாஸ்வதர உபநிடதம்

v. விவேகானந்தசபை

vi மாமாங்கப்பிள்ளையார்

(4x5=20 புள்ளிகள்)

# இந்துநாகரிகம் - மாதிரிவினாத்தாள் -5
## புள்ளித்திட்டம்
## பகுதி - I,II

## பகுதி I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1.1 | 1 | 1.2 | 2 | 1.3 | 3 | 1.4 | 5 |
| 1.5 | 4 | 1.6 | 1 | 1.7 | 5 | 1.8 | 5 |
| 1.9 | 3 | 1.10 | 1 | 1.11 | 2 | 1.12 | 1 |
| 1.13 | 3 | 1.14 | 5 | 1.15 | 4 | 1.16 | 2 |
| 1.17 | 1 | 1.18 | 5 | 1.19 | 5 | 1.20 | 2 |
| 1.21 | 5 | 1.22 | 4 | 1.23 | 1 | 1.24 | 3 |
| 1.25 | 2 | 1.26 | 1 | 1.27 | 2 | 1.28 | 4 |
| 1.29 | 3 | 1.30 | 1 | 1.31 | 5 | 1.32 | 2 |
| 1.33 | 3 | 1.34 | 4 | 1.35 | 1 | 1.36 | 5 |
| 1.37 | 1 | 1.38 | 3 | 1.39 | 4 | 1.40 | 2 |
| 1.41 | 5 | 1.42 | 1 | 1.43 | 3 | 1.44 | 2 |
| 1.45 | 5 | 1.46 | 4 | 1.47 | 1 | 1.48 | 3 |
| 1.49 | 2 | 1.50 | 1 | | | | |

## பகுதி -II
### பகுதி (அ)

**1.** i. ஆகமப் பொருள்

தொன்று தொட்டு வரும் அறிவு

ஆன்மா, மலநாசம் பெற்று இறைவனை அடையவழி காட்டும் நூல் எனப் பல்வேறு பொருள் கொள்ளப்படுகின்றது.

காலம்

திருமந்திரத்திற்கு முற்பட்ட காலம்

மகேந்திரவர்மன் தன்னை ஆகமப்பிரியன் எனக் கூறுப்படுகின்றது.

**ii.** ஆலயமைப்பு

ஆகமங்கள் மக்களின் ஆன்மீக வாழ்வு ஆகமங்களை மையமாகக் கொண்டு கூறுகின்றன.

வேதங்கள் கூறும் அக்கினி வழிபாடும் சாதாரண மக்களுக்கு ஏற்புடைய உருவ வழிபாடும் சிவாகமங்களில் இணைகின்றன.

சிவாகமங்கள் ஆலய அமைப்பு, இடம், கட்டமைப்புக்கள், அமைய வேண்டிய இடங்கள், அளவைப் பிரமாணங்கள் போன்றவற்றை விரிவாக விளக்குகின்றன.

பிரகார லட்சண விதிப்படலத்தில் பிரகாரம் அமைக்கும் முறைகள் கூறப்படுகின்றது.

சிலாபரீட்சணம் என்ற தலைப்பில் சிவகமங்கள் திருவுருவங்களை செதுக்குவதற்குரிய கருங்கல்லை தெரிவு செய்யும் முறை பற்றிக் கூறுகின்றன.

கிரியை முறை

ஆன்ம ஈடேற்றம் கருதி ஆகமக் கிரியை முறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

கோயிலையும் திருவுருவ அமைப்பையும் மையமாகக் கொண்டவை கிரியைகள்.

கோயில்களில் இடம் பெற வேண்டிய கிரியைகள், அவற்றை ஆற்றும் விதிகள், பூஜை அங்கங்கள், மந்திர உச்சாடனங்கள், நிவேதனப் பொருள் பற்றிய விளக்கங்கள்.

பூஜா விதிப்படலம், மந்திர அவதாரப்படலம் பற்றிய கருத்துக்கள்.

கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம் பற்றிய விளக்கம்

iii. தத்துவக் கோட்பாடு

சிவாகமங்கள், யோகாபாதம், ஞானாபாதம், என்பவற்றில் சைவசித்தாந்த கருத்துக்கள் உண்டு

கிரணம், ரௌரவம், பௌஷ்கரம், ஆகிய ஆகமங்களில் சித்தாந்த சிந்தனைகள்,

பதி, பசு, பாசம், முப்பொருளுண்மை, அவற்றின் இயல்பு, மூவகைத் திருமேனிகள், அவற்றின் இயல்புகள், ஐந்தொழில்கள், ஆன்ம ஈடேற்றம், மும்மலம், என்பவற்றைக் கூறுகிறது.

கிரண ஆகமம், பதி, படலம், போன்ற தலைப்புக்களில் சைவசித்தாந்த உண்மைகள் நாற்பாத நெறியினூடாக குருலிங்க சங்கம வழிபாடு, சிவசின்னங்கள் பற்றிய விளக்கம்

**2)** i. பிரமாண நூல்கள்

வேதம், ஆகமம், திருமுறைகள், மெய்கண்டசாஸ்திரங்கள், சிவானந்த லகரி

ii. சிறப்பியல்புகள்

அன்பை அடிப்படையாகக் கொண்டது

அறிவை அடிப்படையாகக் கொண்டது

மிகப்பழமையானது

தோற்றமும், முடிவும் அற்றது

காலவரையறைகளுக்கு அப்பாற்பட்டது

iii. தோற்றமும் வளர்ச்சியும்

சிந்து வெளி முதல் - தற்காலம் வரை உலகளாவிய ரீதியில் சைவத்தின் பெருமையை விளக்கல்

iv. பக்தி நெறியாளர்கள்

நாயன்மார்கள், சந்தான குரவர்கள், சித்தர்கள், பக்தியாளர்கள், ஞானியர், சமயமறுமலர்ச்சியாளர்கள்.

**3)** i. சமயம்

சித்தாந்த சைவம், வீரசைவம், காஷ்மீர சைவம்

சைவ சமய நெறிகள்

விருபாட்சகர் வழிபாடு

வைணவம் பற்றி தெலுங்கு, கன்னட பாடல்கள், நாயக்கர் காலத்தில் வடகலை வைணவம், தென்கலை வைணவம் என இரு பிரிவாகியது

சிதம்பரம், திருப்பதி, திருவரங்கம் ஆலய திருப்பணிகள்

காளாமுகர், பாசுபதர் முதலிய சைவப் பிரிவுகள் காணப்பட்டது

ii. இலக்கியம்

முதலாம் புக்கனால் நான்கு வேதங்கள், பிராமணங்கள் என்பவற்றிற்கு உரை எழுதப்பட்டது

சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு

இலக்கியங்கள் சிறப்புப் பெற்றன

நாடக நூல்கள் எழுந்தன

அருணகிரி நாதரின் பக்திப் பாடல்கள்

பிரபு லிங்க லீலை, பராபரக்கண்ணி, பிரபந்தங்கள் போன்றன.

iii. கலைகள்

விருபாட்சகர் கோயில், விட்டலசுவாமி கோயில்

ஆலயங்களில் இராமாயண கதைச் சிற்பங்கள்

இராஜகோபுரம், கல்யாண மண்டபங்கள், ஆயிரங்கால மண்டபங்கள், பட்டாபிராமர் கோயில்

அம்மன் சந்திதானம் அமைப்பு

சுற்றுப் பிரகாரங்கள்

இராமாயண, மகாபாரத ஓவியங்கள்

குதிரை, யாழி தூண்கள் அமைத்தல்

திருப்பாற்கடல் கடைதல், இராவண கதை சிற்பங்கள்

iv. ஆதீனங்களும் மடங்களும்

திருவாவடுதுறை ஆதீனம், திருப்பனந்தாள் ஆதீனம், மடங்கள் போன்றவற்றின் பணிகள், நோக்கம் விளக்கல்

*04.*i. வைணவ சமய வளர்ச்சி

பாகவத சமயம் சார்ந்த நூல்

விஷ்ணுவின் பரத்துவம் பல இடங்களில் விளக்கப்படல்

அவதாரக் கோட்பாடு

பற்றற்ற நிலையை கொண்டு வருதல்

திருமாலின் பல்வேறு நிலைகள் சிறப்பு கிருஷ்ண அவதாரம்

நிஷ்காமியம் பற்றி பேசப்படுதல்

ii. பக்தி நெறி

நால்வகை யோகங்களில் பக்தியோகத்திற்கு முக்கியம்

பிரபக்தி

பூரண நெறி பலன் கருதாது ஆற்றப்படல் வேண்டும்.

கர்மத்திலிருந்து விடுபட மனிதன் இறைவனை நாட பக்தி நெறி அவசியம்

iii. ஒழுக்க நெறி

கடமையை செய் பலனை எதிர்பாராதே

தர்மத்தை நிலை நாட்டவும் அதர்மத்தை அழிக்கவும் நல்லவர்களை காக்கவும் தீயவர்களை அழிக்கவும் பற்றிய விளக்கம்.

மனிதன் எப்படி வாழ வேண்டும் என்பதை பகவத்கீதை விளக்குகின்றது.

## பகுதி ஆ

**05)** i. பரம்பலுக்கான காரணங்கள்

வணிகம்

குடியேற்றம்

உள்நாட்டு கலவரங்கள்

அரசியல் ஆதிக்கம்

விவாக தொடர்புகளும் அரச உறவுகளும்

**ii.** அரசியலும் சமயத் தொடர்பும்

அரச சபைகளில் அர்த்த சாஸ்திரம், தர்ம சாஸ்திரம் என்பவற்றின் நடைமுறைகள் பின்பற்றப்பட்டமை.

அரச சபைகள் இந்து சமய முறைப்படி பட்டாபிடேக விழாக்கள் நடைபெற்றமை.

அரசர்கள் தம்மை திருமாலின் அவதாரமாக கருதினர்

அரச சபைப் புரோகிதர்கள் "இராஜ குரு" என அழைக்கப்பட்டனர்.

அரசர்கள் பிராமணர்களுக்கு தானங்கள் வழங்கினர்

அரச வம்சங்கள் வர்மன் எனும் பெயருடன் பரவியமை

சயாம் நாட்டில் இந்துக் குடியிருப்புகள் காணப்பட்டமை.

**iii.** விழாக்களும் சடங்குகளும்

அரச சபைகளில் திருவெம்பாவைப் பாடல்கள் இடம் பெற்றமை

தைப்பூசம் சிறப்பாக கொண்டாடப்பட்டது

முடி சூட்டு விழாவில் திருமுறைப்பாடல்கள் ஓதப்படல்

பஞ்சாங்கம் பார்த்தல், புனித நீரால் நீராட்டு விழா, மழைத் திருவிழா, மார்கழி ஊஞ்சல் போன்ற விழாக்கள்.

**06.** i. குருகுலக் கல்வி

இந்துக் கல்விப் பாரம்பரியம் குருகுலக் கல்வியை அடிப்படையாகக் கொண்டது.

இந்து சமய நெறி இறை நம்பிக்கை, குருபக்தி, ஆச்சிரம வாழ்வு, வாழ்வியல் சிந்தனைகள், ஆன்மீகம் என்பவற்றில் நெருங்கிய தொடர்பு.

சமூகத்துடன் ஆன்மீக சிந்தனைகளுடன் தொடர்பு உடையது.

**ii.** கல்வியின் நோக்கம்

தனியாள் நோக்கம், சமூக நோக்கம், அரச நோக்கம், பொருளாதார நோக்கம், தொழில் சார் நோக்கம், என்பவற்றின் அடிப்படையில் விளக்கம்

iii. வேதத்திலிருந்து தற்காலம் வரை விளக்கப்படல் வேண்டும்.

**07.** **i.** வரலாற்று மூலங்கள்

புதைபொருட் சான்று

தமிழ் மொழி, பாளி, சிங்களம். சமஸ்கிருதம் என்பவற்றில் தோன்றிய இலக்கியங்கள்

பிற நாட்டார் குறிப்புக்கள்

கோயில்கள், சிற்பங்கள். கல்வெட்டுக்கள்

பௌத்த சமய மரபுடன் இணைந்த இந்து சமயம் சார் புதை பொருட் சான்றுகள்.

தற்காலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வுகள்

**ii.** மன்னர்களும் இந்து சமயத் தொடர்புகளும்

2ம் மகிந்தன், 2ம் சேனன், எல்லாளன், துட்டகைமுனு, ஆகியோர் காலத்தில் இந்து சமய நம்பிக்கைகள் நன்னிலைகளில் இருந்தமை.

அரண்மனைகளில் வைதீக சடங்குகள், ஆலய வழிபாடுகள், புரோகிதர்களுக்கு தானங்கள் வழங்கல்

சிங்கள மன்னர்கள் தொடர்புபட்டு இருந்தமை

மன்னர்கள் வைதீக சடங்குகள் மூலம் தம்மை தூய்மைப்படுத்தியமை

சீன யாத்திரிகர் ஆன பாகியன் குறிப்பு உண்டு

சிங்கள மன்னர்கள் ஆலயங்களை புனருத்தாரணம் செய்தமை, கதிர்காமத்தை புனருத்தாரணம் செய்தமை

**iii.** தெய்வங்களும் கோயில்களும்

சிவன், விஷ்ணு, முருகன், கணபதி போன்ற தெய்வ வழிபாடுகள்

சிவ பாலித, கொபால, வேல, கண ஆகிய தொடர்கள் பிராமிய கல்வெட்டுச் சான்றுகள்

கி.பி 1ம் நூற்றாண்டில் இலங்கை மக்கள் சிவ வழிபாட்டை உடையவர்கள் என்று தொலமி கூறியமை.

அனுராதபுர அழிபாடுகளுக்கு மத்தியில் இந்துத்தெய்வங்களின் வெண்கலப் படிமங்கள் கிடைக்கப்பெற்றமை.

கதிர்காம முருகன் ஆலயத்தை துட்டகைமுனு வழிபட்டமை

கேதீச்சரம், கோணேச்சரம் புகழ் பெற்றமை

**08.** சிந்து வெளி காலம் தொடக்கம் தற்காலம் வரை நடனக் கலையின் தோற்றம், வளர்ச்சி குறிப்பிடப்படல்

நாட்டியத்தில் முதல் அஞ்சலி நடராஜருக்கு இடம் பெறுதல்

அபயகஸ்த முத்திரைகள்

தூக்கிய திருவடி என்பவற்றின் ஊடாக விளக்கல்

**09.** சிறு குறிப்பு

**i** சிவப்பிரகாச சுவாமிகளும், வீரசைவமும்

அறிமுகம்

இளமைக்காலம்

வீரசைவம் - பசவரால் தோற்றுவிக்கப்பட்டது

தமிழ் நாட்டில் வீரசைவத்தை நிலை நாட்டியவர்

சிவப்பிரகாச சுவாமிகள் என்ற அடிப்படையில் விளக்கப்படல் வேண்டும்.

ii. திருக்குறள், இயற்றியவர், நூல் அமைப்பு, காலம், பொருள்

iii. இந்துப் பொருளியல்

நூல்களின் துணை கொண்டு பொருளியல் கருத்துக்கள் விளக்கப்பட்டிருத்தல்

(வேதம், இதிகாசம், அர்த்த சாஸ்திரம், திருக்குறள்)

iv. சுவேதாஸ்வதர உபநிடதம்

வைச சமயம் சார்ந்த கருத்துக்களைக் கூறுகின்றது.

"அ" என்னும் எழுத்திலிருந்து எல்லா எழுத்துக்களும் தோன்றுவது போல பிரமத்திடமிருந்தே உலகம் தோற்றம் பெறுகின்றது.

திருவருட்பயன் கூற்றுடன் ஒப்பிடுதல் வேண்டும்.

"அகர உயிர் போல்....."

எள்ளில் எண்ணெய் அடங்கி இருப்பது போலவும்

தயிரில் நெய் போலவும்

விறகில் தீ போலவும் மறைந்துள்ளது

நாவுக்கரசரின் "விறகில் தீயில்....." தேவாரப்பாடலுடன் ஒப்பிடல் வேண்டும்.

v. விவேகானந்த சபை

தோற்றம், தோற்றுவித்தவர், பின்னணி, நோக்கம், பணிகள் என்ற அடிப்படையில் விளக்கம்

vi. மாமாங்கப் பிள்ளையார்

அமைவிடம்

மூர்த்தி, தல, தீர்த்த விசேடம்,

கிரியைகள்

விழாக்கள்

நூல்கள் என்ற அடிப்படையில் விளக்கம்

வடமாகாணக் கல்வித் திணைக்களம்

கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர்தர)ப் பரீட்சை - 2011

# இந்துசமயம் 42 T I

மாதிரி வினாத்தாள்

தரம் -13 பகுதி I இரண்டு மணித்தியாலம்

கவனிக்க : எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1. இந்து சமயக் கோட்பாடுகளின் மூலகங்கள் எனப்படுபவை
   1. வேதம், புராணம், ஆகமம், தர்மசாத்திரம், இதிகாசம்
   2. புராணம், இதிகாசம், நல்வழி, ஆகமம், தர்மசாத்திரம்
   3. வேதம், கல்வெட்டு, புராணம், மணிமேகலை, சிலப்பதிகாரம்
   4. வேதம், இதிகாசம், சாத்திரங்கள், தோத்திரங்கள், புராணம்
   5. தேவாரம், திருவாசம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, புராணம்

(..................)

2. பயன் கருதாது செய்யப்படும் பூசை
   1. காமியம் 2. கர்ஷணம் 3. பிராயச்சித்தம்
   4. நிஷ்காமியம் 5. நித்தியம்

(..................)

3. உபநிடத ஞானிகள் எனப்படுவோர் அடங்கும் தொகுதி
   1. சனற்குமாரர், நசிகேதன், மைத்திரேயி 2. உத்தலாகர், நாரதர், பிரஜாபதி
   3. நாரதர், பிரஜாபதி, நசிகேதன் 4. இந்திரன், வர்ணன், பிரஜாபதி
   5. உத்தாலகர், ஜமன், பிரஜாபதி

(..................)

4. பிரமசூத்திரம் என்பது பற்றிய சரியான கூற்று
   1. பிரமத்தை சூத்திர வடிவில் கூறும் நூல்
   2. நான்கு பிரிவுகளையும் ஐந்நூற்றம்பத்தைந்து பாடல்களையும் கொண்டது
   3. பிரஸ்தான திரயங்களில் ஒன்று
   4. உபநிடதத்தை விளக்க எழுந்த நூலிது
   5. மேற்கூறிய கருத்துக்கள் யாவும் சரி

(..................)

5. பதினொராம் திருமுறைப் பாடல்களை இயற்றிய நாயன்மார்களின் தொகுதி
   1. பட்டினத்தார், காரைக்காலம்மையார், நக்கீரர்,
   2. பட்டினத்தார், கருவூர்த்தேவர், சேந்தனார்
   3. சேந்தனார், வாகீசர், நக்கீரர்
   4. இசைஞானியார், காரைக்காலம்மையார், புனிதவதியார்
   5. நக்கீரர், பட்டினத்தார், வாகீசர்

(..................)

6. "வித்தியாநீதன்" என்ற விருதுப் பெயர் கொண்ட பல்லவமன்னன்
   1. இராஜசிம்மன் 2. நந்திவர்மன் 3. மகேந்திரவர்மன்
   4. இராஜேந்திரன் 5. பரமேஸ்வரவர்மன்

(..................)

7. ஈழத்து திருப்படைக் கோயில்கள் எனப்படுபவை
   1. வெருகல், சந்நிதி, வல்லிபுரவாழ்வார், மண்டூர்
   2. கதிர்காமம், நல்லூர், நகுலேஸ்வரம், மாவிட்டபுரம்
   3. முன்னேஸ்வரம், நயினைநாகபூசணி, மாமாங்கம், மண்டூர்
   4. கதிர்காமம், மண்டூர், திருக்கோயில், நல்லூர்
   5. சந்நிதி, வெருகல், முன்னேஸ்வரம், திருக்கோயில் (..................)

8. ஆலயக்கிரியைகளின் போது இடம்பெறும் குற்ற நிவர்த்திக்காக ஆற்றப்படும் கிரியை
   1. சிவலிங்கப் பூசை 2. காமியம் 3. பிராயச்சித்தம்
   4. கர்ஷணம் 5. பிரமோற்சவம் (..................)

9. விஷிட்டாத்வைத தத்துவத்துடன் தொடர்புடையது
   1. சங்கமம் 2. பிரகிருதி 3. விவர்த்தவாதம்
   4. பரிணாமவாதம் 5. இருமைவாதம் (..................)

10. பக்திப்பாடல்களை அருளிய பெண் அருளாளர்கள்
   1. காரைக்காலம்மையார், இசைஞானியார், மங்கையற்கரசியார்
   2. காரைக்காலம்மையார், புனிதவதியார், ஆண்டாள்
   3. திலகவதியார், புனிதவதியார், ஆண்டாள்
   4. திலகவதியார், ஔவையார், இசைஞானியார்
   5. புனிதவதியார், ஔவையார், ஆண்டாள் (..................)

11. சிவாலயங்களில் இலிங்கோற்சபவமூர்த்தி அமையும் இடம்
   1. கருவறையின் தெற்குப் புறம் 2. கருவறையின் மேற்குப் புறம்
   3. கருவறையின் வடக்குப்புறம் 4. கருவறையின் கிழக்குப் புறம்
   5. கருவறையின் உள்ளே (..................)

12. கௌமாரசமயம் சார்ந்த நூல்களைக் கொண்ட தொகுதி
   1. பாரதம், கந்தபுராணம், திருப்புகழ்
   2. பாரதம், பழமுதிர்ச்சோலை, பாசுரங்கள்
   3. கந்தரனுபூதி , திருமுருகாற்றுப்படை, வேல்விருத்தம்
   4. மயில்விருத்தம், கந்தரலங்காரம், கோயிற் புராணம்
   5. ஸ்கந்தபுராணம், பெரியபுராணம், கோயிற்புராணம் (..................)

13. உமாபதி சிவாச்சாரியார் செய்த அற்புதங்கள்
   1. நூல்கள் இயற்றியமை, சைவத்தை வளர்த்தமை
   2. பாடல்கள் பாடியமை, பெற்றான்சாம்பனுக்கு முக்தி கொடுத்தமை
   3. பாடல்பாடி கொடியேற்றியமை, தில்லையைவிட்டு நீங்கியமை
   4. பாடல்பாடி கொடியேற்றியமை, சைவத்தை வளர்த்தமை
   5. பெற்றான்சாம்பனுக்கு முத்தியளித்தமை, முள்ளிச் செடிக்கு முத்தி கொடுத்தமை (..................)

14. குமரகுருபரர் இயற்றிய இருநூல்கள்
   1. கந்தர் கலிவெண்பா, காசிக்கலம்பகம் 2. நீதிநெறிவிளக்கம், நல்வழி
   3. கந்தரனுபூதி, நாரதீயபுராணம் 4. மதுரைக்கலம்பகம், நீதிவெண்பா
   5. கந்தரனுபூதி, கந்தர்கலிவெண்பா (..................)

15. பிரகூத்திரத்திற்கு உரைசெய்தோர்
   1. சங்கரர், மத்துவர், வாகீசர்,
   2. மத்துவர், நீலகண்டசிவாச்சாரியார், இராமானுஜர்
   3. சங்கரர், கச்சியப்பசிவாச்சாரியார், மத்துவர்
   4. மத்துவர், இராமனுஜர், மெய்கண்டார்
   5 இராமானுஜர், அருணந்திசிவாச்சாரியார், நாரதர் (..................)

16. மத்துவர் ஏற்றுக்கொள்ளும் அளவைகள்
   1. காண்டல், கருதல்
   2. காண்டல், கருதல், உரை
   3. காண்டல், உரை
   4. காண்டல் மட்டும்
   5. காண்டல், கருதல், உரை, அனுலப்தி (..................)

17. சிவவிக்கிரகக் கலைகள் பற்றிய நூற்றொகுதி
   1. புராணம், நியாயசூத்திரம்
   2. ஆகமம், மணிமேகலை
   3. மானசாரம், சிலப்பதிகாரம்
   4. திருக்குறள், காசியபம்
   5. ஆகமம், சிற்பசாத்திரம் (..................)

18. கிராமியக் கலை வடிவங்களில் இடம் பெறாதது
   1. கரகம்
   2. கும்மி
   3. காவடி
   4. பரதம்
   5. ஒடிசிநடனம் (..................)

19. புராதன இந்தியர்களின் மருத்துவம் பற்றிய இரு நூல்கள்
   1. சரச சம்கிதை, திரிகடுகம்
   2. திருக்குறள், பிரமசூத்திரம்
   3. மணிமேகலை, சிலப்பதிகாரம்
   4. வாசனேயசங்கிதை, ஆகமம்
   5. திரிகடுகம், வலாசிய மாணபியம் (..................)

20. திருமந்திரம் பற்றிய சரியான கூற்று
   1. ஆகமத்தின் சாரமாக அமைவது
   2. மூவாயிரம் பாடல்களைக் கொண்டுள்ளது .
   3. ஒன்பது தந்திரங்களில் உள்பொருளை விளக்குவது
   4. திருமந்திரமாலை, சுந்தரனாகமம் முதலிய பெயர்களால் சுட்டப்படுவது
   5. மேற்கூறிய கூற்றுக்கள் யாவும் சரியானவை (..................)

21. "வேதம் தமிழ் செய்த மெய்யன்...." எனப் போற்றப்படும் ஆழ்வார்
   1. பெரியாழ்வார்
   2. நம்மாழ்வார்
   3. இராமானுஜர்
   4. மதுரகவியாழ்வார்
   5. திருக்குறிப்புத்தொண்டநாயனார்

(..................)

22. திருஞானசம்பந்தர் பற்றிய வரலாற்றைக் கூறும் நூல்கள்
   1. பெரியபுராணம், திருவாரூர்ப்புராணம்
   2. பெரியபுராணம், மறையசையந்தாதி
   3. திருத்தொண்டர்புராணம், சீர்காழித்தலபுராணம்
   4. பெரியபுராணம், திருக்கோவையார்
   5. திருத்தொண்டர் திருவந்தாதி, சிவபெருமான் மும்மணிக் கோவை

(..................)

23. வைணவ சமயத்தவர்களின் ஆகமநூல்கள்
   1. சங்கிதை
   2. தந்திரம்
   3. மூலாகமம்
   4. சூத்திரங்கள்
   5. மண்டலங்கள்

(..................)

24. சிவனுக்குரிய விரதங்களுள் ஒன்று

1. நவராத்திரி விரதம்
2. வரலக்சுமி விரதம்
3. கேதாரகௌரிவிரதம்
4. சதுர்த்தி விரதம்
5. திருக்கார்த்திகை விரதம்

(..................)

25. பொலிச்சடங்கின் போது சூடு மிதிக்குமிடம் எவ்வாறு அழைக்கப்படும்.

1. களம்
2. யாகம்
3. சடங்கு
4. தளம்
5. வேள்வி

(..................)

26. துவைத தத்துவம் சார்கருத்துக்களைக் கொண்ட தொகுதி

1. பரிணாமவாதம், ஐவகைப்பேதம்
2. அபச்சேதவாதம், விவர்த்தவாதம்
3. ஐவகைப்பேதம், ஆன்மாக்கள்பல
4. ஆன்மாக்கள்பல, அபேதவாதம்
5. பிரபக்தி, திரிபுக்காட்சி

(..................)

27. ஆணவத்தின் குணங்களைக் கொண்டமைவது

1. மோகம், குரோதம், கற்பம், அஞர்
2. நகை, கொலை, களவு, பொய்
3. கற்பம், சூக்தம், பரம், வியூகம்
4. குரோதம், அழுக்காறு, அவா வெகுளி
5. இன்னாச்சொல், மோகம், நகை

(..................)

28. சிலாபத்தில் அமைந்துள்ள பிரபலமான சிவனாலயம்

1. நகுலேஸ்வரம்
2. முன்னேஸ்வரம்
3. சந்திரகேதீஸ்வரம்
4. தான்தோன்றீஸ்வரம்
5. கதிர்காமம்

(..................)

29. இந்துப்போட் சு.இராசரத்தினம் ஆற்றிய பணிகளில் இரண்டு

1. நூல்கள் வெளியிட்டமை, ஆய்வுகள் செய்தமை
2. பாடசாலைகள் நடாத்தியமை, சைவச்சிறுவர் இல்லம் நடாத்தியமை
3. சமயப்பிரசங்கம் செய்தமை, சைவவுணவு அருந்தியமை
4. புதிய ஆலயங்கள் கட்டியமை, சமயவிழாக்கள் கொண்டாடியமை
5. சைவாசிரிய கலாசாலை நடாத்தியமை, புதிய ஆலயங்கள் கட்டியமை

(..................)

30. புறப்புறச் சமயங்கள் அடங்கும் தொகுதி

1. பாசுபதம், மாவிரதம், காபாலிகம்
2. பௌத்தம், பாசுபதம், ஐக்கியவாதம்
3. சாங்கியம், யோகம், நியாயம்
4. பௌத்தம், சமணம், சார்வாகம்
5. உலோகாயுதம், சாங்கியம், பாசுபதம்

(..................)

31. இந்திய மருத்துவத்தின் தந்தை என அழைக்கப்படுபவர்

1. தனவந்தி
2. ஆத்திரேயர்
3. சரகர்
4. சுஸ்ருதர்
5. ஆஞ்சநேயர்

(..................)

32. இந்திய வானியல் ஆராய்ச்சியாளர்களாக விளங்கியவர்கள்

1. புளிசர், ஆந்திரேயர்
2. வராகமிகிரர், சரகர்
3. சரகர், சனகர்
4. பிரமகுப்தர், சுஸ்ருதர்
5. ஆரியப்பட்டர், வராகமிகிரர்

(..................)

33. ஔவையார் பாடிய நூல்கள் அடங்கிய தொகுதி

1. ஞானக்குறள் , நான்மணிக்கோவை, நல்வழி
2. நவமணிமாலை, விநோதரசமஞ்சரி,ஞானாமிர்தம்
3. கபிலரகவல், தனிப்பாடற்றிரட்டு, ஆத்திசூடி
4. ஆத்திசூடி, கொன்றைவேந்தன், கபிலரகவல்
5. வாக்குண்டாம், நல்வழி, ஞானாமிர்தம்

(..................)

34. சுந்தரமூர்த்தி நாயனார் பெற்ற தீட்சையாவது

1. நயனதீட்சை
2. ஸ்பரிசதீட்சை
3. நிர்வாணதீட்சை
4. விசேடதீட்சை
5. சமயதீட்சை

(..................)

35. உபாகமங்களின் எண்ணிக்கை

1. 28
2. 108
3. 18
4. 320
5. 207

(..................)

*** தரப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை எழுதுக.**

A - விவேகசூடாமணி
B - பரமபாகவதர்
C - விவர்த்தவாதம்
D - பட்டாரகுரு
E - சைவக்காவலன்
F - மறைஞானசம்பந்தர்
G - ஆரியசதகம்
H - தேவராசவழிபாடு
I - புருஷகாரம்
J - சித்தாந்தபானு
K - இராமானுஜர்
L - பரஞ்சோதிமாமுனிவர்

36. சங்கருடைய வரலாற்றுடன் தொடர்புடையவை

1. C, H　2. A, J,G　3. A, C, G　4. A, K　5. G, K

(..................)

37. தென்கிழக்காசிய நாடுகளில் நிலவிய இந்து சமயம் தொடர்பான விடயங்கள்

1. D, H　2. H,J　3. D,F　4. H,D　5. C,I

(..................)

38. வைணவ சமயத்தவரிடம் செல்வாக்குச் செலுத்தும் விடயங்கள்

1. D, K　2. C, I　3. A, H　4. F,K　5. B,I

(..................)

39. சைவசித்தாந்த மரபுகளுடன் தொடர்புடையவை

1. E, K　2. F,K　3. D,F　4. F,L　5. J,K

(..................)

40. உபய வேதாந்தத்தை நிறுவியவர்

1. F　2. L　3. K　4. D　5. J

(..................)

41. கூற்று A : கச்சியப்பச் சிவாச்சாரியாரால் சைவத்தை நிலைநிறுத்த எழுதப்பட்ட காவியமே கந்தபுராணம் ஆகும்.
கூற்று B : நாயக்கர்கால பிற்பகுதியில் எழுந்த நூல் இதுவாகும்.

1. A யும் B யும் சரி
2. A சரி B பிழை
3. A பிழை B சரி
3. A யும், B யும் பிழை
5. B யால் உண்டானது A ஆகும்

(..................)

42. கூற்று A : ஈழத்துச் சைவ மறுமலர்ச்சியின் தந்தை ஆறுமுகநாவலராவார்.

கூற்று B : நாவலரின் விருப்பை நிறைவேற்ற எழுந்த நிறுவனமே சைவ பரிபாலனசபையாகும்.

1. A, B சரி
2. A ,B பிழை
3. A சரி B பிழை
4. B சரி A பிழை
5. B யால் உண்டானது A ஆகும்

(..................)

43. மலைதளிக் கோயில்களை தமிழ்நாட்டில் அமைத்துப் பெருமை பெற்றவர்கள்

1. குசானர்
2. நாயக்கர்
3. சோழர்
4. பல்லவர்
5. சங்கரர்

(..................)

44. சிவராத்திரி புராணம், திருத்தொண்டர் புராணசாரம் முதலிய நூல்களின் ஆசிரியர்கள்

1. சங்கரபண்டிதர், சிவபாதசுந்தரனார்
2. வரதபண்டிதர், உமாபதிசிவம்
3. ஆறுமுகநாவலர், வரதபண்டிதர்
4. விபுலானந்தர், நாகலிங்கம் பிள்ளை
5. அருணந்திசிவம், சி.வை.தாமோதரம்பிள்ளை

(..................)

45. பசுவதைக்கஞ்சி பரதேசம் போன ஈழத்துச் சைவ அறிஞர்

1. சாலிவாடிபுர ஞானப்பிரகாசர்
2. ஆறுமுகநாவலர்
3. த.கைலாசபிள்ளை
4. சி.வை.தாமோதரம்பிள்ளை
5. சுவாமி. ஞானப்பிரகாசர்

(..................)

46. நியாய வைசேடிக தரிசனத்தைச் சார்ந்தவர்கள்

1) பாஸ்கரர், அன்னம்பட்டர்
2) பதஞ்சலி, கணாதர், லொகாசி
3) லொகாசி, பதஞ்சலி, கணாதர்
4) காணதர், அன்னம்பட்டர், கபிலர்
5) பாஸ்கரர், அன்னம்பட்டர், சிவாதித்தர்

(..................)

## * கீழ்வருவனவற்றுள் ஒன்று ஏனையவற்றுடன் பொருந்தாது அச்சொல்லைத் தெரிவு செய்க.

47. 1) வாயு 2) தேயு 3) அப்பு 4) பிருதிவி 5) உளம் (..................)

48. 1) கபிலர் 2) கணாதர் 3) பதஞ்சலி 4) புத்தர் 5) கௌதமர் (..................)

49. 1) திரௌபதை 2) கண்ணகி 3) சீதை 4) அண்ணமார் 5) கிருஷ்ணன் (..................)

50. 1) பிரமயக்ஞம் 2) தேவயக்ஞம் 3) அன்னயக்ஞம் 4) மானிடயக்ஞம் 5) பூதயக்ஞம் (..................)

(50x2=100)

வடமாகாணக் கல்வித் திணைக்களம்

கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர்தர)ப் பரீட்சை - 2011

# இந்து சமயம் | 42 | T | II |

மாதிரி வினாத்தாள்-1

தரம் -13 பகுதி II மூன்று மணித்தியாலம்

**பகுதி I இலிருந்து எவையேனும் இரு வினாக்களையும் பகுதி II இலிருந்து எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

## பகுதி I

01) **"தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிது..." ஔவையார்**

i. புராணம் என்பதன் பொருள் யாது?

ii. பெரியபுராணத்தின் ஆசிரியர், மூல நூல், வகைநூல் என்பவற்றைத் தருக.

iii. பெரியபுராணத்தின் அமைப்புப்பற்றி சுருக்கமாக எடுத்துரைக்குக.

iv. பெரியபுராணம் சுட்டும் சங்கமவழிபாட்டின் சிறப்புக்களைத் தருக.

v. சைவ சமய வரலாற்றில் பெரியபுராணம் பெறும் முக்கியத்துவத்தை எடுத்துரைக்குக.

(2+3+3+5+7=20)

02) **பல்லவர்காலத்தில் வைதீகசமயங்கள் பெற்ற வளர்ச்சியினைக் கீழ்வரும் தலைப்புகளில் விளக்குக.**

i. பல்லவர்கால சூழல்

ii. பக்தியியக்கத்தின் எழுச்சி

iii. கோயில்கள்

iv. மன்னர்கள் ஆற்றிய பணிகள்

(3 + 5 + 6 + 6 = 20)

03) **இந்து மெய்யியல் மரபின் சீர்மையை வைணவத்தினூடாக வளர்த்த பெருமை இராமானுயருக்கு உரியதாகும்.**

i. "விஷிட்டாத்வைதம்" என்பதை தெளிவுபடுத்துக.

ii. இராமானுஜர் ஏற்கும் பிரமாண நூல்களையும், அளவைகளையும் தருக.

iii. விஷிட்டாத்வைத மெய்யியலின் கோட்பாடுகளை சுருக்கமாக எடுத்துரைக்குக.

iv. விஷிட்டாத்வைத, துவைத மெய்யியல்களுக்கிடையிலான தொடர்பினை எடுத்துக்காட்டுக.

(2 + 4 + 7 + 7 = 20)

## பகுதி II

04) மாணிக்கவாசகர், சைவவளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினை கீழ்வரும் தலைப்புகளின் அடிப்படையில் ஆராய்க

i. மாணிக்கவாசகர் வாழ்ந்த காலமும் சூழலும்

ii இயற்றிய நூல்களும் அவற்றின் சிறப்புக்களும்

iii செய்த பணிகளும் அற்புதங்களும்

iv. தத்துவ, பக்தி மரபுகளின் வெளிப்பாடு

(3+4+6+7 = 20)

05) ஒன்றை ஆராய்ந்து பகுப்பாய்வு செய்து பரிசோதனை மூலம் நிறுவுதல் அறிவியல் எனப்படும்.

i. வேத இலக்கியத்தில் "மருத்துவம்" சிறப்புற்று இருந்தமையை தெளிவுபடுத்துக.

ii. இந்துமருத்துவ வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்தவர்களைப் பட்டியற்படுத்துக.

iii. சோழர்காலம்வரை தமிழகத்தில் மருத்துவம் பெற்றிருந்த வளர்ச்சியை தெளிவுபடுத்துக.

iv. இந்து மருத்துவத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்குக.

(4+3+6+7 = 20)

06) இந்து மரபில் முதன்மை பெறும் மெய்யில்களுள் ஒன்று சைவசித்தாந்தம் ஆகும்.

i. சைவசித்தாந்தம் என்பதை விளக்கி அதன் சிறப்புக்களைக் கூறுக.

ii. பதியின் இருப்பை நிரூபிக்கும் முறையை எடுத்துரைக்குக.

iii. பதியின் இலக்கணங்களை தெளிவுபடுத்துக.

iv. முத்திநிலையில் இறை, ஆன்ம தொடர்பை தெளிவுபடுத்துக.

(5+5+5+5+ = 20)

07) இந்திய மண்ணில் செல்வாக்குற்ற சமயப் பிரிவுகளுள் ஒன்று சாக்தம் ஆகும் அதனைப் பின்வரும் தலைப்புகளில் ஆராய்க.

i. சாக்தசமயம் சார்ந்த நூல்கள்

ii. சாக்தசமயத்தின் தோற்றம் வளர்ச்சி

iii. வழிபாட்டுமுறை

iv. தற்காலத்தில் சாக்தசமயத்தின் நிலை

(3 + 6 + 5 + 6 =20)

08) கீழ்வருவனவற்றுள் எவையேனும் நான்கினைப் பற்றி சுருக்கமான குறிப்புக்கள் எழுதுக.

i. கரகம்

ii. திருக்கேதீஸ்வரம்

iii. குருவழிபாடு

iv சாங்கியம்

v. நடராஜவடிவம்

vi புருடார்த்தம்

(5 + 5 + 5+5 = 20)

# இந்துசமயம் - மாதிரி வினாத்தாள் - 1
## புள்ளித்திட்டம்
## பகுதி I,II

## பகுதி I

| | | | |
|---|---|---|---|
| 1. 1 | 2. 4 | 3. 5 | 4. 5 |
| 5. 1 | 6. 5 | 7. 4 | 8. 3 |
| 9. 4 | 10. 5 | 11. 2 | 12. 3 |
| 13. 5 | 14. 1 | 15. 2 | 16. 2 |
| 17. 5 | 18. 4 | 19. 1 | 20. 5 |
| 21. 2 | 22. 3 | 23. 1 | 24. 3 |
| 25. 1 | 26. 3 | 27. 1 | 28. 2 |
| 29. 2 | 30. 4 | 31. 1 | 32. 5 |
| 33. 1 | 34. 2 | 35. 5 | 36. 3 |
| 37. 1 | 38. 5 | 39. 4 | 40. 3 |
| 41. 2 | 42. 1 | 43. 4 | 44. 2 |
| 45. 1 | 46. 5 | 47. 5 | 48. 4 |
| 49. 5 | 50. 3 | | |

## பகுதி II

(1)

i. புரா + தானம் - முன்பு நடந்தது
புராதனமானது, பழமையானது, தெய்வங்களின் பழமை வாய்ந்த வரலாறு, கடந்தகால நிகழ்வுகளின் பதிவேடு

ii. ஆசிரியர் - சேக்கிழார்
மூலநூல் - திருத்தொண்டர்தொகை, வகைநூல் - திருத்தொண்டர் திருவந்தாதி

iii. 1. காப்பியமரபில் அமைந்தது,
2. முதல்நூல் திருத்தொண்டர் தொகை, வழிநூல், திருத்தொண்டர் திருவந்தாதி
3. 13 சருக்கம் 4286 பாடல்கள் கொண்டது.
4. உலகெலாம் முணர்ந்து ...... எனத்தொடங்கி முடிவது
5. திரு நகரச்சருக்கத்தில் தொடங்கி வெள்ளையானை சருக்கத்தில் முடிகின்றது.
6. சுந்தரமூர்த்தி நாயனாரை பாட்டுடைத் தலைவனாக் கொண்டு 63 நாயன்மாரின் வாழ்க்கை வரலாற்றை விரிவாக கூறுவது 9 தொகையடியார்கள் பற்றியும் கூறுவது.

iv. 1. கடவுள் வழிபாட்டை எளிமைப்படுத்தியமை
2. சாதிபேத மதக் கோட்பாடுகளுக்கு அப்பாற்பட்ட அன்புநெறியை வெளிப்படுத்தியமை
3. அடியார்களைப் போற்றிமதிக்கும் பண்பினை நிலைநாட்டியமை
4. எல்லா உயிர்களிடத்திலும் இறைவனை வெளிப்படுத்தியமை
5. சுய நோக்கு இல்லாத இறைவாழ்வை வெளிப்படுத்தியமை

v. 1. சைவசமயத்தின் முதல் நூலாகவும், தமிழ் காப்பியமாகவும் அமைந்தமை
2. இறைவனால் அடியெடுத்துக் கொடுக்கப்பட சேக்கிழாரினால் பாடப்பட்ட பெருமைக்குரியது.

3. சைவசமயக் கோட்பாடுகளை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லும் ஊடகமாக விளங்கியமை
4. நாயன்மார்களின் வரலாற்றின் மூலம் சைவ சமய பக்தி மரபை வெளிப்படுத்தியமை
5. சமயம், வழிபாடு, கலை, தத்துவம் பற்றிய கோட்பாடுகளை விளக்கியதுடன் சோழர்கால அரசியலையும் விளக்குவது.
6. சைவசமய பக்தி மரபு, ஆன்மீகம் முதலிய மரபுகளை விளங்கிக் கொள்வதற்கு அடிப்படையாக அமைவது.

(2+3+3+5+7=20)

02)

i.
1. வைதீக சமயங்கள் தம்மளவில் எழுச்சி பெற்றமை
2. அவைதிக சமயங்களான சமண பௌத்தம் ஆகிய சமயங்கள் சைவ வைணவசமயங்களுக்கு சவாலாக விளங்கின.
3. பக்தி இயக்க உருவாக்கம் சைவ வைணவ பக்தி நெறிவளம்பட்டது.
4. வைதிக நெறிக்கு அரச ஆதரவுகிடைத்தது.
5. சைவநெறி பொதுமக்கள் சார்பு மயப்பட்டது.

ii.
1. பல்லவர்கால சைவசமய மறுமலர்ச்சிக்கு வித்திட்டது பக்தி இயக்கம்.
2. பக்தி இயக்கத்தின் முன்னோடிகளாக சம்பந்தரும் அப்பர் சுவாமிகளும் விளங்கினர்.
3. பொது மக்களை சமய நெறியில் ஈடுபடவைப்பதில் பக்தி இயக்கம் பெருந்தொண்டாற்றியது.
4. திருமுறை பாராயணம், தலயாத்திரை, சமய வாதம் என்பவற்றில் பக்தி இயக்கத்தின் செல்வாக்கு காணப்பட்டது.
5. மன்னர்களின் ஆதரவும் காணப்பட்டது பக்தி இயக்கத்தினர் ஆலயப்பணிகளில் ஈடுபட்டனர்.
   புறசமயக்கட்டணம் — சைவ சமய மீட்டுருவாக்கம்
   கலைஞர்களை இணைத்தல் — இசையுடன் தோத்திரம் பாடல்
   இறைவனை அன்பு நெறியில் வழிபடல்

முதலிய துறைகளிலும் பக்தி இயக்கத்தின் செல்வாக்கு காணப்பட்டது. பக்தி இயக்கத்தின் எழுச்சியில் வைதிக நெறி செழிப்புற்றது.

iii.
1. இந்தியக் கோயிற்கலை முதன்முதலாக செல்வாக்குப் பெற்றது ஆகம மரபுகள் ஆலய அமைவுகளில் புகுத்தப்பட்டது.
2. நிரந்தர முறையிலான திராவிட முறைக் கோயில்களின் உருவாக்கம்
3. மகேந்திரவர்மன் குகைக் கோயில்களை ஆக்கினான். மலைதளி, கற்றளிக் கோயில்களின் எழுச்சி காணப்பட்டது.
4. ஆலயங்கள் ஆன்மீகத்தை மட்டுமன்றி கல்வி, கலை ஆகிய துறைகளையும் விருத்தி செய்தன.
5. காஞ்சி கைலாசநாதர் கோயில் காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோயில் என்பனவும் மாமல்லபுரம், சித்தன்ன வாசல் முதலிய கோயில்களும் செல்வாக்குப் பெற்றன.
6. கட்டடம், சிற்பம், இசை, நடனம், ஓவியம் முதலிய கலைகள் ஆலயங்கள் மூலம் சிறப்பாக வளர்க்கப்பட்டது.

iv.
1. மன்னர்கள் வைதிக சமயப் பற்றுடையவர்களாக விளங்கினர். ஆலயங்களையும், அதனை அடிப்படையாக கொண்ட கலைகளையும் வளர்ப்பதில் ஈடுபட்டனர்.
2. சிம்ம விஸ்ணு, குமார விஸ்ணு, மகேந்திரவர்மன், இராஜசிம்மன், மாமல்லன், நந்திவர்மன், பரமேஸ்வர வர்மன் முதலிய புகழ் பெற்ற மன்னர்கள் ஆட்சி செய்தனர்.
3. பொதுமக்கள் சமயபக்தி நெறியாளர்களுடன் மன்னர்கள் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தனர்.
4. ஆலயங்களுக்கு மன்னர்கள் தானம் வழங்கினர். பிராமணர்கள் ஆதரிக்கப்பட்டனர். குடுமியாமலைக் கல்வெட்டு மகேந்திரவர்மனின் கோயில்த் திருப்பணிகளைக் கூறுகின்றது.
5. மன்னர்கள் ஆலயங்களில் கலைகளை வளம்படுத்தியதுடன் தாமே கலைஞர்களாகவும் விளங்கினர் காஞ்சி கைலாச நாதர், மாமல்லபுரம், சித்தன்ன வாசல் கோவில்கள் இதற்கு எடுத்துக்காட்டாகும்.

(3+5+6+6=20)

## 03)

i. விசேடம் + அத்வைதம் விசிட்டாத்வைதம் எனப்படும் பிரமமாகிய விசிட்டம், விசேடியங்களாக உலகையும் உயிர்களையும் கொண்டுள்ளது. ஆகவே விசேட விசேடியங்களை உள்ளடக்கிய கொள்கை என்பதனால் விசிட்டாத்தைம் எனப்படும்.

ii. பிராமண நூல்கள்

| | |
|---|---|
| 1. உபநிடதம் | 4. சங்கரபாடியம் |
| 2. பகவத்கீதை | 5. வைஷ்ணவ ஆகமம் |
| 3. பிரமசூத்திரம் | 6. நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம் |

இவற்றிடன் வேதம் புராணம் இதிகாசம் என்பனவும் அடங்கும். அளவைகள் : காண்டல், கருதல், உரை

iii. 1. முப்பொருள் உண்மையை ஏற்றுக்கொள்ளுகின்றது பிரமம், ஆன்மா, உலகம் என்பன உண்மைகள் அதனால் தத்துவத்திரையம் எனப்படுகின்றது.
2. ஈஸ்வரன் - சித் - அசித் என்பன முப்பொருளாகும்.
3. பிரமத்தை விசேட பொருளாகவும் உலகு, உயிர் என்பவற்றை விசேடியங்களாகவும், குறிப்பிடுகின்றது.
4. பிரமாணங்களின் வழியில் முப்பொருள் விளக்கப்படல் வேண்டும்.
5. காரணவாதம் - பரிணாம வாதம் - சம்பந்தவாதம் - பேதவாதம் ஆகிய வாதங்களை முன்வைத்து கோட்பாட்டை நிறுவுதல்.
6. கடவுள், ஆன்மா, உலகம் ஆகிய மூன்று விடயங்கள் பற்றியும் தனித்தனியாக விளக்குதல் வேண்டும்.

iv. 1. பிரமம், ஆன்மா, உலகு எனும் முப்பொருளையும் உள்பொருள் என ஏற்றல்
2. வைணவச் சார்புடையதாக தமது மெய்யியலை கட்டமைத்தல்
3. காண்டல், கருதல், உரை என்பவற்றை பிரமாணமாக ஏற்றல்
4. சகுண பிரமதிற்கு முதன்மையளித்தல்
5. பிரமமாக விஷ்ணுவையும் முக்தி அடையும் இடமாக வைகுந்தத்தையும் கூறுதல்.
6. ஆன்மாக்களின் அறிவுக்கும் விடுதலைக்கும் காரணமாக அமைவது பிரமம்
7. ஆன்மாக்கள் பல: மூவகையான்மாக்கள்: கர்மத்தினின்றும் பக்தியால் இறைகருணையால் முக்தியடையும்
8. உலகு நித்தியப் பொருள்

(2+4+7+7=20)

## 04)

i. காலம்: கி.பி 9ம் நூற்றாண்டின் பிற்பகுதி (பாண்டியர் காலம்)

சூழல்:

தேவாரமுதலிகள் தோன்றி அவைதீகமதங்களிடம் இருந்து சைவசமயத்தை மீட்டெடுத்தகாலம்: சைவம் அரச ஆதரவு பெற்ற காலம். அவைதீக மதங்களுடன் சமயவாதங்கள் நிகழ்காலம், சைவம் மக்கள் மயமாகி புதிய ஆலய உருவாக்கம், ஆலய புணருத்தாரணம், சாதிச்சமநிலை, தமிழ்மொழியுணர்வு போன்றன தழைத்த காலம்

ii. திருவாசகம், திருக்கோவையார்.

சைவசித்தாந்தக்கருத்து, அறிவியற்கருத்து, இறையின் உருவச்சிறப்பு, பெருமை, ஆட்கொள்ளல், கழிவிரக்கம், பக்திமை, விடுதலை வேட்கை, நிலையாமை போன்ற கருத்துக்களை கொண்டிருத்தல்.

iii. பணிகள் - ஆட்கொண்டருளிய நிகழ்வினூடு அடியார்க்கெளியான் சிவபெருமான் என்பதை உணர்த்தியது.

சைவசித்தாந்தக் கருத்தை பாமர மக்களும் உணரச் செய்து சைவத்தை அரச, மக்கள் ஆதரவு பெற்றுச் செய்தது பக்தியூடாக இறைவனை அடைய வழிகாட்டியது சைவஅறிவியலை மக்கள்மயப்படுத்தியது.

அற்புதங்கள் - நரியை பரியாக்கியமையும் பரியை நரியாக்கியமையும் ;வைகையாறு பெருக்கெடுத்தமை

வாதிட்ட பௌத்தரை ஊமையாக்கிப் பின் பேசச் செய்தமை; பாவை பாடிய வாயால் கோவை பாடுக என இறைவனே விரும்பிக் கேட்டு எழுதி ஒப்பமிட்டமை

iv. தத்துவம் - பதி, பசு, பாசம் பற்றிய முப்பொருள் கோட்பாடுகளை வெளிப்படுத்தியமை / கடவுள் இருப்பை நிலைநாட்டியமை, இறைவனின் மேலான தன்மையைக் குறிப்பிட்டமை / குருவழிபாட்டின் சிறப்பு -சன்மார்க்கம்

கன்மம்

பிறவி

ஆன்மவிடுதலை

ஆணவமலத்தின் தன்மை

என்பனவற்றை பாடல்களில் வெளிப்படுத்தியமைச் இறைவனே குருவாக எழுந்தருளி திருவடி தீட்சை வழங்கியமை

பக்தி:-

சைவ மரபினை இசைப்பாடல்களில் வெளிப்படுத்தியமை சன்மார்க்க நெறிக்கு எடுத்துக் காட்டாக விளங்கி குருவழிபாட்டின் சிறப்பை வெளிப்படுத்தியமை

திருவாசகத்தில் கூறப்படும் அன்பு நெறி, சைவபக்தி நெறிக்கு எடுத்துக்காட்டாக விளங்கியமை திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்.

ஆலய வழிபாடுகளில் பஞ்சதோத்திர ஒழுங்கில் திருவாசகத்தின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துதல்.

இப்பக்திப் பாடல்கள் மூலம் இறைவழிபாட்டை எளிமைப்படுத்தியமை, பிற்காலத்தில் எழுச்சி பெற்ற பக்தி நூல்களுக்கு வழிகாட்டியமை

(3+5+6+7=20)

5)

i. இருக்குவேதம் - ஓஷதி சூக்தம் - வாதம், பித்தம், கபம் ஆகியவற்றை "திரிதாது" என்கிறது. கண், செவி என்பவற்றின் குறைபாடுகளை நீக்கும் மருத்துவர்கள் அஸ்வினி குமாரர்கள் என்கிறது.

சுக்கிலயசுர் - குஷ்டம், இதயநோய், காசநோய், சித்த சுவாதீனம் போன்ற நோய்கள் கூறப்படுவதோடு இவை நீங்க மந்திர உச்சாடனங்கள் மருந்தாக கூறப்படுகின்றன.

அதர்வணவேதம்:- பேஷஜானி சூத்தம், ஆயுஷ்யானிசூக்தம் மருத்துவப் பகுதிகளாக உள்ளன. மஞ்சட் காமாலை நீங்க சூரியக்கதிர்கள் உதவும் என்கிறது. **2ம் காண்டத்தின் 6 6ம், 67ம் சூக்தங்க**ளில் கிருமி நாசம் என்ற பகுதியில் நோய்க்கிருமிகள் பற்றி உள. மனித உடற் கூற்றியல், குருதிச் சுற்றோற்றம் பற்றியும் கூறப்பட்டுள்ளது.

ii. தன்வந்திரி, ஆத்திரேயர், சரகர், சுஸ்ருதர்.

iii. சங்ககாலத்தில் பதிற்றுப் பத்து, பாலைக்கலி, அகநாநூறு போன்றன மருத்துவரின் இயல்பு, அறுவைச்சிகிச்சை, மருந்துகள் பற்றியும் நோய்கள் பற்றியும் கூறுகின்றன.
சங்கமருவிய காலத்தில் திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம் போன்றவை பல்வேறு நோய்களையும் அவற்றிற்குரிய மருந்துக்கள் பற்றியும் கூறுகின்றன. திருக்குறளின் 95ம் அதிகாரம் "மருந்து" எனும் தலைப்பில் அமைந்துள்ளது.

பல்லவர்கால மன்னர் மருத்துவர்களுக்கு நிலங்களை மானியமாக வழங்கின்ர். மருத்துவ மூலிகைகள் பயிரிடப்பட்டன. அதிக வருவாயைப் பெற்றதால் அவர்கள் வரிசெலுத்தினர். வெப்ப நோய் நீக்கல், விஷமுறிப்பு போன்ற அருளாளர்களின் அற்புதங்கள் மருததுவத்துடன் தொடர்புடையன.

சோழமன்னர் மருத்துவமனைகள் அமைத்து மானியங்கள் கொடுத்து மருத்துவர்களைப் பேணினர். குந்தவை, சுந்தரச் சோழன் நினைவாக ஒரு மருத்துவமனையை நிறுவினார். (செங்கல்பட்டு முக்கூடல் விஷ்ணு கோயில் கல் வெட்டு) கைநாடிபார்ப்பவர், கட்டி முதலியவற்றை அறுத்து புண்களை ஆறவைப்பவர் (சல்லியக் கிரியை பண்ணுவான்) என இருவகை மருத்துவர் இருந்தனர். கோயில்களை அடுத்து மருத்துவமனைகள் காணப்பட்டன. அங்கு மருந்தாக்குவோர், தாதிமார் என்போர் இருந்துள்ளனர்.

iv. கீழைத்தேய நாடுகளின் வெப்பதட்பநிலை, உணவு, பழக்கவழக்கம், உடல், தொழில் என்பவற்றிற்கு ஏற்றதாக உள்ளது.
மூலிகைகள், உள்ளூர் உற்பத்திகள் என்பதால் நம்பகத்திற்கு உரியதும் பக்கவிளைவற்றது.
மேல்நாட்டு மருத்துவத்துறைக்கு ஆதார சுருதியாக இருப்பது. ஒவ்வொரு இந்துசமயியும் செய்யும் சமயச் செயற்பாடுகளில் மருத்துவ அம்சம் நிறைந்திருக்கின்றது. (உ-ம்: விரதம், யோகம், வழிபடும் முறை) யோகாசனம், தியானம், விரதம் போன்றன நோய்த்தடுப்பு வழியாக இருத்தல்.

(4+3+6+7=20)

*06)*

i. சைவம் + சித்தம் + அந்தம் - சிவப்பரம் பொருள் தொடர்பான நெறியின் முடிந்த முடிபான அறிவைச் சாதிப்பது இது.
சிறப்புக்கள் - வேதாகமத்தை பிரமாண நூல்களாகக் கொள்ளுதல் காண்டல், கருதல், உரை என்பவற்றை பிரமாணமாக ஏற்றல்; முப்பொருட்களை உண்மைப் பொருள்களாக ஏற்றல்; சற்காரியவாதிகள் திராவிட தத்துமாக விளங்குதல் முதலியன.

ii. *1.* பகுதிகளையுடையது உலகு, சடத்தன்மையானது. அதுதானாகத் தோன்றாது தோற்றுவிக்க ஒருவன் தேவை அவனே பதி உ-ம் பானை, குடை

*2.* கன்மம் செய்தவனை சென்றடையாது செய்தவனிடம் அதனைக் கொண்டு சேர்க்க ஒருவன் தேவை அவனே பதி

iii. *1.* இலக்கணம் 02 *1)* சொரூப இலக்கணம் *2)* தடத்த இலக்கணம்

*2.* சொரூப லக்கணம்
ஊரிலான், பேரிலான் குணம் குறி இலான்.
இப்படியன் இந்நிறத்தான் இவ்வண்ணத்தான் எனக் கூற முடியாதவன். போக்கிலான், கருவிகரணங்களுக்கு அகப்படாதவன் இதுவே அவனின் உண்மைநிலை

தடத்தலக்கணம் -
ஆன்மாக்களுக்கு அருள் புரியும் பொருட்டு தன்னிலையின்றும் ஒருபடி இறங்கிய நிலை இதுவாகும். முத்திருமேனி, ஐந்தொழில் எண்குணங்கள், பராசக்தி போன்றன கூறப்பட வேண்டும்.

iv. பாசத்தளையின் நின்றும் நீக்கி ஆன்மாக்களை முக்திநிலைக்கு இட்டுச் செல்லும் பதி அவன்தாளடைய அவனருள் வேண்டும். ஆன்மாவின் பக்குவத்திற்கு ஏற்ப மானிடச் சட்டை சாத்தியும் குருவாகியும் உள்ளொளியாயும் இறைவன் ஆட்கொள்வான். ஆன்மா சைவநாற்பாதம், குரு லிங்க, சங்கமவழிபாடு, தீட்சை, நாம வழிபாடு போன்றவற்றால் இறையை வணங்கும். அதனூடாக விதேகமுத்தி, சீவன் முக்தி என்பவற்றை தன்தன் பக்குவநிலைக் கேற்பப் பெறும். இறைவனுடன் இரண்டறக்கலந்து ஒன்றான நிலையை (தாடலை) அடையும்.

(5+5+5+5=20)

07) அறிமுகம்

i. வாமதந்திரங்கள், சகலகலாவல்லிமாலை, கனகதாரா, கேன உபநிடதம் லிங்கபுராணம், பார்கவபுராணம், மீனாட்சி அம்மை பள்ளைத் தமிழ். அபிராமி அந்தாமி, லலிதாசகஸ்ரநாமம், சரஸ்வதி அந்தாதி, சௌந்தர்ய லகரி.

ii. சிந்துவெளி தொல்பொருள் வெளிப்படுத்திய ஆதாரங்கள், வேதகாலப் பெண்தெய்வவழிபாடு, ஆகமங்கள் உபநிடத சிந்தனைகள், புராணக்கதைகள், மகாபுராணம் கூறும் கருத்துக்கள், சங்ககால நிலவழிபாட்டில் பாலைநிலத் தெய்வமாக விளங்கியமை, பல்லவர்காலத்தில் சிவவழிபாட்டுடன் இணைந்து கொண்டமை. தேவாரத் திருமுறைகளில் சக்தி பற்றிய கருத்துக்கள், சிவாலய வழிபாடுகளில் சக்திக்கும் முக்கியத்துவம், சோழர்காலத்தில் சக்திக்கு தனிக் கோயில் அமைக்கப்பட்டது. நாயக்கர் காலத்தில் மேலும் வளர்ச்சி பெற்றது. பிற்காலத்தில் சாக்தசமயத்தின் நிலை

iii. ஆகம நெறி சார்ந்த வழிபாடு, ஆகம நெறி சாராத வழிபாடு என இரு வழிபாட்டு முறைகள் காணப்படுகின்றது.

மந்திரம்
தந்திரம்
ஐந்திரம்
என்பன சக்தி வழிபாட்டில் உபாசனை முறைகளாகும்.

விரதங்கள் - மங்களவாரம், வரலட்சுமி விரதம், சுவர்ணகௌரி விரதம், சுமங்கலி பூஜை என்பன.

iv. சைவ சமயத்துடன் இணைந்து காணப்படுதல் சிவசக்தி தத்துவம் புராணமரபுகளில் காணப்படுதல். விரத வழிபாடுகளின் செல்வாக்கு நாட்டுப்புற வழிபாடுகளில் பெண் தெய்வங்களின் முக்கியத்துவம் இலங்கையிலும் இந்தியாவிலும் ஏனைய மேற்காசிய நாடுகளிலும் சக்திக்குரிய கோயில்களின் எழுச்சி

(3+6+5+6=20)

08) சிறுகுறிப்பு

i. கரகம்

1. கிராமியக் கலைகளில் முதன்மை தமிழர்களின் மரபுவழிக்கலைவடிவமாக விளங்குதல்.
2. சமயம், சமூகம், தொழில், கலை சார்ந்த மரபுகளை வெளிப்படுத்தல்
3. கரகம் என்ற சொல் அசைதல், ஒடுதல் என்ற விளக்கத்தை உடையது.
4. சமய நம்பிக்கை, கலையுணர்வு என்பவற்றை உணர்த்தும் கலையாக உள்ளது. தமிழ்நாடு ஆந்திரா, மலையாளம் ஆகிய இடங்களில் செல்வாக்குப் பெற்றது.

ii. திருக்கேதீஸ்வரம்

1. பஞ்ச ஈச்சரங்களில் முதன்மை
2. பாடல் பெற்ற தலம், மன்னார் மாந்தையில் அமைவிடம்
3. சோழர் காலத்தில் மீள அமைக்கப்பட்டது திராவிட கலையில் ஆகம மரபுகளில் கட்டப்பட்டது.
4. இராஜ இராஜேஸ்வரம், இராஜராஜேஸ்வர மகாதேவன் கோயில் முதலிய பெயர்களில் குறிப்பிடப்படுவது.

5. நித்திய நைமித்திய வழிபாடுகளில் முக்கியத்துவம் ; 15 நாட்கள் மகோற்சவம்
6. தலவரலாறு கூறும் நூல்கள் தட்சிண கைலாய மான்மியம், தட்சினி கைலாய புராணம்
7. மூர்த்தி, தல, தீர்த்தம், தலவிருட்சம் பற்றிய விளக்கம்
8. மன்னர் தானங்கள், கலை வளர்ச்சி என்பன பற்றிய விளக்கம்

iii. குருவழிபாடு

1. சைவசித்தாந்த வழிபாட்டு முறைகளில் ஒன்று குற்றத்தை நீக்குபவர். அறியாமையைப் போக்குபவர்.
2. இறைவனே குருவாக எழுந்தருளிவருதல் சர்வதேச குருவாக விளங்கும் தன்மை கொண்டவர் தட்சணாமூர்த்தி
3. சைவ சித்தாந்த நெறியில் குருவழிபாட்டின் மூலம் முத்தியடைந்தோர் 12 பேராவார்.
4. குருகீதை, பெரிய புராணம் என்பன குருவழிபாட்டின் மகத்துவம் பற்றிக் கூறும் நூல்களாகும்.

iv. சாங்கியம்

அறிமுகம்

1. அறுவகை தரிசனங்களில் ஒன்று
2. கபிலரினால் தோற்றுவிக்கப்பட்டது.
3. சாங்கியம் பற்றிய முதல் நூல் சாங்கிய காரிகை ஆகும்.
4. சாங்கியத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் புருடனும் பிரகிருதியுமாகும்.
5. சற்காரிய வாதக் கொள்கையை அடிப்படைவாதமாக ஏற்றுக் கொள்வது.

v. நடராஜ வடிவம்

1. சிவனின் மகேஸ்வர வடிவங்களில் ஒன்று
2. ஆனந்த வாழ்வும் உலக இயக்கத்தின் அடிப்படை என்று தத்துவத்தை விளக்குவது.
3. இறைவன் புரியும் பஞ்ச கிருத்திய தத்துவத்தை விளக்குவது.
4. சமய, தத்துவம், கலை என்ற தத்துவத்தின் அடிப்படையில் அமைதல்
5. இதன் அமைப்புமுறை பற்றி ஆகமமும் சிற்ப சாஸ்திர நூல்களும் குறிப்பிடுகின்றன.

vi. புருடார்த்தம்

1. இந்து மதம் வகுத்துக் கூறும் ஆன்மீக விடுதலைக்குரிய வழிகளில் முக்கியம் பெறுகின்றது.
2. அறம், பொருள், இன்பம், வீடு நான்கும் புருடார்த்தமாகும். இவை நாற்பயன் என்றும் இறுதிப் பொருள் என்றும் கொள்ளப்படும்.
3. அறத்தை முதன்மையாக கொண்ட புருடார்த்தங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்பானவை, வடமொழியில் தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் எனவும் கூறப்படும்.
4. ஒவ்வொருமனிதனும் ஆன்மீக இலட்சியத்தை அடைய வாழ்வின் நான்கு நிலைகளில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்கள் இதிலுள்ளன.
5. வாழ்வின் இலட்சியத்தை அடைய அறத்தின் வழி நின்று அவ்வழியில் பொருளைத் தேடி வாழ்க்கையினை அனுபவிக்கவேண்டும் என்பதே புருடார்த்தங்களின் குறிக்கோளாகும்.

“ஈதல் அறம் தீவினைவிட்டு ஈட்டுதல் பொருள்
காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே
இன்பம்.... பரமனை நினைத்து இம் மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு”

(5+5+5+5=20)

வடமாகாணக் கல்வித் திணைக்களம்

கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர்தர)ப் பரீட்சை - 2011

# இந்து சமயம் 42 T I

## மாதிரி வினாத்தாள்-2

தரம் -13 பகுதி I இரண்டு மணித்தியாலம்

கவனிக்க: எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1. மறைமுடிபு - ஞானகாண்டம் முதலிய பெயர்களால் குறிப்பிடப்படுவது
   1. வேதம் 2. புராணம் 3. உபநிடதம்
   4. பிரமசூத்திரம் 4. திருமுறை
   (..................)

2. திருஞானசம்பந்தரைக் குறிக்கும் வேறு பெயர்கள்
   1. வாகீசன், வன்றொண்டர் 2. சிவமணி, கோவை வேந்தன்
   3. தமிழாகரன், ஆளுடைய அரசு 4. சங்கரன், சிவகரன்
   5. தமிழாகரன், புகலிவேந்தன்
   (..................)

3. "திரையிவித்தியா" என்பது
   1. வேதங்கள் 2. இதிகாசம் 3. மும்மணிகள்
   4. மூவகை வேதங்கள் 5. கரணங்கள்
   (..................)

4. மனித வாழ்க்கையின் நான்கு படி நிலைகளைக் குறிப்பது
   1. அறம், பொருள், இன்பம், வீடு
   2. தாணம், தருமம், கொடை, வேள்வி
   3. பிராமணர், சத்திரியர், வைசிகர்
   4. பிரமச்சரியம், கிருகஸ்த்தம், வானப்பிரஸ்த்தம், சந்நியாசம்
   5. தர்மம், அர்த்தம், காமம், மோட்சம்
   (..................)

5. இருக்கு வேத கால வேண்டலில் முக்கியம் பெறும் தெய்வங்கள்
   1. சோமன், அக்கினி 2. இந்திரன், பிரஜாபதி
   2. சூரியன், உஷை 4. சோமன், வருணன்
   5. உருத்திரன், சரஸ்வதி
   (..................)

6. வடமொழியில் தர்ம சாத்திரங்களை இயற்றிவர்கள்
   1. வசிட்டர், போதாயனர், பரத்துவாசர், ஆபத்தம்பர்
   2. போதாயனர், இயமன், பரத்துவாசர், துரோணர்
   3. பிரகஸ்பதி, ஆபத்தம்பர், கார்தியாயனர், விஸ்ணு
   4. ஆபத்தம்பர், விஸ்ணு, நாரதர், பரத்துவாசர்
   (..................)

7. சங்ககாலத்தில் நில வழிபாட்டில் இடம் பெற்ற தெய்வங்கள் பற்றிக் கூறும் நூல்
   1. பரிபாடல் 2. தொல்காப்பியம் 3. திருக்குறள்
   4. திருமுருகாற்றுப்படை 5. ஐங்குநூறு
   (..................)

8. பின்வருவனவற்றுள் சிவாகமங்கள் அடங்கும் தொகுதி
   1. காரணம், மகடம், வாதுளம், சந்திரஞானம்
   2. காமிகம், சோதிடம், பாகவதம், சூக்குமம்
   3. வாதுளம், கிரணம், சாரதாதிலகம், காமிகம்
   4. பிரபேதம், காமிகம், சூக்குமம், சுபாம்புவம்
   5. சோதிடம், சிற்பம், காமிகம், வாதுளம்
   (..................)

9. முப்பொருளுக்கு மிடையிலுள்ள தொடர்பினை அப்பிரசித்தி கொள்கை மூலம் விளக்கியவர்

1. சங்கரர் 2. மத்துவர் 3. இராமானுஜர்
4. மெய்கண்டதேவர் 5. பாதராயணர்

(..................)

10. குமரகுருபரர், அருணகிரிநாதர், மெய்கண்ட தேவர் ஆகியோர் இயற்றிய நூல்கள் அடங்கும் தொகுதி

1. சதமணிக்கோவை, கந்தரனுபூதி, சிவஞானபோதம்
2. சகலகலாவல்லிமாலை, வேல் விருத்தம், திருவுந்தியார்
3. பண்டாரமும் மணிக்கோவை, திருப்புகழ், சிவஞானபோதம்
4. நீதி நெறி விளக்கம், கந்தரலங்காரம், திருவருட்பயன்
5. சரஸ்வதிமாலை, மயில் விருத்தம், உண்மை நெறி விளக்கம்

(..................)

11. வைணவ சமயத்தவர்களின் முக்கிய கோட்பாடுகளில் ஒன்று

1. நித்திய வழிபாடு 2. அக வழிபாடு 3. புருஷகாரம்
4. ஆவாகனம் 5. மகேஸ்வர பூஜை

(..................)

12. திருக்கோணேஸ்வர வரலாறு கூறும் நூல் தொகுதி

1. மகாவம்சம், கோயிற்புராணம்
2. கரசைப்புராணம், தீபவம்சம்
3. தட்சிண கைலாச புராணம், தட்சிண கைலாச மான்மியம்
4. சேது புராணம், மட்டக்களப்பு மான்மியம்
5. தட்சிணகைலாச புராணம், நல்லைக்குறவஞ்சி

(..................)

13. நவீன வேதாந்தி நவயுக சங்கரர் முதலிய பெயர்களால் குறிப்பிடப்படுபவர்

1. மத்துவர் 2. சுவாமி விவேகானந்தர்
3. காஞ்சி காம கோடிகள் 4. தயானந்த சரஸ்வதி
5. ஸ்ரீஇராமானுஜர்

(..................)

14. சிதம்பரம் பற்றிய தல புராணங்களில் முக்கியமானது

1. திருப்பரங் கிரிப்புராணம் 2. கோயிற் புராணம்
3. தியாகேசசுவாமிகள் 4. திருச்செந்தூர் புராணம்
5. சிதம்பரமும்மணிக்கோவை

(..................)

15. "திரிவார்க்கம்" என்பதில் அடங்குபவை

1. இருக்கு, யசுர், சாமம் 2. ஆணவம், கன்மம், மாயை
3. மனம், வாக்கு, காயம் 4. சூரியன், சந்திரன், அக்கினி
5. பதி, பசு, பாசம்

(..................)

16. வேதங்களில் மகவான் - சதக்கிருது முதலிய பெயர்களில் குறிக்கப்பட்ட தேவர்

1. வருணன் 2. இந்திரன் 3. உருத்திரன்
4. அக்கினி 5. சரஸ்வதி

(..................)

17. தைமுதல் ஆனி வரையிலான காலம்

1. உத்தராயணம் 2. தட்சணாயம் 3. முதல் ஆவமாகம்
4. மாசிமகம் 5. யாவும் சரி

(..................)

18. "தமிழாகமம்" எனப் போற்றப்படும் நூல்

1. திருக்குறள் 2. திருமந்திரம் 3. புராணம்
4. பகவத்கீதை 5. வேதம்

(..................)

19. மகரசங்கிராந்தி என்றழைக்கப்படும் பண்டிகை

1. தீபாவளி 2. ஆடிப்பிறப்பு 3. தைப்பொங்கல்
4. சித்திரைப் புத்தாண்டு 5. கார்த்திகை விளக்கீடு

(..................)

20. திருத்தொண்டர் தொகை அடங்கும் திருமுறை

1. 3ம் திருமுறை 2. 7ம் திருமுறை 3. 8ம் திருமுறை
4. 9ம் திருமுறை 5. 12ம் திருமுறை

(..................)

21. வைரவ விரதங்களில் ஒன்று

1. சிவராத்திரி 2. நவராத்திரி 3. சித்திரைப்பரணி
4. ஏகாதசி 5. பிரதோஷம்

(..................)

22. இலங்கையில் கண்ணகி வழிபாட்டை ஆரம்பித்த மன்னன்

1. கஜபாகு 2. பராக்கிரமபாகு 3. தேவநம்பியதீசன்
4. விஜயபாகு 5. விஜயன்

(..................)

23. ஆகந்துக மலம் எனப்படுவது

1. ஆணவம் 2. கட்டு 3. கன்மம்
4. மூலமலம் 5. பாசம்

(..................)

24. சைவ சித்தாந்தத்தின் படி உலக உற்பத்திக்கு முதல் காரணமாக அமைவது

1. ஆணவம் 2. கன்மம் 3. பதி
4. மாயை 5. பசு

(..................)

25. பஞ்சாங்கம் குறிப்பிடும் ஐந்து அங்கங்களாக அமைவது

1. கலை, நியதி, காலம், அட்டம், திரி
2. வாரம், திதி, யோகம், கரணம், நட்சத்திரம்
3. திதி, அட்டமி, யோகம், காலம், நியதி
4. நியதி, யோகம். காலம், நட்சத்திரம், பூரணை

(..................)

26. ஈழத்தில் தோற்றம் பெற்ற முதற் சோதிட நூல் எனப்படுவது

1. சரசோதிமாலை 2. செகராசசேகரமாலை
3. சந்தான தீபிகை 4. அக்கினி மித்திரம்
5. சந்தான மணி

(..................)

27. பகவத்கீதை குறிப்பிடும் ஞானயோகம் என்பது

1. அறிவு வழி 2. உழைப்பு வழி 3. அன்பு வழி
4. செல்லும் வழி 5. தன்னலம் கருதாத வழி

(..................)

28. சிவராத்திரி மகிமை கூறும் நூல் தொகுதி

1. கந்தபுராணம், இலிங்கபுராணம், சிவராத்திரி புராணம்
2. பெரியபுராணம், சிவபுராணம், விஷ்ணு புராணம்
3. சிவராத்திரி புராணம், திருவிளையாடற் புராணம், பிரம்மபுராணம்
4. இலிங்க புராணம், பதும புராணம், சிவபுராணம்
5. கந்தபுராணம், பெரியபுராணம், சிவராத்தி புராணம்

(..................)

29. உருத்திரமணிகள் குறித்து நிற்பது
1. புராணம், வேதம்
2. வேதங்கள், ஆகமங்கள்
3. இதிகாசம், வேதங்கள்
4. திருமுறைகள், தோத்திரப்பாடல்கள்
5. புராணங்கள், பக்திப்பாடல்கள்

(..................)

30. மெய்கண்ட சாத்திர நூல்களில் காலத்தால் முந்தியது
1. திருவுந்தியார்
2. சிவஞானபோதம்
3. சிவப்பிரகாசம்
4. உண்மை நெறி விளக்கம்
5. திருவருட் பயன்

(..................)

31. "ஈழத்து சிதம்பரம்" எனப் போற்றப்படும் ஆலயம்
1. மண்டூர்
2. செல்வச்சந்நிதி
3. காரைநகர்ச் சிவன் கோவில்
4. நல்லூர்
5. மாவிட்டபுரம் கந்தசாமி கோவில்

(..................)

32. தூல லிங்கம் எனப்படுவது
1. விமானம்
2. பத்திர லிங்கம்
3. கோபுரம்
4. கர்ப்பக்கிரகம்
5. வசந்த மண்டபம்

(..................)

33. திருமுறைகளில் இடம் பெறும் பெண் அடியார் இருவர் அடங்கும் தொகுதி
1. ஆண்டாள், மங்கையாற்கரசி
2. மங்கையாற்கரசி, ஔவையார்
3. மீராபாய், காரைக்கால் அம்மையார்
4. காரைக்கால் அம்மையார், மங்கையற்கரசி
5. பரவையார், ஔவையார்

(..................)

34. "உலக மக்களின் நன்மை கருதி செய்யப்படும் கிரியை" எனப்படுவது.
1. அபயக்கரியை
2. வீட்டுக்கிரியை
3. பூர்வக்கிரியை
4. கோவிற் கிரியை
5. அஸ்தி சஞ்சயனம்

(..................)

35. நாட்டார் வழிபாட்டில் முக்கிய இடம் பெறுவது
1. கிரியை
2. வேள்வி
3. சடங்கு
4. அகவழிபாடு
5. கலையாடுதல்

(..................)

36. சாங்கிய தத்துவம் கூறும் அடிப்படைக் கோட்பாடுகள்
1. பதி, பசு, பாசம்
2. புருடன், உலகம்
3. கடவுள், கன்மம்
4. ஆன்மா, மாயை
5. புருடன். பிரகிருதி

(..................)

37. சைவ நாற்பாதங்களில் முப்பொருள் பற்றிய கொள்கையை விளக்குவது
1. சரியை
2. கிரியை
3. ஞானம்
4. யோகம்
5. அந்தர்யாகம்

(..................)

38. "சைவ சமயி" என்ற அடிப்படைத் தகுதியைக் கொடுப்பது
1. விரதம்
2. வேள்வி
3. பூஜை
4. தீட்சை
5. உபநயனம் பெறல்

(..................)

39. ஐந்தாம் வேதம் எனப்படுவது
1. தேவாரம்
2. புராணம்
3. மகாபாரதம்
4. இராமயாணம்
5. உபநிடதம்

(..................)

40. சிவத்தொண்டன் கல்வி நிலையங்கள் ஊடாக யாழ்ப்பாணத்தில் ஆன்மீக ஒளியைப் பரப்பிய சித்தர்
1. யோகர்சுவாமிகள்
2. கடையிற்சுவாமி
3. பசுபதிச் செட்டியார்
4. நாவலர்
5. சேர். பொன். இராமநாதன்

(..................)

**பின்வரும் சொற்களில் ஒன்று ஏனையவற்றுடன் பொருந்தாது அச்சொல்லினை இனங்காண்க.**

41. 1. நாரதர் 2. அகத்தியர் 3. வசிட்டர்
4. சத்தியஜோதி 5. வாமதேவர்

(.................)

42. 1. பரிபாடல் 2. நெடுநல்வாடை 3. ஆசாரக்கோவை
4. குறுந்தொகை 5. திருமுருகாற்றுப்படை

(.................)

43. 1. பேசஞானி 2. புருசகர்மானி 3. அபிசாரணி
4. ஆயிஸ்யசூக்தம் 5. சதருத்திரியம்

(.................)

44. 1. பரிணாமவாதம் 2. விவர்த்த வாதம் 3. தர்மபூதஞானம்
4. சம்பந்தவாதம் 5. பேதாபேத வாதம்

(.................)

45. 1. முண்டகம் 2. தைத்திரியம் 3. தலவகாரம்
4. ஐதரேயம் 5. சுவேதாஸ்வரதம்

(.................)

**பின்வரும் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு விடைகளைத் தெரிவு செய்க.**

A- நவீன வேதாந்த சங்கம் F - சங்கரர்
B- திருக்குறள் G - இராமகிருஸ்ணமிசன்
C- மனுதர்ம சாஸ்திரம் H - நாயக்க மன்னர் காலம்
D மாயாவாதம் I - இந்தியச் சட்டம்
E - இராஜகோபுரம் J- உலகப் பொது மறை

(.................)

46. சமயச் சீர் திருத்தம், சமுதாயப்பணி என்பவற்றுடன் தொடர்புடையது.
1. A யும் C உம் 2. B யும் J உம் 3. A யும் G உம்
4. C யும் H உம் 5. B யும் C உம்

(.................)

47. வேதாந்தக் கோட்பாடுகளுடன் தொடர்புபடுவது
1. A யும் B உம் 2. B யும் I உம் 3. C யும் F உம்
4. D யும் F உம் 5. E யும் H உம்

(.................)

48. உலக மாந்தர்களால் போற்றி மதிக்கப்படுகிறது
1. C யும் G உம் 2. A யும் D உம் 3. A யும் J உம்
4. B யும் D உம் 5. B யும் J உம்

(.................)

49. இந்தியக் கட்டடக்கலை வளர்ச்சி தொடர்பானவை
1. E யும் H உம் 2. B யும் D உம் 3. B யும் J உம்
4. B யும் D உம் 5. B யும் I உம்

(.................)

50. இந்து தர்மம் பற்றிய மிகப்பழமையான கோட்பாடுகளுடன் தொடர்பு படுவது
1. B யும் J உம் 2. C யும் I உம் 3. A யும் F உம்
4. D யும் I உம் 5. C யும் H உம்

(.................)

வடமாகாணக் கல்வித் திணைக்களம்

கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர்தர)ப் பரீட்சை - 2011

# இந்து சமயம் | 42 | T | II |

மாதிரி வினாத்தாள்-2

தரம் -13 பகுதி II மூன்று மணித்தியாலம்

**பகுதி I இலிருந்து எவையேனும் இரு வினாக்களையும் பகுதி II இலிருந்து எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

## பகுதி I

01) **"வேதங்கள் இந்து சமயத்தின் மூல நூல்களாகப் போற்றப்படுகின்றன"**

i. வேதங்களின் மறு பெயர்கள் நான்கு தருக.
ii. வேதகாலத் தேவர்கள் பற்றி சுருக்கமாகக் குறிப்பிடுக.
iii. வேத கால வழிபாட்டு முறை பற்றி கூறுக.
iv. வேதகால தத்துவ சிந்தனை பற்றி சுருக்கமாகத் தருக.

(2+6+6+6=20 புள்ளிகள்)

02) **"இந்து தத்துவ மரபிற்குப் பெருமை சேர்த்தது சங்கரர் வேதாந்தமேயாகும்"**

i. அத்வைதம் என்பதன் பொருள் யாது?
ii. சங்கரரின் இந்து சமயப்பணிகள் நான்கு தருக?
iii. சங்கரர் கூறும் பிரமம் பற்றிக் குறிப்பிடுக.
iv. சங்கரர் கூறும் உலகம் பற்றிய கருத்துக்களைக் குறிப்பிடுக.
v. சங்கரர் கூறும் முத்தி பற்றி விளக்குக.

(2+3+6+4+5=20 புள்ளிகள்)

03) **பல்லவர் கால கட்டடிக்கலை வளர்ச்சிக் கட்டங்களை மேல் வரும் அடிப்படையில் விளக்குக.**

i. பிரதான வளர்ச்சிக் கட்டங்கள் ii. பொதுப் பண்புகள் (12+8=20 புள்ளிகள்)

## பகுதி II

04) திருஞானசம்பந்தர் சைவ சமய வளர்ச்சிக்கு உதவியவற்றை விளக்குக. (20 புள்ளிகள்)

05) அறுவகைச் சமயங்களில் ஒன்றான காணபத்தியத்தின் சிறப்பினை மேல் வரும் அடிப்படையில் விளக்குக.

i. தோற்றமும் வளர்ச்சியும் ii. வழிபாட்டு முறை
iii. சமுதாயச் செல்வாக்கு iv. ஏனைய சமயங்களுடன் கொண்ட தொடர்பு

(6+4+4+6=20 புள்ளிகள்)

06) இந்து சமுதாய வரலாற்றில் "புருடார்த்தங்கள்" பெறும் முக்கியத்தவத்தினை விளக்கி ஆராய்க. (20 புள்ளிகள்)

07) திருக்கோணேஸ்வர ஆலயத்தின் சிறப்புப் பற்றி ஒரு கட்டுரை வரைக. (20 புள்ளிகள்)

08) மேல்வருவனவற்றுள் எவையேனும் நான்கினைப் பற்றிச் சுருக்கமான குறிப்புக்கள் எழுதுக.

i. கண்ணகி வழிபாடு ii. ஆகமம் iii. ஆணவம்
iv. தீட்சை v. சங்கம வழிபாடு vi. கந்தபுராணம்

(5+5+5+5=20 புள்ளிகள்)

## இந்துசமயம் - மாதிரி வினாத்தாள் - 1
## புள்ளித்திட்டம்
## பகுதி I,II

## பகுதி I

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 3 | 2. | 5 | 3. | 4 | 4. | 4 | 5. | 1 |
| 6. | 3 | 7. | 2 | 8. | 1 | 9. | 3 | 10. | 3 |
| 11. | 3 | 12. | 3 | 13. | 2 | 14. | 2 | 15. | 3 |
| 16. | 2 | 17. | 1 | 18. | 2 | 19. | 3 | 20. | 2 |
| 21. | 3 | 22. | 1 | 23. | 3 | 24. | 4 | 25. | 2 |
| 26. | 1 | 27. | 1 | 28. | 1 | 29. | 2 | 30. | 1 |
| 31. | 3 | 32. | 3 | 33. | 4 | 34. | 4 | 35. | 3 |
| 36. | 5 | 37. | 3 | 38. | 4 | 39. | 3 | 40. | 1 |
| 41. | 4 | 42. | 3 | 43. | 5 | 44. | 2 | 45. | 3 |
| 46. | 3 | 47. | 4 | 48. | 5 | 49. | 1 | 50. | 2 |

## பகுதி II

*01)*

i. சுருதி / எழுதாமறை / சுயம்பு / வித்தை / நிகமம் / அபௌருசேயம் / நித்தியம்

ii. வேத அறிமுகம்

*33* வகையான தேவர்கள்

மண் / விண் / இடை பிரிவு

இந்திரன்

- இடைவெளிக்குரிய தெய்வம்
- இருக்கு வேதப் பாடலில் *250*
- போருடன் தொடர்புபட்ட தெய்வம்
- அம்பு / வில் / கோடாரி போன்ற ஆயுதங்களை வைத்திருப்பவன்
- குதிரைகள் பூட்டிய தேரில் வலம் வருவான்
- இவன் மனைவி இந்திராணி
- இடி மின்னலுடன் தொடர்புபட்டவன்
- இவனை மகவான் / சதக்கிருது / வச்சிரகா / என்றும் அழைப்பர்
- வேதப்பாடலில் இவனுக்கு கை, கால், உடல் போன்றன குறிப்பிடப்படுகின்றன.
- இவன் சோம பானம் அருந்துவதில் நிகரற்றவன்

வருணன்

- விண்ணுக்குரிய முதன்மைத் தெய்வம்
- இருக்கு வேத பாடல்கள் - *12*
- பாடல்களில் உடல் உறுப்புக்கள் சித்தரிக்கப்பட்டுள்ளது.
- இவன் ஒரு ஒழுக்க கடவுள்
- இவளை "ரிதசய கோபன்" எனவும் அழைப்பர்
- மழையுடன் தொடர்புபட்ட தெய்வம்

* சூரியன், சந்திரனை இரு கண்களாகக் கொண்டு சகல நடவடிக்கைகள கவனித்து வருகின்றான்.
* குற்றம் செய்கின்றவர்களை தண்டிக்கும் அதேவேளை மற்றவர்களை பாதுகாத்தும் வருகின்றான்
* சக்கரவத்திகளுக்கெல்லாம் சக்கரவத்தியாக விளங்குகின்றவன்
* மழையை பூமிக்கு கொண்டுவந்த பெருமைக்குரியவன்
* கன்மக் கோட்பாடுகளுக்கு முன்னோடியாகவும் விளங்குகின்றான்
* இவன் ஒரு அறக் கடவுளாகவும் சித்தரிக்கப்படுகின்றான்

அக்கினி

* மண்ணுக்குரிய முதன்மைத் தெய்வம்
* வேதப்பாடல்கள் 200
* வேதப்பாடலில் இவனுக்கும் உடல் உறுப்புக்கள் வர்ணிக்கப்பட்டுள்ளது.
* சிவன் ஒரு புரோகிதக் கடவுள்
* இவனுக்கு விருப்பமான உணவு ஆகுதிப் பொருள்களும் சமித்துக்களும்
* இவன் சுவாலை விட்டு எரியும் போது நான்கு பக்கமும் முகங்கள் காணப்படும்.
* பழுப்பு நிறத் தாடியும் பொன் நிறமான பற்களும் காணப்படுகின்றது
* வானத்தில் கழுகாகவும் நீரில் அன்னமாகவும் பிறந்தவுடன் பசுக் கன்றாகவும் தூண்டி விட்டால் குதிரையாகவும் காட்சி தருவான்
* நாம் கொடுக்கின்ற உணவுகளை தனது நாக்கினால் கொண்டுசென்று உரியவரிடம் கொடுப்பான்

முடிவுரை

இவ்வாறாக ஏனைய தேவர்களும் காணப்படுகின்றார்கள்

iii. * இயற்கைத் தெய்வ வழிபாட்டு முறை

* பல தெய்வக் கோட்பாட்டு வழிபாட்டு முறை (33 வகை, மண் / விண் / இடை)
* ஒரு தெய்வ வழிபாட்டு முறை ( ஏகம் சத் விப்ரா)
* பரப் பரம் பொருள் வழிபாட்டு முறை (பிரஜாபதி)
* பண்டமாற்று அகவழிபாட்டு முறை
* யாக வேள்வி வழிபாட்டு முறை
* இசை வழிபாட்டு முறை
* சதருத்திய வழிபாட்டு முறை

iv. * பல தெய்வக் கோட்பாட்டுத் தத்துவம்

* ஒரு தெய்வக் கோட்பாட்டுத்தத்துவம் (ஏகம் சத்....)
* பரம் பொருள் கோட்பாட்டுத் தத்துவம் (பிஜாபதி)
* சதருத்திய தத்துவம்
* ரிதம் / ஒழுக்கம் / அற கோட்பாட்டுத் தத்துவம்
* புருசூக்தம் / நாரதீயசூக்தம் / பிரம சூக்தம் (இருக்கு வேத 10ம் மண்டலப் பாடல்)
* உலகப் படைப்பு பற்றிய தத்துவம்
* பிற்கால தத்துவங்கள் தோற்றம் பெறவழிவிட்டமை
* கன்மம் மறுபிறப்பு பற்றிய கோட்பாடுகள்
* ஞானம் பற்றிய கொள்கை

(2+6+6+6=20)

02) i. ❋ அ + துவைதம் - இரண்டல்ல என்பதாகும்

அ - அல்ல, துவைதம் - இரண்டு

❋ உள் பொருள் இரண்டல்ல

ii. ❋ அறுவகைச் சமயப் பிரதிஸ்தாபகர்

❋ மடங்கள் அமைத்தல்

❋ நூல்கள் எழுதியமை

❋ கோவில் அமைத்தமை

❋ சீடர் பரம்பரையை உருவாக்கியமை

❋ அத்வைதசிந்தனைகளை பரப்பியமை

iii. ❋ பிரமமானது முதன்மையானது (பரிபூரணமானது)

❋ அநாதியானது, அந்தமற்றது, அழிவில்லாதது, எங்கும் நிறைந்திருப்பது

❋ பிரமம் - ஆன்மா தொடர்பு

❋ நிர்குணநிலை, சகுணநிலை

iv. ❋ உலகம் ஒரு பொய்த் தோற்றம்

❋ விவர்த்தவாத விளக்கம் (பாம்பு + கயிறு)

❋ பிரமமே உலகாகத் தோன்றுகின்றது

❋ உலகத் தோற்றத்திற்கு மாயையே காரணமாகும்

v. ❋ பிரமமாகத்தன்னை உணர்தலே முக்தியாகும்

❋ பிரமஞானம் உதயமாகும் போது மாயை மறைந்து விடுகின்றது.

❋ இப் பிறவியிலேயே முத்தியை பெறலாம்

❋ ஞானம் முக்திக்குரிய வழியாகும்

❋ ஞானத்திற்குரிய வழியாக நற் கருமம், மனனம், சிரவணம் நிருத்தியாசனம், கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல்

(2+3+6+4+5=20)

03) i)

| | | |
|---|---|---|
| ❋ குகைக் கோயில்கள் | - மகேந்திரவர்மன் | கி. பி (600 - 630) |
| ❋ ஒற்றக்கால் கோயில்கள் | - நரசிம்மவர்மன் | கி. பி 630 - 674 |
| ❋ கற்றளிகள் | - இராசசிம்மன் | கி. பி 680 - 730 |
| ❋ கற்றளிகள் | - நந்திவர்மன் | கி.பி 730 - வீழ்ச்சி வரை |

ii.

| | |
|---|---|
| ❋ குகைக் கோயில்கள் | - திருச்சிராப்பள்ளி, மண்டகப்பற்று, குடுமியாமலை |
| ஒற்றைக்கல் | - மாமல்லபுர ரதங்கள் |
| கற்றளிகள் | - காஞ்சிபுரம் கைலாச நாதர், வைகுந்தப் பெருமாள் கோயில், ஏகாம்பர நாதர் கோயில், வரதராசப் பெருமாள் கோயில், மாமல்லபுரக் கடற்கரைக் கோயில்கள் |

(2+6+6+6=20)

02) i. ❋ அ + துவைதம் - இரண்டல்ல என்பதாகும்
அ - அல்ல, துவைதம் - இரண்டு
❋ உள் பொருள் இரண்டல்ல

ii. ❋ அறுவகைச் சமயப் பிரதிஸ்தாபகர்
❋ மடங்கள் அமைத்தல்
❋ நூல்கள் எழுதியமை
❋ கோவில் அமைத்தமை
❋ சீடர் பரம்பரையை உருவாக்கியமை
❋ அத்வைதசிந்தனைகளை பரப்பியமை

iii. ❋ பிரமமானது முதன்மையானது (பரிபூரணமானது)
❋ அநாதியானது, அந்தமற்றது, அழிவில்லாதது, எங்கும் நிறைந்திருப்பது
❋ பிரமம் - ஆன்மா தொடர்பு
❋ நிர்குணநிலை, சகுணநிலை

iv. ❋ உலகம் ஒரு பொய்த் தோற்றம்
❋ விவர்த்தவாத விளக்கம் (பாம்பு + கயிறு)
❋ பிரமமே உலகாகத் தோன்றுகின்றது
❋ உலகத் தோற்றத்திற்கு மாயையே காரணமாகும்

v. ❋ பிரமமாகத்தன்னை உணர்தலே முக்தியாகும்
❋ பிரமஞானம் உதயமாகும் போது மாயை மறைந்து விடுகின்றது.
❋ இப் பிறவியிலேயே முத்தியை பெறலாம்
❋ ஞானம் முக்திக்குரிய வழியாகும்
❋ ஞானத்திற்குரிய வழியாக நற் கருமம், மனனம், சிரவணம் நிருத்தியாசனம், கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல்

(2+3+6+4+5=20)

| | | |
|---|---|---|
| 03) i) ❋ குகைக் கோயில்கள் | - மகேந்திரவர்மன் | கி. பி (600 - 630) |
| ❋ ஒற்றக்கால் கோயில்கள் | - நரசிம்மவர்மன் | கி. பி 630 - 674 |
| ❋ கற்றளிகள் | - இராசசிம்மன் | கி. பி 680 - 730 |
| ❋ கற்றளிகள் | - நந்திவர்மன் | கி.பி 730 - வீழ்ச்சி வரை |

| | |
|---|---|
| ii. ❋ குகைக் கோயில்கள் | - திருச்சிராப்பள்ளி, மண்டகப்பற்று, குடுமியாமலை |
| ஒற்றைக்கல் | - மாமல்லபுர ரதங்கள் |
| கற்றளிகள் | - காஞ்சிபுரம் கைலாச நாதர், வைகுந்தப் பெருமாள் கோயில், ஏகாம்ப நாதர் கோயில், வரதராசப் பெருமாள் கோயில், மாமல்லபுரக் கடற்கரைக் கோயில்கள் |

* நூல்களில் அறம் பற்றிய கருத்துகள்
* அறம் / தருமம் / ஒழுக்கம் / நீதி / கடமை / சத்தியம் / ஒப்புரவு
* உலக வாழ்க்கை செம்மை பெற பொருள் அவசியம்
* அறவழியில் பொருள் ஈட்டுதல்
* பொருளை அறத்தின் வழியில் பயன்படுத்தல்
* "பொருள் இல்லார்க்கு இவ்வுலகமில்லை அருள் இல்லார்க்கு அவ்வுலகமில்லை"
* பொருள் பெறப்படும் வழிகள் (நெசவு / விவசாயம் / வர்த்தகம்)
* அன்பும் அறமும் பொருளும் உலகியல் வாழ்வுக்கு அடிப்படை
* குடும்ப வாழ்வில் கணவன் மனைவி நல்லுறவு, குடும்ப உறவு, சமூகத் தொடர்பு என்பவற்றுக்கு அறமே அடிப்படை
* சிற்றின்பம் பற்றிய கருத்துக்கள் (தனியாள், கணவன், மனைவி, பிள்ளைகள், உலக உறவுகள்)
* "காதலர் இருவர் கருத்து ஒருமித்து ....."
* கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்....." - வீடு
* தொகுப்பு

(20 புள்ளிகள்)

07)
* ஈழத்து சில தலங்கள் பற்றிக் குறிப்பிடல்
* அமைவிடம்
* இதிகாச புராண கதை மூலம் வரலாற்று
* மூர்த்தி, தல, தீர்த்த சிறப்பு
* தல விருட்சம்
* திருவிழா பற்றிய கருத்துக்கள்
* சிறப்பாக கொண்டாடப்படும் நிகழ்வுகள்
* அந்நியர் காலத்தில் இருந்த நிலை
* தலப் பெருமைகள் கூறும் இலக்கியங்கள்

(20 புள்ளிகள்)

08) i. கண்ணகி வழிபாடு
* நாட்டுப்புறத் தெய்வங்களில் ஒன்று
* அம்பிகையின் அம்சமாக புராணங்களில் குறிப்பிடப்படுவது
* தமிழகத்தில் சங்க காலத்தில் அறிமுகம்
* இலங்கையில் 2ம் கஜபாகு அறிமுகப்படுத்தியமை
* ஈழத்தில் வன்னி / யாழ் / மட்டக்களப்பில் செல்வாக்கு
* படை, பலியிடுதல், தீமிதித்தல், பண்டமெடுத்தல், பாக்குத் தெண்டல், கலையாடுதல் போன்ற சடங்குகள் முக்கியம்
* மட்டக்களப்பிலுள்ள காரைதீவில் மிகப் பழைய கோவில் உள்ளது.

ii. ஆகமம்
* வேதம் பொது ஆகமம் சிறப்பு
* ஆகமம் என்பதன் பொருள்
* ஆகமங்கள் 28 (உருத்திர பேதம் - 18, சிவபேதம் - 10)

❋ ஆகமங்களில் ஆலய அமைப்பு, பூசை முறை, கிரியைகள், வழிபாட்டுமுறை போன்ற பல விடயங்கள் பேசப்படுகின்றன.

iii. ஆணவம்

- ❋ மும்மலங்களில் ஒன்று
- ❋ ஆணவம் என்பதன் விளக்கம்
- ❋ ஆணவத்தை மூலமலம் / இருண்மலம் / கொடியமலம் / சகல மலம்என்பர்
- ❋ ஆணவத்துக்கு எண்குணங்கள்
- ❋ ஆணவம் ஆன்மாவிற்கு குணமா? குற்றமா? பற்றிய விளக்கம்
- ❋ ஆணவத்தை விளக்க குறிப்பிடும் உவமைகள் நெல்லுக்கு உமி போல, செம்பில் களிம்பு போல
- ❋ திருவருட் பயன் பாடல் அடிகள் மூலம் விளக்கங்கள்
- ❋ ஆணவம் அழிவற்றது முத்தி நிலையில் இறைவனின் திருவருட்பார்வைபட்டு வலிகுன்றி இருக்கும்.
- ❋ இறைவன் குருவடிவில் வந்து ஆணவம் பெற்ற விஞ்ஞான கலரை ஆட்கொள்ளுவான்
- ❋ ஆணவத்தின் குணங்கள் - விகற்பம், கற்பம், குரோதம், மோகம், கொலை, அஞர், மதம், நகை

iv. தீட்ஷை

- ❋ சைவ சமயி என்தற்கு அதிகாரத்தை தருவது
- ❋ தீட்ஷை என்பதன் விளக்கம்
- ❋ தீட்ஷை வகை விளக்கங்கள் = சாதார தீட்சை - நிராதரதீட்சை
- ❋ தீட்சை பெற்றால் கடைப்பிடிக்க வேண்டிய நியமங்கள்
- ❋ தீட்சை வழங்க இருக்க வேண் டிய தகுதிகள்
- ❋ தீட்சையின் மூன்று வகை 1) சமய தீட்சை - சாதாரதீட்சை
  2) 2ம் தீட்சை - விசேட தீட்சை
  3) நிர்வாண தீட்சை - முத்தி தீட்சை
- ❋ தீட்சைவழங்கும் முறைகள் = நயனம், ஸ்பரிசம், மானசம், வாசகம், சாஸ்திரம், யோகம், ஔத்திரி தீட்சை

v. சங்கமவழிபாடு

- ❋ சங்கமம் என்பதன் பொருள் சிவனடியார் கூட்டம்
- ❋ அடியார் கூட்டத்தை வழிபடுதல்
- ❋ மூவகை வழிபாட்டில் ஒன்று
- ❋ சங்கம வழிபாட்டில் சிறந்து விளங்கியவர் விறன் மிண்ட நாயனார்
- ❋ சங்கம வழிபாட்டில் முத்தி பெற்றோர் - 18
- ❋ சங்கம வழிபாட்டின் பெருமையைக் கூறுவது பெரியபுராணம்
- ❋ குலச்சிறையார், வாகீசர், சுந்தரர ஆகியோர், சங்கம வழிபாட்டைப் பேணியோர்களில் முக்கியமானவர்கள். சுந்தர திருத்தொண்டர் தொகை பாடியமை சங்கம வழிபாட்டின் உயர்வைக் காட்டும்.

❋ சிவனை வழிபட்டாலும் சிவனடியாரை வழிபட்டாலும் பயன் ஒன்றுதான் என்ற கொள்கையை விளக்குவது.

vi. கந்தபுராணம்

- தமிழ் மொழிப்புராணங்களில் ஒன்று
- கச்சியப்பச் சிவாச்சாரியரால் தோற்றுவிக்கப்பட்டது
- முருகனை பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது.
- ஆறு காண்டங்களைக் கொண்டது.
- 10,000 இற்கு மேற் பட்ட பாடல்களைக் கொண்டது
- "திகட சக்கர" என்று இறைவனால் அடி எடுத்துக் கொடுக்கப்பட்டது.
- "நன்றி மறத்தலினால் வரும் கேடு" என்பதை விளக்குவது
- "புராண நன்நாயகம் " எனச் சிறப்பிக்கப்படுவது

(5+5+5+5=20)

வடமாகாணக் கல்வித் திணைக்களம்

கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர்தர)ப் பரீட்சை - 2011

# இந்து சமயம் | 42 | T | I |

## மாதிரி வினாத்தாள்-3

தரம் -13 பகுதி I இரண்டு மணித்தியாலம்

**கவனிக்க : எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1. வேதத்தின் கர்மகாண்டப் பகுதியாகச் சுட்டப்படவது
   1. சங்கிதை, உபநிடதம்
   2. உபநிடதம், பிராமணம்,
   3. சங்கிதை, பிராமணம்
   4. ஆரணியம், உபநிடதம்
   5. ஆரணியம், சங்கிதை

(............)

2. சிவாகமங்களின் கிரியாபாதத்தினுள் அடங்குபவை
   1. மந்திரம், சிவசின்னம், உற்சவம்
   2. அட்டாங்கயோகம், ஆறுவகை ஆதாரங்கள், லிங்கம்
   3. பிராயச்சித்தம். உருவலக்கணம், காமியம்
   4. முப்பொருள், உலகு, ஆதாரங்கள்
   5. கோயில் வீதி, அட்டமாசித்தி, முப்பொருள்

(............)

3. சைவ சித்தாந்தம் கூறும் ஆன்மவிடுதலைக்குரிய மூன்று படிநிலைகள்
   1. சிரவணம், மனனம், நிவிர்த்தியாசனம்
   2. ஆணவம், கன்மம், மாயை
   3. அகவழிபாடு, தீட்சை, சிவாலய வழிபாடு
   4. சிவசின்னம், தலயாத்திரை, மகேஸ்வர வழிபாடு
   5. தலயாத்திரை, அகவழிபாடு, மனனம்

(............)

4. வைஷேடிக தத்துவத்தை விளக்கி வைஷேடிக சூத்திரம் எனும் நூலை எழுதியவர்
   1. கணநாதர்
   2. சோமநாதர்
   3. பதஞ்சலி
   4. மத்துவர்
   5. கபிலர்

(............)

5. பஞ்சபூத தலங்கள் மூன்று அடங்கும் தொகுதி
   1. காஞ்சி, மதுரை. பழநி
   2. காஞ்சி, சிதம்பரம், திருவானைக்கா
   3. சிதம்பரம், மதுரை, திருவையாறு
   4. காசி, திருவாரூர், திருவிற்குடி
   5. மதுரை, பிரகதீஸ்வரம், திருநள்ளாறு

(............)

**பின்வரும் விடயத்தொகுதியை அடிப்படையாக் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

A- துளசிதாசர்
B - மாமல்லபுரம்
C- மகரசங்கிராந்தி
D - முட்டிமங்கலம்
E- ஆறுமுகநாவலர்
F- ஆடிவேல் விழா
G- உத்தராயணகாலம்
H- குமாராலயதீபம்
I - பரமபாவதர்
J- நரசிம்மவர்மன்
K- நித்தியகருமவிதி
L மாதம்பை ஐயனார் கோயில்

6. தைப்பொங்கல் பண்டிகையுடன் தொடர்புபடுவது
   1. C,H
   2. C,G
   3. F,G
   4. D,G
   5. C,L

(............)

7. வடநாட்டு வைணவநெறியுடன் தொடர்புபட்டவை
   1. A,I
   2. B,J
   3. F,I
   4. C,G
   5. D,J

(............)

8. இந்தியக் கலைகளுடன் தொடர்புபடும் விடயங்கள்

1. D,L 2. A,J 3. B,J
4. A,H 5. B,I

(............)

9. நாட்டுப்புற வழிபாட்டுடன் தொடர்புபட்டவை

1. C,G 2. F,K 3. C,J
4. D,B 5. D,L

(............)

10. இலங்கையில் கி.பி 19ம் நூற்றாண்டில் நிலவிய சைவசமயத்துடன் தொடர்புபடுபவை

1. A,L 2. D,G 3. E,K
4. A,F 5. H,F

(............)

11. கௌமார சமயக் கோட்பாடுகளுடன் தொடர்புபடும் விடயங்கள்

1. F,H 2. D,K 3. E,H
4. A,D 5. C,I

(............)

## சரியான விடைகளைத் தெரிவு செய்க

12. அத்வைதம்பற்றிய அடிப்படைக் கோட்பாடுகளை முன்வைத்தவர்கள்

1. சங்கரரும் மத்துவரும் 2. இராமானுஜரும், வியாசரும்
3. பாதராயணரும் கபிலரும் 4. சங்கரரும் கௌடபாதரும்
5. கோவிந்தபாதரும் நீலகண்டரும்

(............)

13. உமாபதி சிவாச்சாரியார் இயற்றிய நூல்கள்கொண்ட தொகுதி

1. கொடிக்கவி, வினாவெண்பா, ஆசாரக்கோவை
2. திருவருட்பயன், கோயிற்புராணம், திருமுறைகண்ட புராணம்
3. சேக்கிழார் புராணம், நீதிவெண்பா, நெஞ்சுவிடு தூது
4. சிதம்பரபுராணம், சிவப்பிரகாசம், திருக்கோவையார்
5. கொடிக்கவி, திருப்புனயூர்புராணம், திருத்தொண்டர்புராணசாரம்

(............)

14. திருஞான சம்பந்தரின் சமகாலத்தில் வாழ்ந்த இரு நாயன்மார்கள்

1. அப்பர், சேரமான் பெருமாள் 2. சுந்தரர், மாணிக்கவாசகர்
3. அப்பர், கண்ணப்ப நாயனார் 4. அப்பர், மங்கையற்கரசியார்
5. அப்பூதியடிகள், காரைக்கால் அம்மையார்.

(............)

15. சுபக்கம், பரபக்கம் என்னும் இரு பகுதிகளை கொண்ட சித்தாந்த நூல்

1. சிவஞானபோதம் 2. திருவருட்பயன்
3. பெரியபுராணம் 4. உண்மைநெறி விளக்கம்
5. சிவஞானசித்தியார்

(............)

16. அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கம், சட்டம், பழக்கவழக்கம், என்பனவற்றின் முழுமைத் தொகுதி

1. பண்பாடு 2. நாகரிகம் 3. சித்தாந்தம்
4. ஆன்மீகம் 5. கலாசாரம்

(............)

17. 'ஸ்தபதி' என்பவன்

1. பஞ்சபுராணம் ஓதுபவன் 2. கோயிலைப் பரிபாலனம் செய்பவன்
3. கோயிலுக்கு நிதி வழங்குபவன் 4. கிரியைகளை மேற்கொள்ளுபவன்
5. கோயில் கட்டிடத்தை நிர்மாணிப்பதில் தேர்ச்சி பெற்றவன் (............)

18. சைவசமய மரபில் பஞ்சாசனம் என்பதில் அடங்காதது

1. சிம்மாசனம் 2. பத்மாசனம் 3. யோகாசனம்
4. அரியாசனம் 5. அனந்தாசனம்

(............)

19. சிந்துவெளிக்கால கலை வடிவங்களின் மகோன்னதத்தை விளக்கும் சான்றாக அமைவது

1. சந்திரவட்டக்கல் 2. நடராஜசிலை 3. தஞ்சைப்கோயில்
4. சந்திரசேகர வடிவம் 5. மாமல்ல புரச்சிற்பங்கள்

(............)

20. வேதத்தின் உபாங்கமாக அமைவது

1. ஸ்மிருதி 2. ஆகமம் 3. திருமுறைகள்
4. பகவத்கீதை 5. இருக்குவேதம்

(............)

21. ஐவகைத் தரிசனங்களை முன்வைத்த பெரியார்கள் அடங்கும் தொகுதி

1. சங்கரர், ஆளவந்தார், கபிலர் 2. பதஞ்சலி, நாரதர், கணநாதர்
3. கபிலர், சைமினி, பதஞ்சலி 4. கபிலர், மகாவீரர், நாரதர்
5. பதஞ்சலி. மத்துவர், இராமானந்தர்

(............)

22. சித்தாந்த சாஸ்திரங்களின் செயல் நூலினை இயற்றியவர்

1. மெய்கண்டார் 2. மறைஞானசம்பந்தர்
3. அருணந்தி சிவம் 4. மனவாசகங் கடந்த தேவர்
5. உமாபதி சிவாச்சாரியர்

(............)

23. "ஐமனை சங்கரித்தமை" ஆகிய அற்புதம் நிகழ்த்தப்பட்ட திருத்தலம்

1. திருவதிகை 2. திருக்கடவூர் 3. திருவிற்குடி
4. திருக்கோவலூர் 5. திருக்குறுக்கை

(............)

24. இசை நூல்களின் தொகுதி

1. யாழ்நூல், பக்திசூத்திரம், காசியபம். தசமூலம்
2. யாழ்நூல், தசமூலம், மயமதம், மானசாரம்
3. காமசூத்திரம், பக்தி சூத்திரம், சாகுந்தலம், வீணாதந்திரம்
4. தேவாரசங்கிர்த்தலம், நாகசங்கீத சங்கிரகம், வீணாதந்திரம். தலவகாரம்
5. வீணாதந்திரம், சாகுந்தலம், காசியபம், மானசாரம்

(............)

25. சைவர்களால் அகச்சந்தான குரவர்களாகச் சுட்டப்படுவோர்

1. திருநந்திதேவர், சனற்குமாரர், சத்தியஞானதரிசினிகள், பரஞ்சோதி முனிவர்
2. திருநந்திதேவர், சனகர், ஸ்ரீகண்டர், வஷிட்டர்
3. சனகர், சனாதனர், சனத்தனர், சனற்குமாரர், ஸ்ரீகண்டர்
4. மெய்கண்டார், அருணந்திசிவம், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவம்
5. மெய்கண்டார், அருணந்திசிவம், மனவாசங்கடந்தார், உமாபதிசிவம்

(............)

26. நம்மாழ்வாரால் பாடப்பட்ட நூல்களுள் ஒன்று

1. திருமாலை 2. திருமொழி 3. பெரியதிருமொழி
4. திருவாய் மொழி 5. பெருமாள் திருமொழி

(............)

27. "யாழ்ப்பாணக் கலாசாரம் கந்தபுராணக்கலாசாரம்" எனக் கூறியவர்

1. புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை 2. பண்டிதமணி கணபதிப்பிள்ளை
3. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் 4. சுவாமி விபுலானந்தர்
5. மு.கந்தையா

(............)

28. ஈழத்தின் சைவசமயவளர்ச்சிக்குப் பங்காற்றியோர்

1. சிவசங்கரபண்டிதர், கதிரவேற்பிள்ளை, விவேகானந்தர்
2. நாவலர், கணபதிப்பிள்ளை, திரு.வி.கல்யாணசுந்தரம்
3. த.கைலாசபிள்ளை, செந்திநாதையர், முருகேசபண்டிதர்
4. சிவாக்கிரயோகிகள், பசுபதிச் செட்டியார், முருகேச பண்டிதர்
5. சிவசங்கரபண்டிதர், முருகேச பண்டிதர், பசுபதிச் செட்டியார்

(............)

29. இராமானுஜரால் எழுதப்பட்ட நூல்கள் கொண்ட தொகுதி

1. வேதாந்ததீபம், சர்வமூலம்
2. ஸ்ரீபாஷ்யம், பாகவத தார்ப்பரிய நிர்ணயம்
3. வேதாந்தசங்கிரகம், கீதாபாஷ்யம்
4. ஸ்ரீரங்க கத்யம், சூரியபிரபாவம்
5. ஆரியசதகம், விவேகசூடாமணி

(.............)

30. கோயிற்புராணத்தைப் பாடியவர்

1. சபாபதி நாவலர்
2. இளமுகனார்
3. சிவநந்தையார்
4. உமாபதி சிவம்
5. குமாரசாமிப்புலவர்

(.............)

31. கட்டுத்தளி கலை மரபிற்குரிய மன்னன்

1. நந்திவர்மன்
2. இராஜசிம்மன்
3. இராஜேந்திரன்
4. இராஜஇராஜேஸ்வரன்
5. மகேந்திரவர்மன்

(.............)

32. கிராமிய வழிபாட்டை புலப்படுத்தும் இலக்கியங்கள்

1. கோவலனார் கதை, திருக்கரைசைப்புராணம்
2. சிலம்பு கூறல், நித்திகருமவிதி
3. கிளிவிடுதூது, கலிங்கத்துப் பரணி
4. கண்ணகிவழக்குரை சிலம்பு கூறல்
5. கைலாயமாலை, சரசோமி மாலை

(.............)

33. இந்து சமய வளர்ச்சிக்கு ஆதரவு வழங்கிய சிங்கள மன்னர்கள்

1. துட்டகைமுனு, எல்லாளன்
2. காசியப்பன், 2ம் மகிந்தன்
3. சங்கிலியன், எல்லாளன்
4. தேவநம்பியதீசன், காசியப்பன்
5. துட்டகைமுனு, 2ம் சேனன்

(.............)

34. வட இந்திய பக்திநெறியில் குறிப்பிடத்தக்கவர்கள்

1. இராமதாசர், குலசேகராழ்வார்
2. துளசிதாசர், சங்கரர்
3. கபிர்தாசர், இராமானந்தர்
4. மீராய்பாய், மத்துவர்
5. சூர்தாசர், இராமானுஜர்

(.............)

35. நடராஜ மூர்த்தத்தில் உடுக்கு ஏந்திய கை குறிப்பது

1. படைத்தல்
2. காத்தல்
3. அருளல்
4. மறைதல்
5. அழித்தல்

(.............)

## பின்வரும் சொற்களுள் ஒன்று பொருத்தமற்றது அச்சொல்லை இனங்காண்க

36.
1. சிவபுராணம்
2. ஸ்கந்தபுராணம்
3. இலிங்கபுராணம்
4. பிரமபுராணம்
5. கூர்ம புராணம்

(.............)

37.
1. மகேஸ்வரி
2. காமாரி
3. காலாரி
4. மாதங்காரி
5. சலந்தாரி

(.............)

38.
1. லாடதேவர்
2. புளிசர்
3. கூடலூர்க்கிழார்
4. போசராசபண்டிதர்
5. வராகமிரர்

(.............)

39.
1. மனுஸ்மிருதி
2. திருக்குறள்
3. சிலப்பதிகாரம்
4. மணிமேகலை
5. ஆத்திசூடி

(.............)

40.
1. சிவம்
2. சக்தி
3. சதாசிவன்
4. நாதம்
5. விந்து

(.............)

**கீழ்வருவனவற்றுள் "அ" பகுதிக்குப் பொருத்தமானதை "ஆ" பகுதியில் இருந்து தெரிவு செய்க**

| | "அ" | | "ஆ" |
|---|---|---|---|
| 41. | ஆலயவழிபாடு | ( ) | (1) மகேந்திர வர்மன் |
| 42. | பெருமாக்கோதையர் | ( ) | (2) வேதாந்தம் |
| 43. | குணபதீஸ்வரம் | ( ) | (3) தொண்டரடிப்பொடியாழ்வார் |
| 44. | திருப்பள்ளியெழுச்சி | ( ) | (4) திருமுறை ஆசிரியர் |
| 45. | சேவலாத்துவிதம் | ( ) | (5) சூர்னோற்சவம் |

**பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

46. கூற்று A - கன்னட தேசத்தில் தோன்றித் தமிழகம் மட்டுமல்லாமல் ஈழத்திலும் பரவிய சமயம் வீரசைவம் ஆகும்
கூற்று B - இச்சமயப் பிரிவு வசுகுப்தரால் தோற்றுவிக்கப்பட்டது.
1. A,B சரி 2. A,B பிழை 3. A சரி B பிழை
4. A பிழை B சரி 5. கூற்று A யால் கூற்று B உண்டானது

(............)

47. கூற்று A - முதலாம் இராசேந்திரன் பெருங்கோயிலைக் கட்டினான்
கூற்று B - முதலாம் இராஜஇராஜன் கங்கை கொண்ட சோழேஸ்வரத்தைக் கட்டினான்
1. A,B சரி 2. A,B பிழை 3. A சரி B பிழை
4. A பிழை B சரி 5. கூற்று A யால் கூற்று B உண்டானது

(............)

48. கூற்று A - மாண்டுக்கிய காரிகையை எழுதியவர் கௌடபாதர் ஆவார்
கூற்று B - பிரமசூத்திரம் மகாபாரதத்தின் பகுதிகளில் ஒன்றாகும்
1. A,B சரி 2. A,B பிழை 3. A சரி B பிழை
4. A பிழை B சரி 5. கூற்று A யால் கூற்று B உண்டானது

(............)

49. கூற்று A - சங்க இலக்கியங்களில் சைவம் பற்றிய குறிப்புக்கள் உள்ளன.
கூற்று B - சிவன் எனும் சொல் சங்க இலக்கியங்களில் இடம் பெறவில்லை
1. A,B சரி 2. A,B பிழை 3. A சரி B பிழை
4. A பிழை B சரி 5. A க்கும் B க்கும் தொடர்பில்லை

(............)

50. கூற்று A கரகாட்டம், காவடி, கும்மி, போன்றன கிராமிய கலை வடிவங்கள் ஆகும்.
கூற்று B - பரதம், கதகளி, ஒடிசி போன்றன சாஸ்திரிய கலை வடிவங்கள் ஆகும்
1. A,B சரி 2. A,B பிழை 3. A சரி B பிழை
4. A பிழை B சரி 5. கூற்று A யால் கூற்று B உண்டானது

(............)

(2x50=100 புள்ளிகள்)

வடமாகாணக் கல்வித் திணைக்களம்

கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர்தர)ப் பரீட்சை - 2011

# இந்து சமயம் | 42 | T | II |

மாதிரி வினாத்தாள்-3

தரம் -13 பகுதி II மூன்று மணித்தியாலம்

**பகுதி I இலிருந்து எவையேனும் இரு வினாக்களையும் பகுதி II இலிருந்து எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

## பகுதி I

01. "இந்து சமய கிரியை பற்றிய அடிப்படைகளையும் சைவ சமயம் பற்றிய கோட்பாட்டு ரீதியான விளக்கங்களையும் ஆகமங்கள் கொண்டுள்ளன"
 i. ஆகமம் என்பதன் பொருள் யாது?
 ii. ஆகமத்தின் உட் பிரிகளை விளக்குக?
 iii. ஆகமம் கூறும் கிரியை மரபினை விளக்குக

(3+5+12=20 புள்ளிகள்)

02. "இந்து தத்துவச் சிந்தனைகளின் கருவூலமாக உபநிடதங்கள் விளங்குமாற்றை மேல்வரும் அடிப்படையில் விளக்குக.
 i. உபநிடத காலம்
 ii. உபநிடதங்களின் அமைப்பு முறை
 iii. பிரமம், ஆன்மா பற்றிய கருத்துக்கள்
 iv. பிற்கால தத்துவ வளர்ச்சிக்கான பங்களிப்பு

(2+3+8+7=20 புள்ளிகள்))

03. "சைவர்கள் இவ்வுலகுக்கு அளித்த நன் கொடைகளுள் தலையானது" திருமுறைகளாகும்.
 i. திருமுறை என்பதன் பொருள் யாது?
 ii. திருமுறைகளை வகுத்துக் காட்டுக.
 iii. திருமுறைப் பாடல்களில் காணப்படும் சைவசித்தாந்த கருத்துக்களை தொகுத்து தருக

(2+6+12=20 புள்ளிகள்)

## பகுதி II

04. "விரதங்களும் பண்டிகைகளும் வாழ்வை வழிப்படுத்துவன"
 i. விரதம் என்றால் என்ன?
 ii. விரதங்களுக்கும் பண்டிகைகளுக்குமான வேறுபாடுகள் ஐந்து தருக.
 iii. கடமை விரதங்கள் இரண்டு தருக?
 iv. தைப்பொங்கல் பற்றி சுருக்கமாக எடுத்துக் கூறுக.

(2+5+2+11=20 புள்ளிகள்)

05. பல்லவ கால வைணவ சமய வளர்ச்சியில் பெரியாழ்வாரின் பங்களிப்பினை விளக்குக.

(20 புள்ளிகள்)

06. நாட்டுப்புற கலை வடிவங்களில் காவடி பெறும் செல்வாக்கினை விளக்குக.

(20 புள்ளிகள்)

07. "சிவ விக்கிரக கலைமரபில் தக்ஷிணாமூர்த்தி வடிவம் தனித்துமுடையது" மேல்வரும் தலைப்புக்களில் ஆராய்க.
 i. சிவ மூர்த்தங்கள் நான்கு தருக.
 ii. விக்கிர அமைப்பு
 iii. சமயதத்துவக் கருத்து
 iv. சிவாலயங்களில் பெறும் இடம்

(2+7+8+3=20 புள்ளிகள்)

08. மேல்வருவனவற்றுள் எவையேனும் நான்கினைப் பற்றிச் சுருக்கமான குறிப்புக்கள் எழுதுக.
 i. பெரிய புராணம்
 ii. திருஞானசம்பந்தர்
 iii. அக்கினி
 iv. பகவத்கீதை
 v. தேவாரம்
 vi. கோபுரம்

(5+5+5+5=20 புள்ளிகள்)

## இந்துசமயம் - மாதிரி வினாத்தாள் - 3
## புள்ளித்திட்டம்
## பகுதி I,II

### பகுதி I

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1) | 3 | 2) | 1 | 3) | 3 | 4) | 1 | 5) | 2 |
| 6) | 2 | 7) | 1 | 8) | 3 | 9) | 5 | 10) | 3 |
| 11) | 1 | 12) | 4 | 13) | 2 | 14) | 4 | 15) | 5 |
| 16) | 1 | 17) | 5 | 18) | 4 | 19) | 2 | 20) | 1 |
| 21) | 3 | 22) | 3 | 23) | 2 | 24) | 3 | 25) | 1 |
| 26) | 4 | 27) | 2 | 28) | 5 | 29) | 3 | 30) | 4 |
| 31) | 2 | 32) | 4 | 33) | 5 | 34) | 3 | 35) | 1 |
| 36) | 4 | 37) | 1 | 38) | 4 | 39) | 1 | 40) | 3 |
| 41) | 5 | 42) | 4 | 43) | 1 | 44) | 3 | 45) | 2 |
| 46) | 3 | 47) | 2 | 48) | 3 | 49) | 1 | 50) | 1 |

### பகுதி II

01\. i. ஆகமம் என்பது ஆ + க + ம எனப் பிரிந்து வருவதாகும். இங்கே ஆ-பதி, ப-பசு, ம-பாசம் குறிக்கும் எனவே ஆகமம் என்பது முப்பொருள் பற்றிய விளக்கமென்பதாகும்.

ஆ- சிவஞானம், க-மல நாசம், ம- மோட்சசாதனம் எனவும் குறிப்பர். எனவே ஆகமம் என்பது கடவுளை அடைவதற்குரிய வழி. அத்துடன் ஆகமம் என்பதற்கு வருகை, போய்ச் சேருதல், தொன்று தொட்டு வரும் அறிவு என்ற விளக்கமும் உண்டு.

ii. ஆகமத்தின் உட் பிரிவுகளாவ

சரியா பாதம்
கிரியா பாதம்
யோக பாதம்
ஞான பாதம்

சரியா பாதம்

பிராயச்சித்த விதி, ஆலய அமைப்புவிதி, சுற்றுப்பிரகாரம், கோபுரம், பரிவார தெய்வங்களின் அமைப்பு, சிவலிங்க இலக்கணம் என்பவற்றை கூறுதல்.

கிரியா பாதம்

மந்திரம், உற்சவம், மூவகை வழிபாடுகளான நித்திய, நைமித்திய, காமிக கிரியைகள் பற்றிய விளக்கம், சிவசின்னங்ளை அணியும் முறை

யோகபாதம்

அட்டாங்க யோகங்கள், அட்டாமா சித்திகள், ஆறு வகை ஆதாரங்கள் பற்றிய விளக்கத்துடன் தியானம், செபம், அனுஷ்டானம் போன்ற விதிகளைக் கூறுதல்

ஞான பாதம்

முப்பொருள் உண்மைகளான பதி, பசு, பாசம் பற்றிய விளக்கம் குறிப்பாக கடவுளின் இயல்பு ஆன்மாவின் வீடு பேறு ஆணவ மலத்தின் தன்மை முதலியவற்றை விளக்குவதுடன் புவனங்களின் தோற்றம் பற்றிய விடயங்களை கூறுவது.

iii. ஆகமம் காட்டும் கிரியை நெறி கோவில் கிரியை, வீட்டுக் கிரியை என இரு நிலைப்படும் இதில் கோவில் கிரியை முக்கியமானது இவற்றை நான்கு பிரிவுகளில் குறிப்பிடலாம். அவையாவன

1. கர்ஷணம்
2. பிரதிஸ்டை
3. உற்சவம்
4. பிராயச்சித்தம்

கர்ஷணம்

கர்சணம் பற்றி குறிப்பிடும் போது ஆலய அமைவிடம் தெரிவு செய்தல் நிலத்தைப் பின்படுத்தல் ஆலயத்தை முறைபடி நிறுவுதல் பற்றிய விடயங்கள் அடங்கும்

பிரதிஸ்டை

பிரதிஸ்டை என்பது தெய்வ விக்கிரகத்தை முறைப்படி நிறுவுதல். இவை நூதன பிரதிஸ்டை, அனுதன பிரதிஸ்டை என இரு வகைப்படும். இந்நிலையில் பிரதிஸ்டை நான்கு வகைப்படும்.
அவையாவன,

1. ஆவர்த்தனம்
2. அனாவர்த்தனம்
3. புனராவர்த்தனம்
4. அந்தரிதம் என்பனவாகும்.

இக்கிரியை முறையே ஆலயத்தை புதிதாக அமைத்து செய்யப்படுவது. அழிந்த ஆலயத்தை மீண்டும் அமைத்து செய்யப்படுவது. ஆலயத்தில் இடம் பெறும் நிர்மாண வேலைகளின் அடிப்படையில் செய்யப்படுவது. கேடு நீக்கத்தின் பொருட்டு செய்யப்படுவது என்ற தன்மையில் அமையும்.

இப்பிரதிஸ்டைகள் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை இடம் பெற வேண்டும் என்பது விதி

உற்சவம்

ஆலயத்தில் இடம் பெறும் உற்சவங்கள் மூன்று வகைப்படும்

1. நித்தியம்
2. நைமித்தியம்
3. காமிகம்

எனப்படும். இவை பற்றிய விளக்கம்

பிராயாச்சித்தம்

ஆலயத்தில் நடைபெறும் பூசைகளின் போது ஏற்படும் என்ற நிவர்த்தியின் பொருட்டு செய்யப்படுவது

முக்ஷயம்

ஆகமம் காட்டும் கிரியை மரபில் கிரியைகள் அவற்றை ஆற்றும் விதிகள் பூசையின் அங்கங்கள் மந்திர உச்சாடனங்கள், நிவேதனப் பொருள்கள் என்பன முக்ஷய விடயங்களாகும்.

(3+5+12=20)

02) i. கி.மு 6ம் -10ம் நூற்றாண்டு
வேதத்தின் பிற்பகுதி

ii. உரையாடல்
கேள்வி பதில்
சம்பாசணை
உபகதை
விசாரணை
செய்முறை
பிரபஞ்சம் அனைத்திற்கும் அடிப்படையான சக்தி

iii. * பிரமம் - நிலையான உள்பொருள், சொற்களால் பிரமத்தை விளக்க முடியாது. எந்த சக்தியால் மனம் நினைக்கின்றதோ அதுவே பிரமம்

* பிரமத்திற்கு இரு நிலைகள்
* சப்பிரபஞ்ச நிலை - உலகத்தோடு கூடிய நிலை
* நிஷ்பிரபஞ்ச நிலை - பிரமம் உலகத்தை கடந்த நிலை

* பிரமத்தை விளங்கல் (ஆலம் விதை பிரஜாபதிக்கும் இந்திரனுக்கும் விரோசனுக்கும்)
* பிரமத்தை அறிய முயல்வது பயன் அற்ற செயல் (தன் தோளில் ஏற முனைவது)
* பிரமத்திலிருந்தே உலகமும் உலகத்திலுள்ள பொருள்களும் தோற்றம் பெற்றன. இதனை உவமைகள் மூலம் விளக்கல் (நெருப்பிலிருந்து தீப்பொறி தோன்றுவது போல, தலையில் முடி முளைப்பது போல)
* மகா வாக்கியங்களில் தத்துவமசி, அகம்பிரமாஸ்சி எல்லாம் பிரம்மம் என்பதை விளக்கல்.

ஆன்மா

மனித உடலுக்கு அடிப்படையான சக்தி எதுவோ அதுவே ஆன்மா
காண்பது கண் அல்ல கண்ணைக் கருவியாகக் கொண்டு எது பார்க்கின்றதோ அதுவே ஆன்மா
யமனுக்கும் நசிகேதுவுக்குமான உரையாடலில் வண்டியில் கட்டிய குதிரையைப் போன்று ஆன்மா சரீரத்தில் கட்டப்பட்டுள்ளது.
சனக்குமார முனிவருக்கும் நாதர முனிவருக்கும் இடையில் இடம் பெற்ற உரையாடல்
ஆன்மா ஐந்து கவசங்களால் கட்டப்பட்டுள்ளது. (தைத்திரிய உபநிடதம்)
கனவு நிலை, நனவு நிலை, உறக்க நிலை, துரிய நிலை, துரியாதீதம் என்ற நிலைகள்
துன்பத்திலிருந்து நீக்கிய நிலையே முத்தி
விதேக முத்தி, சீவன் முத்தி
முத்திக்குரிய வழி வைராக்கியம் (பிரமச்சாரியம், இல்லறம், வானப்பிரஸ்தம், சன்னியாசம்) ஞானம் (சிவராணம், மனனம், நித்தியாசனம்)

iv. உபநிடதங்கள் ஒரே காலத்தில் தோற்றம் பெறவில்லை பல்வேறு காலத்தில் பல்வேறு முனிவர்களினால் தோற்றம் பெற்றன.
உள்பொருள் ஒன்றா? பலவா? சித்தா? சடமா?
உபநிடதங்களில் காணப்பட்ட சிக்கல்களை தீர்க்க பாதராயணாரினால் பிரம்ம சூத்திரம் தோற்றுவிக்கப் பெற்றமை
பிரம்ம சூத்திரம் தெளிவுக்கு பதிலாக குழப்பத்தையே உண்டாக்கியதும் பாடல்களாகவும் சுருக்கமாவும் அமைந்தமை.
பிரமம் சூத்திரத்திக்கு பல விளக்க உரை எழுதியமை
வேதாந்தம் (அத்வைதம், விசிட்டாத்தைவம், துவைதம்)
வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்
ஐவகை தரிசனங்கள் (சாங்கியம், யோகம்)
சமய இலக்கியங்கள் (பகவத்கீதை)
நாடகங்கள், நூல்கள் போன்றன தோற்றம் பெற்றன

(2+3+8+7=20)

3) i. திருமுறை என்பது திரு + முறை எனப் பிரிந்து பொருள் தரும். திரு - தெய்வம் ; முறை - ஒழுங்கு ஆகவே தெய்வத் தன்மை பொருந்திய அருட்பாடலின் தொகுப்பு.

ii. 1- 3 = தேவாரம் - சம்பந்தர்
4- 6 = தேவாரம் - அப்பர்
7 = தேவாரம் - சுந்தரர்

8 = திருவாசகம் - மாணிக்கவாசகர்
திருக்கோவையார்
9 = திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, சேந்தனார்,திருமாளிகைத்தேவர் முதலிய 9 பேர்
10 - திருமந்திரம் - திருமூலர்
11 - 40 பிரபந்தங்கள் - சேரமான் , நக்கீரர் முதலிய 12 பேர்
12 - பெரியபுராணம் - சேக்கிழார்

iii. * வேதங்களிலும் ஆகமங்களிலும் விளக்கப்பட்ட ஞான பாத கருத்துக்களை விளக்குபவை
* சைவ சித்தாந்த அடிப்படைக் கோட்பாடுகள் ஆன பதி.பசு, பாசம் பற்றிய அடிப்படைகளைக் கூறுபவை
* கடவுளின் இயல்பு, குணங்கள் அருட் செயல்கள் திரு மேனித்தத்துவம் மகேஸ்வர வடிவம் பற்றிய விளக்கம்
* ஆன்மாவின் வகை, அவற்றின் நித்திய தன்மை, இறைத் தொடர்பு முதலியவற்றின் விளக்கம்
* ஆன்மாவின் பிறவி, கன்மங்கள், கன்ம நீக்கத்துக்கான சாதனங்கள், பாசத் தொடர்பு முதலியவற்றை விளக்கல்
* மூவகை கன்மங்களான சஞ்சிதம்,பிராரத்துவம், ஆகாமியம் பற்றிய கோட்பாடுகள்
* மூவகை மலங்களானஆவணம், கன்மம், மாயை பற்றிய விளக்கங்கள்; குறிப்பாக ஆணவ மலத்தின் தன்மை பற்றியும் அதிலிருந்து விடுதலை பெறுவதற்கான வழிகள் பற்றியும் திருவாசகத்தில் வரும் கருத்துக்கள்
* முப்பொருள் பற்றிய திருமந்திரக் கருத்துக்கள் பதி இலக்கணம், அணைந்தோர் தன்மை திருமந்திரக் கருத்துக்கள்.
* ஆன்மீக விடுதலைக்குரிய சைவ சாதனம் பற்றிய விளக்கம் சிவதீட்ஷை, சைவ நாற்பாதங்கள், சிவ சின்னங்கள், மூவகை வழிபாடு, சிவாலயதரிசனம், விரதம் பற்றிய விளக்கம்.

* குறிப்பு – மேற்படி விடயங்களை திருமுறைப் பாடல்களை குறிப்பிட்டு விளக்குதல் வேண்டும்.
(2+6+12=20)

04) i. மனம் பொறிவழிபோகாது நிற்றற் பொருட்டு உணவைவிடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் கடவுளை மெய்யன்போடு வழிபடல் விரதம் ஆகும்.

ii.

| விரதம் | பண்டிகை |
|---|---|
| 1) ஆன்மீக நோக்கிலான மனவமைதியை வேண்டுவது (புலனடக்கம்) | உலகியல் சார்ந்த குதூகலத்தை/ மனமகிழ்ச்சிக்காக கொண்டாடப்படுவது |
| 2) உணவை விடுதல் அல்லது சுருக்குதல் | அறுவகைச் சுவைதரும் உணவையும் விரும்பியபடி உண்ணுதல் |
| 3) தனித்திருத்தல் | கூடி மகிழ்தல் |
| 4) தோய்த்துலர்ந்த எளிமையான ஆடைகளை அணிதல் | புத்தாடைகளை அணிதல் |
| 5) இறையருள் வேண்டுவது | உலகியல் இன்பத்தை வேண்டுவது |

iii. சித்திரைப் பௌர்ணமி, ஆடியமாவாசை

iv. 1) தை மாத முதல் நாளில் கொண்டாடப்படுவது
2) சூரியனுக்கு நன்றி செலுத்தும் நாள்
3) சூரியன் தனு இராசியில் இருந்து மகரராசிக்கு செல்லும் தினத்தில் கொண்டாடப்படுவது
4) உழவர் திருநாள், அறுவடைத்திருநாள், சூரியப் பொங்கல், எனப்பலவாறு கூறப்படுகிறது.
5) இந்தியா, இலங்கை மட்டுமல்ல புலம் பெயர் நாடுகளிலும் கொண்டாடப்படுகிறது
6) அதிகாலையில் கோலமிட்டு விளக்கேற்றி, புதுப்பானையில் புத்தரிசி இட்டு பொங்குவர்
(2+5+2+11=20)

v. அறிமுகம்

கி.பி 6ம் -9ம் இடைப்பட்ட காலமாக விளங்கும் பல்லவர் காலத்தில் விஷ்ணு முழு முதலாகக் கொண்டு வழிபடும் நெறி வைணவம் வைணவ நெறி வளர்ச்சியில் வைணவ புராணங்கள் ஆழ்வார்களின் பாடல்கள் முதன்மை பெறுகின்றன.

பெரியாழ்வாரின் வாழ்க்கை சுருக்கம்
பெற்றோர் - முகுத்தப்பட்டர், பதுமவல்லி
காலம் - கி.பி 9ஆம் நூற்றாண்டு
இயற்பெயர் - விஷ்ணுசித்தர்
பிறந்த இடம் - வில்லிபுத்தூர்

திருமால் மீது ஆழ்ந்த பத்தி கொண்டதால் பெரியாழ்வார் என்ற பெயரைப் பெற்றார்.
திருமாலே பரம் பொருள் என நிறுவி பட்டர்பிரான் என்ற பட்டத்தைப் பெற்றார்.
அரசவைப் பட்டார குருவாக விளங்கனார்.
வட பெருங்கோயிலைப் புதுப்பித்து கும்பாபிஷேகம் செய்தார்

வைணவ நெறியின் வளர்ச்சியில் பங்களிப்பு
வைணவ சமயம் சார்ந்த பாடல்களை பாடியமை
1) பெரியாழ்வார் பெரிய திருமொழி
2) திருப்பல்லாண்டு

வைணவ கோவில் பற்றி பாடியமை
1) ஸ்ரீவில்லிபுத்தூர்
2) திருவரங்கம்
3) திருவேங்கடம்

இவ்வாறு 13 கோவில்களை பாடியுள்ளார்.

சரணாகதி மார்க்கத்தில் நின்று பாடியமை
"அற்றேன் வந்தடைந்தேன்
அடியேனை ஆட்கொண்டருளே"

இவ்வுலக இன்பங்கள் அனைத்தும் நாராயணன் அருளே என்று உறுதியுடன் பல்லாண்டு பாடியமை.
விஷ்ணுவின் அனுக்கிரகத்தில் அற்புதம் நடத்தியமை
வாத்சல்ய பாவனையில் விஷ்ணுவைப் போற்றிமை
இதன் பின் எழுந்த பிள்ளை தமிழ் இலக்கியத்துக்கு முன்னோடியாக இருந்தமை
இறைவன் மீது பத்தி கொண்டால் அவனிடம் எதனையும் வேண்டிப் பெறலாம்.
உ-ம் : திருப்பல்லாண்டு
இராமானுசர் விசிட்டாத்வைத் தத்துவத்தை உருவாக்க இவரின் பாடல்கள் முன்னோடியாக அமைந்தன.

(20 புள்ளிகள்)

06) அறிமுகம்

i. காவடி நாட்டுப்புறக் கலைவடிவங்களில் முக்கியமானது இது ஆன்மீகத்துடன் கலையுணர்வையும் வெளிப்படுத்துவது

ii. காவடி என்பதன் பொருள் காவு, தடி எனப்படும் தோற்சுமை என்பது அதன் விளக்கம்

iii. காவடியின் தோற்றம் பற்றிக் குறிப்பிடுதல் வேண்டும் காவடியின் வகைகள்.

1- பாற் காவடி

2- பன்னீர் காவடி

3- புஸ்பக்காவடி

4- பறவைக்காவடி

iv. காவடியின் அமைப்பு முறைகளைக் குறிப்பிடுதல் காவடி அமைப்பதற்குத் தேவையான பொருட்கள்
v. காவடியின் வகைகளும் ஆடும் முறைகளும் இடத்திற்கு இடம் மாறுபடுபவை.

vi. காவடி உணர்த்தும் பின்வரும் விடயங்கள் விளக்கப்படல் வேண்டும்.

| | |
|---|---|
| 1- சமயம் | 4 கலையுணர்வு |
| 2 தத்துவம் | 5- ஆன்மீகம் |
| 3 பக்தி | 6- சமுதாய முக்கியத்துவம் |

vii. முடிவுரை தொகுத்துக் கூறுதல் வேண்டும்.

**(20 புள்ளிகள்)**

07) i. லிங்கோற்பவர், தக்ஷிணாமூர்த்தம், சோமஸ்கந்தம், நடராஜர் முதலானவை

ii. சிவ விக்கிரக கலை மரபில் குறிப்பிடத்தக்கதொன்றாகும்

இறைவன் குரு வடிவமாக எழுந்தருளிய வடிவமே இவ் வடிவமாகும்.

யோக தக்ஷிணாமூர்த்தி
ஞான தக்ஷிணாமூர்த்தி
வியாக்கியான தக்ஷிணாமூர்த்தி
வீணாதர தக்ஷிணாமூர்த்தி

எனும் நான்கு வடிவங்கள்.

வியாக்கியான மூர்த்தியே சிவாலயங்களில் கூடுதலாக நிறுவப்பட்டுள்ளது.

வியாக்கியான தக்ஷிணாமூர்த்தி கல்லால் மர நிழலின் கீழ் புலித் தோலால் மூடப்பட்ட இருக்கையில் மீது அமர்ந்த பாவனையில் தோற்றம் பெறும்.

பத்மாசனம் வலது கால் கீழே தொங்க இடது கால் மடிந்து தொடையின் மீது பொருந்தும் மூன்று கண்கள் நான்கு கரங்கள் முன் வலது கை ஞானமுத்திரை காட்டி நிற்கும்.

சின்முத்திரை பதி, பசு, பாசம், தொடர்

இடது பக்க முன் கை வாதகரமாக நீட்டியவாறு தொங்க விடப்பட்டிருக்கும் பின் பக்க வலது கை அக்ஷ மாலையையும் இடது கை அக்கினியையோ நாகபாம்பையோ தாங்கி நிற்கும் உடல் நேரானது தலை சடாபாரமாக ஞானாசிரிய வடிவத்தில் தோன்றும் பிறை, கங்கை தலையில் விளங்கும்.

iii. சச்சிதானந்த நிலை - இறைவனது ஞானவடிவம்

ஞான அறிவுரை செய்யும் குரு

யோகம், கூத்து, இசை, முதலிய கலைகளைப் பயில்வோர் தக்ஷ்ணா மூர்த்தியை வழிபடுவர். சைவசித்தாந்த பொருள், - மரபாகிய பதி, பசு, பாசம் தத்துவ வெளிப்பாடு, ஞான குருவடிவம், சந்தான குரவர் மரபிற் மூல வடிவம்.

iv. ஆலயத்தின் கருவறையின் தெற்குப்பக்கத்து வெளிச் சுவரில் அமைந்த மாடத்தில் தெற்கு முகமாக விளங்கும் படி நிறுவப்படுதல் மரபாகும்.

(2+7+8+3=20)

08) i. பெரிய புராணம்

தமிழ் மொழிப் புராணங்களில் ஒன்று

சேக்கிழார் சுவாமிகளால் அருளப்பட்டது

கி.பி 12ஆம் நூற்றாண்டு

63 நாயன்மார்களதும் 9 தொகை அடியார்களதும் வரலாற்றை எடுத்துக் கூறுகின்றது.

4286 பாடல்களை கொண்டது

13 சருக்கங்கள்

02 கண்டங்கள்

இறைவனால் உலகலாம் என்று அடியெடுத்து கொடுக்கப்பட்டது

சுந்தரரை பாட்டுடைத்தலைவராக கொண்டு

திருத்தொண்டர் தொகை முதல் திருத் தொண்டர் திருவந்தாதி வழி நூலாகவும் கொண்ட பாடப்பட்டது.

இதனை மாக்கதை /திருத்தொண்டர் புராணம் / நாயனார் சரிதம் /சாந்தி புராணம்/என்றும் அழைப்பர்.

நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றை மிகவும் சிறப்பாக எழுத்துக் கூறுகின்றது.

தத்துவங்கள், சமயக் கருததுக்கள், வழிபாட்டு முறைகள் போன்ற பல கருத்துக்கள் நிறைந்து காணப்படுகின்றது.

சமய சமூக கருத்துக்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்லும் ஊடகமாக விளங்குகின்றது.

ii. திருஞானசம்பந்தர்

நாயன்மார்களில் ஒருவர்

வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்

காலம் - கி.பி 7ஆம் நூற்றாண்டு

தாய் - பகவதியார்

தந்தை சிவபாதவிருதயர்

இளமைக்காலம்

அற்புதங்கள்

திருத்தல யாத்திரை

கிரியை நெறி கடைப்பிடித்தமை

சாமீப முத்தி

iii. அக்கினி

மண்ணுக்குரிய முதன்மைத் தெய்வம்

இருக்கு வேத பாடல் 200

இவர் ஒரு புரோகிதக் கடவுள்

சுவாலை விட்டு எரியும் போது நான்கு பக்கமும் முகம் காணப்படுகிறது

பழுப்பு நிற தாடி, பொன் நிறமான பற்கள்

பிறந்தவுடன் ஆவின் கன்று போல் காட்சி தருவான்

நீரில் அன்னப்பட்சியாகவும் வானத்தில் கழுகாகவும் ஏவி விட்டால் கிழித்துச் செல்லும் குதிரை போலவும் இருப்பான்

இவருக்கு விருப்பமான உணவு ஆகுதிப் பொருள் (பால், தயிர், நெய், சமித்துக்கள்)

நாம் கொடுக்கின்ற உணவுகளை தனது நாக்கின் மூலம் கொண்டு செல்லுவார்.

அக்கினியின் மனைவி ஆப்னாயி என குறிப்பிடப்படுகின்றது.

iv. தேவாரம்

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார் என்போரால் பாடப்பட்டது.

முதல் ஏழு திருமுறைகளும் தேவாரம் எனப்படும். இது "அடங்கன் முறை" எனக் கூறப்படுவதும் உண்டு.

தேவனுக்கச் சூட்டப்படும் பாமாலை எனப்படுகிறது.

இறைவனின் பெருமை, சிறப்பு, தோற்றப்பொலிவு, ஒன்றாய், வேறாய், உடனாய்யிருக்கும் தன்மை, முக்தி, முக்திக்கான வழிகள்

தமிழ்மொழிச் சிறப்பு, பிரமாண நூல்களின் சிறப்பு, தலச்சிறப்பு பிரதேச உணவு, ஒன்றே குலம் எனல்

சைவசமயத்தை மக்கள் மயமாக்க உதவியது. பஞ்சதோத்திரங்களில் முதலில் ஓதப்படுவது. சிதம்பரத்தில் கண்டுபிடிக்கப்பட்டு நம்பியாண்டார் நம்பியால் தொகுக்கப்பட்டது. இதனையே திருச்சிற்றம்பலம் எனப் பாடுவதற்கு முன்னும் பின்னும் கூறப்படுகிறது. இதனை திருமுறை கண்ட புராணம் கூறுகிறது.

v. கோபுரம்

"கோபர தரிசனம் கோடி புண்ணியம்" என்ற பாடல் இதன் சிறப்பை உணர்த்துகின்றது.

கோபுரத்தை ஸ்தூல லிங்கம் எனவும் அழைப்பர்

ஆலயத்துக்கு செல்லும் போது தூரவே தெரிவது கோபுரம்

கோபுரம் உயர்ந்து காணப்படுவது ஆன்மாவும் நல்ல சிந்தனைகளை கொண்டிருக்க வேண்டும் என்பதால் ஆகும்.

இறைவன் பரந்த வெளியில் உறைகின்ற இடம்

கோபுரத்தில் எல்லா உயிரினங்களும் உறைந்திருக்கும்

மூல விக்கிரமாக வீற்றிருக்கும் இறைவனின் வடிவங்கள், திருவிளையாடல்கள், வீரச் செயல்கள் கோபுரத்தில் சிற்பங்களாக செதுக்கப்பட்டிருக்கும்.

திருமூலர் மனிதனின் பாதத்துக்கு கோபுரத்தை ஒப்பிட்டுள்ளார் (உள்ளம் பெரும் கோவில்....)

vi. பகவத்கீதை

18 அத்தியாயம் 700 சுலோகம்

மகாபாரதத்தின் பீஷ்ம பருவத்தில் அமைந்துள்ளது. பாரதத்தின் இதயம் என சிறப்பிக்கப்படுகிறது.

18 அத்தியாயங்களில் 18 போகங்களைக் கூறுகின்றது.

பிரஸ்தான திரயங்களில் உபதேச முறையில் அமைந்துள்ளது.

வைணவ பிரமாண நூல்களில் ஒன்று; திருமாலின் சிறப்புக்கள், அவதார மகிமை போன்றவற்றை கூறுகிறது.

ஏக காலத்தில் ஸ்ருதியாகவும் ஸ்மிருதியாகவும் விளங்குவது

அறநூல்; பக்தி நூல், யோக நூல், ஞான நூல் எனப்பலவாறு சிறப்பிக்கப்படுவது.

இதற்கு சங்கரர், இராமனுஜர், மத்துவர் போன்றோர் இதற்கு உரையெழுதிச் சிறப்பித்துள்ளனர்.

(5×4=20புள்ளி)

**வடமாகாணக் கல்வித் திணைக்களம்**

**கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர்தர)ப் பரீட்சை - 2011**

# கிறிஸ்தவ நாகரிகம் | 49 | T | I |

**மாதிரி வினாத்தாள்-1**

**தரம் -13** **பகுதி I** **இரண்டு மணித்தியாலம்**

கவனிக்குக.

எல்லா வினாக்களுக்கும் விடை தருக
பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக

1. திருச்சபையில் தூய ஆவியின்வருகை பழையஏற்பாட்டில் குறிப்பிட்ட ஒரு நிகழ்வுடன் தொடர்புடையதாக அமைந்துள்ளது
   i. உலகப்படைப்பு ii. பெருவெள்ளம் iii. பாபேல்கோபுரம்
   iv. காயீன்ஆபேல் v. சீனாய் உடன்படிக்கை

2. எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட்ட இஸ்ராயேலர் 40 ஆண்டுகள் பாலைவனத்தில் அலைந்துதிரியக்காரணம்
   i. இஸ்ராயேலர் அஞ்ஞான தெய்வங்களை வழிபட்டமை
   ii. இஸ்ராயேலர் பத்துக்கட்டளைகளை மீறியமை
   iii. மோசேயின் வழிகாட்டலுக்கு இஸ்ராயேலர் கீழ்ப்படிய மறுத்தமை
   iv. இறைவன் தாம் ஒரே கடவுள் என்பதை அனுபவ வாயிலாக ஏற்றுக்கொள்வதற்கு
   v. வளமான தேசத்தை பெற்றுக் கொள்வதற்கு

3. சொருபங்களை வழிபடுவது பாவம் , கடவுள் மனித அவதாரம் எடுக்கவில்லை , திருவருட்சாதனங்கள் இல்லை போன்ற பல தப்பறையான கொள்கைகளைக் கொண்டுள்ள பேதகம்
   i. பெலாஜியப் பேதகம் ii. நோஸ்ரிக்க பேதகம் iii. மனிக்கேயப் பேதகம்
   iv. அல்பியன்சிப் பேதகம் v. நெஸ்தோரியப்பேதகம்

4. பெந்தக்கோஸ்து விழாவில் யோவேலின் இறைவாக்காக அமையாதது
   i. இறுதிநாளில் எல்லோர் மேலும் ஆவியைப்பொழிவேன்
   ii. அப்பம் பிடுவதிலும் இறை வேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள்
   iii. உங்கள் புதல்வர் புதல்வியர் இறைவாக்குரைப்பர்
   iv. முதியோர் கனவுகள் காண்பர்
   v. இளைஞர் காட்சிகளைக் காண்பர்

5. பேதுரு யோப்பாவில் செய்த புதுமை என்ன?
   i. பிறவி முடவனை குணமாக்கியது ii. அசுத்த ஆவியை விரட்டியது
   iii. பிறவிக்குருடனை குணமாக்கியது iv. தொழுநோயாளியை குணப்படுத்தியது
   v. தபீத்தா என்ற பெண்ணை சாவிலிருந்து உயிர்த்தெழச் செய்தது

6. திருச்சபையில் சேர்ந்த முதல் புற இனத்தவர்
   i. கொர்னேலியு ii. லிதியா iii. செர்கியு பவுலு
   iv. எத்தியோப்பிய அண்ணகன் v. பர்ணபா

7. திருச்சபையின் வரலாற்றில் முதல் மூன்று நூற்றாண்டுகளும்
   i. மறைசாட்சிகளின் யுகம் ii. வீரவரலாற்றுக்காலம்
   iii. சுதந்திரகாலம் iv. யூத கலாபனைக் காலம்
   v. துறவற யுகம்

8. தன்னை ஆண்டவராகப் பிரகடனம் செய்து கிறிஸ்தவர்களைத் துன்புறுத்திய பேரரசர் யார்?
i. நீரோ ii. திராஜன் iii. மார்கஸ் அவுறேலியன்
iv. தொமிசியன் v. செப்திமுஸ் செவரஸ்

9. சகிப்புத் தன்மையின் சாசனத்தைப் பிறப்பித்தவர்
i. கொண்ஸான்ந்தீன் குளொர் ii. மாக்ஸிமி iii. கல்லேரியு
iv. மாக்சென்சியுஸ் v. தியாக்குளேசியன்

10. வார்த்தை கடவுளிலும் கீழானவர் என்ற தப்பான கருத்திற்கு பொறுப்பானவர்
i. லூசியன் ii. எயுசேபியுஸ் iii. ஓரிஜன்
iv. இயுத்திக்கஸ் v. ஆரியுஸ்

A. சத்தியத்தின் பாதுகாவலர்,
A. வேத பாரகர்
C. டிடாக்கே
D. கிறிஸ்தவ மறைபரப்பாளர்கள்
E. புனித இஞ்ஞாசியாரின் கடிதங்கள்
F. பன்னிரு அப்போஸ்தவர்கள்

11. விசுவாச சத்தியங்களைப் பாதுகாத்தவர்களும் பேதகர்களை மனந்திருப்பியவர்களும்
i. A யும் D யும் ii. B யும் D யும் iii. B யும் F யும்
iv. A யும் B யும் v. Aயும் Eயம்

12. $6^{ம்}$ $7^{ம்}$ நூற்றாண்டுகளில் திருமறையைப் பாதுகாப்பதற்காகப் போராடியவர்கள்
i. A ii. B iii. C iv. D v. F

13. பிக்கு இனத்தை மனந்திருப்பியவர் ஸ்கொட்லாத்தின் அப்போஸ்தலர் எனவும் அழைக்கப்படுவர்
i. புனித அய்டன் ii. புனித பொனிபாஸ் iii. புனித கொலம்பா
iv. புனித ஆன்ஸ்கா v. புனித இஞ்ஞாசியர்

14. 5ம் நூற்றாண்டில் முழுக்கத்தோலிக்க நாடு எனவும் திருச்சபையின் மூத்தமகள் எனவும் போற்றப்பட்ட நாடு
i. பிரான்ஸ் ii. ஜேர்மனி iii. போலந்து
iv. நெதர்லாந்து v. கிறின்லாந்து

15. உரோமைப் பேரரசுக்கு வெளியே வாழ்ந்த இனத்தினர்கள் அக்காலத்தில் பொதுவாக ---------------- என அழைக்கப்பட்டனர்
i. லம்பாடியவர் ii. பிராங்கர் iii. எஸீனியர்
iv. மிலேச்சர் v. தீவிரவாதிகள்

16. கிறிஸ்தவர்களின் புனிதத் தலங்களை மீட்க ஒரு திருப்போர் தேவையென வலியுறுத்திய திருத்தந்தை
i. $2^{வது}$ அர்பன் ii. $8^{வது}$ கிரகோரியார் iii. $2^{வது}$ கிரகோரியார்
iv. $6^{ம்}$ சின்னப்பர் v. $13^{ம்}$ சிங்கராயர்

17. மேற்கத்தைய நாடுகளில் துறவற வாழ்வுக்கான ஒழுங்குகளை எழுதிக் கொடுத்தவர்
i. புனித ஆசீர்வாதப்பர் ii. புனித பக்கோமியுஸ் iii. கிரகோரி நாசியன்ஸ்
iv. புனித கிலேரியன் v. புனித நிஸ்ஸா கிரகோரி

18. துறவிகளின் பிதாப்பிதா என்றும் கிறிஸ்தவ துறவற வாழ்வின் ஸ்தாபகர் என்றும் கருதப்படுவர்
i. வனத்து அந்தோனியார் ii. தேப்ஸ் சின்னப்பர் iii. பக்கோமியஸ்
iv. புனித கஸியன் v. புனித ஆசீர்வாதப்பர்

19. ஜெருசலேமில் யூத கலாபனை ஒன்று உருவாவதற்கு காரணமாகத் திகழ்ந்தது
   i. கிறிஸ்தவர்கள் யூதமதத்தை அழித்து விடுவார்களோ என்ற பயம்
   ii. பரிசுத்தஆவி அப்போஸ்தலர் மேல் பொழியப்பட்டதால்
   iii. ஸ்தேவான் கைதுசெய்யப்பட்டதால்
   iv. ஜெருசலேம் அழகுவாயிலில் பேதுரு புதுமை செய்தமையால்
   v. ஸ்தேவான் கல்லால் எறிந்து கொலை செய்யப்பட்டமையால்

20. "பவுல் உரோமைக்கு பயணம்" எனும் கூற்றுடன் தொடர்புபட்ட விடயம்
   A. பவுல் உரோமைக் குடிமகன்
   B. பவுல் ஜெருசலேம் ஆலயத்தில் கைதுசெய்யப்பட்டதால்
   C. உரோமையில் சாட்சி கூற சந்தர்ப்பம்
   D. தன்னை உரோமைக்கு அனுப்பும்படி வேண்டியதால்
   i. A யும் C யும் சரி    ii. B யும் C யும் சரி
   iii. A யும் D யும் சரி    iv. C யும் D யும் சரி
   v. A யும் B யும் சரி

21. மிலான் சாசனத்திற்கு எதிராக செயற்பட்ட மன்னன்
   i. லிசினியு    ii. வலேரியன்    iii. மக்சிமினின்
   iv. தியோகனேசியன்    v. அவுரேலியன்

22. ஆரியபேதகத்தை எதிர்த்து திருச்சபையின் பாரம்பரியக்கொளகைக்காக வாதாடியவர்
   i. ஆயர் சிறில்    ii. தியோடோசியுஸ்    iii. புனிதயுஸ்தீன்
   iv. புனிதஅத்தனாசியார்    v. புனித ரற்சியயன்

23. வட தேச அப்போஸ்தலர் என அழைக்கப்படுபவர்
   i. றெமிஜியுஸ் ஆண்டகை    ii. புனித பத்திரிசியார்    iii. புனித ஆன்ஸ்கா
   iv. புனித ஆசீர் வாதப்பர்    v. புனித பொனிபஸ்

| | | |
|---|---|---|
| A பிரரான்சிஸ்கன் | E பீற்றர்வால்டொ | I சீரழிந்த வீட்டை கட்டுவாய் |
| B டொமனிக்கன் | F பிரான்சிஸ்அசிசியார் | J அல்பியென்சியபேதகத்திற்கு |
| C வல்தேசியன் | G புனித சுவாமிநாதர் | K புனிதர்களது சொருப வணக்க எதிர்ப்பு |
| D சிஸ்ரேஷியன் | H றோபட் | L துறவற சபையின் சட்டங்களை பிழையற முன்னெடுத்துச் செல்லல் |

மேலுள்ள அட்டவனையை பயன்படுத்தி கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக

24. இரவலர் சபைகளாக தோற்றம் பெற்ற சபைகள்
   i. ABD    ii. BCD    iii. ABC    iv. ADC    v. BDC

25. புனித ஆசீர்வாதப்பர் சபையின் சீர்திருத்தத்தை முன்னிட்டு உருவாக்கப்பட்ட சபையுடன் தொடர்புடையவை
   i. AFK    ii. BGL    iii. CEJ    iv. DHL    v. CGI

26. 12ம் 13ம் நூற்றண்டில ஆன்மீக மறுமலர்ச்சியை ஏற்படுத்த முதன்முதலாக தோற்றம் பெற்ற சபையும் அதனுடன் தொடர்புடையவையும்
   i. AFL    ii. BGJ    iii. CEK    iv. DHL    v. AFJ

27. நீர்போய் உமது உடமைகளை ஏழைகளுக்கு கொடும் என்ற வார்த்தையுடன் தொடர்புபட்ட நிறுவுனரும் சபையும்
   i. DHL    ii. CEI    iii. BGJ    iv. CGL    v. CEK

28. அரசரின் கனவுகளை விளக்கும் புதிய தானியேலாக தம்மை வெளிப்படுத்தியவர்
   i. மாட்டின் லூதர்    ii. யோன் கல்வின்    iii. சுவிங்கிளின்
   iv. தோமஸ் முன்சர்    v. 8ம் ஹென்றி அரசன்

29. திரிதெந்தின் பொதுச் சங்கத்தின் தீர்மானமாக அமையாதது
i. விவிலியம், பாரம்பரியம் ஆகிய இரண்டும் திருமறை உண்மைகளின் ஊற்று
ii. மனிதரின் மீட்பு நம்பிக்கையினால் மட்டுமல்ல எதிர்நோக்கு அன்பினாலும் இடம் பெறுகிறது.
iii. திருச்சபையின் தலைவரான திருத்தந்தை தவறாவரம் பெற்றவர்
iv. திருச்சபையில் தரப்படுத்தலான இயல்பு அகற்றப்படுகிறது
v. திருவருட்சாதனங்கள் கிறிஸ்துவால் ஏற்படுத்தப்படுகிறது

30. கிறிஸ்தவ மதம் முதன்முதலில் தோன்றிய இடமாக கருதப்படுவது
i. பபிலோனியா ii. பாலஸ்தீனா iii. ஜெருசலேம்
iv. அந்தியோக்கியா v. எகிப்து

31. கிழக்கு ஆசியாவில் அதிக கத்தோலிக்கரை கொண்ட நாடு
i. சீனா ii. யப்பான் iii. பிலிப்பின்ஸ்
iv. கொரியா v. இந்தோனேசியா

32. இந்தியாவில் கத்தோலிக்க ஆயர்களின் தேசிய மன்றம் உருவாக்கப்பட்ட ஆண்டு
i. 1944 ii. 1972 iii. 1994 iv. 1954 v. 1494

33. அங்கிலிக்கன் திருச்சபை யாரால் ஆரம்பிக்கப்பட்டது?
i. லூத்தரால் ii. வெஸ்லியால் iii. 8[வது] கென்றியால்
iv. வில்லியம் ஹரியாஸ் v. தோமஸ் முன்சரால

34. இலங்கை மக்கள் கத்தோலிக்கத்தை பின்பற்றியது எந்த அந்நியருடைய காலத்தில்?
i. ஆங்கிலேயர் காலத்தில் ii. ஒல்லாந்தர் காலத்தில் iii. போத்துக்கேயர் காலத்தில்
iv. பாரசீகர் காலத்தில் v. பிரான்சியர் காலத்தில்

35. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரும்போது இலங்கையில் நிலவிய ஆட்சிப்பிரிவுகள் எத்தனை?
i. 09 ii. 03 iii. 04 iv. 07 v. 06

36. ஜெருசலேம் ஆலயத்தை அழகுற அமைத்து யூதரின் சடங்குகளை புனரமைத்த அரசன் யார்?
i. சவுல் ii. தாவிது iii. சாலமோன்
iv. எரோபோவாம் v. சைரஸ்

கூற்றுக்கள்
